நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
மார்ச் 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
**கொளத்தூர் மணி**
**விடுதலை இராசேந்திரன்**

வினியோகப் பொறுப்பு
**சூலூர் பன்னீர்செல்வம்**

இதழ் வடிவமைப்பு
**வெல்கின் கணினி**
**மா. தேன்ராஜ்**

அலுவலக முகவரி
**95, டாக்டர் நடேசன் சாலை**
**அம்பேத்கர் பாலம்**
**மயிலாப்பூர், சென்னை 600 004**
**தொலைபேசி எண்:**
**044-24980745**

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**இரா. உமாபதி**
**72992 30363**

# அவமதிப்புகளைப் புறந்தள்ளிய ‘தொண்டறம்’



அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையார் நூற்றாண்டு இது. அவமானம் – அவமதிப்புகளைச் சுமந்து கொண்டு – பெரியாரின் ஆயுள் நீட்டிப்புக்கு தன்னையே ஒப்படைத்துக் கொண்டவர். ‘உங்கள் உடலைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எனக்கு பலரும் யோசனை கூறுகிறார்கள். ஆனால் எனக்கு உதவிட நம்பிக்கையாக செயல்பட ஒருவர்கூட வரவில்லையே’ என்று பெரியார் கேட்டபோது, ‘இதோ நான் வருகிறேன்’ என்று ஓடோடி வந்தவர்.

தமிழகத்தின் பொது வாழ்க்கையிலேயே மணியம்மையார்–பெரியார் திருமண ஏற்பாடுபோல் கடும் புயலை உருவாக்கிய வேறு ஒரு நிகழ்வு இருந்திருக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சி உருவாவதற்கே இத்திருமணமே காரணமாக முன் வைக்கப்பட்டது. அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த பெரியாரின் நெருக்க நண்பரான இராஜகோபாலாச்சாரி என்ற பார்ப்பனர் அறிவுரைப்படியே பெரியார் இந்த ஏற்பாட்டைச் செய்தார் என்றும் குற்றம்சாட்டப்பட்டது. வழக்கம்போல் பெரியார் இந்த அவதூறுகளை புறந்தள்ளினார். குற்றச்சாட்டுகள் வரும்போதெல்லாம் அதை உடைத்து, தனது நெஞ்சைத் திறந்துக் காட்டி தன்னை நேர்மையாளராக நிரூபித்துக் கொள்ளும் முயற்சிகளில் என்றைக்குமே ஈடுபட்டவரல்ல பெரியார். காரணம், இந்த சமூகம் எத்தகைய பண்புகளை சுமந்து நிற்கிறது என்பதில் பெரியாருக்குத் தெளிவான பார்வை இருந்தது. அதனால்தான் இத்திருமணம் வேண்டாம் என்று இராஜகோபாச்சாரியார் தனக்கு தனிப்பட்ட முறையில் ‘இரகசியம்’ என்ற குறிப்போடு எழுதிய கடிதத்தை பெரியார் தனது மரணம் வரை வெளிப்படுத்தாமலே இருந்தார். அன்னை மணியம்மையாரும் தன் மீதான அவதூறுகளுக்கு பதிலடி தர, இந்தக் கடிதத்தை அவரும் வெளிப்படுத்தவில்லை. எழுத்துகளுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்ட ‘புரிதலின் ஆழம்’ அவர்கள் இருவருக்கிடையே இருந்தது.

உடலில் ஒரு ‘குண்டுமணி’ நகையும் இல்லாமல் அலங்காரப் பூச்சு இல்லாமல் வெறும் கைத்தறி சேலையுடன் எளிமையின் எல்லைக்கே சென்று வாழ்ந்துக் காட்டிய புரட்சிப் பெண். பெரியார் வாழ்ந்த காலத்தில் மணியம்மையார் தன்னை முன்னிலைப்படுத்தியதே இல்லை. பெரியார் நலன் பேணும் இலட்சியம் ஒன்றே அவரது வாழ்க்கை. ஆனால் பெரியார் முடிவுக்குப் பிறகு பெரியார் தன்மீது வைத்திருந்த நம்பிக்கையின் வெளிப்பாடாய் சிங்கமென சிலிர்த்து களத்துக்கு வந்தார். இயல்பாகவே தனது தோளின் மீது விழுந்த தலைமைப் பொறுப்பைச் சுமந்தார். ஒரு தலைமைக்குத் தேவையான துணிவு – முடிவெடுக்கும் திறன்கள் அவரிடம் பொதிந்து கிடந்ததை அப்போதுதான் சமூகம் பார்த்தது.

வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பெரியாருக்கு இரங்கல் கூட்டம் நடத்தாமல் அவரது இலட்சியத்தை முன்னெடுக்கும் கொள்கை உறுதிப் பயணங்களாக மாற்றியமைத்தார். பெரியார் விட்டுச் சென்ற அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற சூத்திர இழிவு ஒழிப்புப் போராட்டங்களுக்கு இயக்கத்தை தயார் செய்தார். அஞ்சலகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள்; தமிழகம் வரும் மத்திய அமைச்சர்களுக்கு கருப்புக் கொடி என்று ‘சூத்திர இழிவு’ ஒழிப்புப் போராட்டக் களங்களை வழி நடத்தினார். 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் ‘அவசர நிலை’ என்ற அடக்குமுறை காலத்தில் கழகத்தின் முன்னோடிகள் மிசாவில் சிறைபிடிக்கப்பட்ட போதும் சரி; இயக்கச் செயல்பாடுகள் முடக்கப்பட்டு, ‘விடுதலை’ ஏடு பார்ப்பன அதிகாரிகளின் முன் தணிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட போதும் சரி; வருமான வரித் துறை பெரியார் அறக்கட்டளையின் உடைமைகளைக் கைப்பற்ற முயன்றபோதும் சரி; அனைத்தையும் உறுதியுடன் எதிர் கொண்டார்.

‘இராம லீலா’ நடத்தி திராவிட மக்களை இழிவுபடுத்தி மகிழ்ந்த வடநாட்டு பார்ப்பனர்களுக்கும் அதில் பங்கேற்று ஆதரவு காட்டி வந்த பிரதமர், குடியரசுத் தலைவருக்கும் பதிலடி தரும் வகையில் ‘இராவண லீலா’வை அறிவித்தார்; பெரியாரின் முதலாம் நினைவு நாளில் நடத்தினார். இந்தியாவின் பார்வையை இயக்கத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார். சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் விவாதப் பொருளாக ‘இராவவண லீலா’ மாறியது.

பெரியார் இயக்கத்துக்கு வந்த சுயமரியாதைப் பெண்கள் – பெண்ணுரிமைக்காக மட்டும் குரல் கொடுத்தவர்கள் அல்ல. இந்தித் திணிப்பு, சமூக நீதி, பகுத்தறிவு, பார்ப்பன எதிர்ப்பு, நாட்டு விடுதலை என்ற இலட்சியப் போராளிகளாகவும் செயல்பட்டிருக்கிறார்கள்.

ஆனாலும் அன்னை மணியம்மையார், ‘‘அவமானம் – ஏளனம் – அவமதிப்புகளைப்’’ புறந்தள்ளி தொண்டறம் ஏற்றவர் என்பதில்தான் தனித்துவம் பெறுகிறார்.



# ‘ஓட்டுக்கு நோட்டு’ பெரியார் சொன்ன கதை

செ.கார்கி

*இந்திய சட்டசபை தேர்தல் ஆரம்பமாகி விட்டது. இது வேலையில்லா வாலிபர்களின் கஷ்டத்தை ஒருவாறு குறைக்க அனுகூலமாயிருக்கிறது என்று சொல்லலாம். அது போலவே கொள்கையோ, விஷயமோ இல்லாத பத்திரிக்கைகாரர்களுக்கும் ஒரு அளவு கஷ்டம் நீங்கிற்று என்றும் சொல்லலாம்.*
- பெரியார்

மக்களால் வாக்களிக்கப்பட்டு ஜனநாயக முறையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறை என்பது ஜனநாயகத்தின் மிக உயர்ந்த வடிவமாகப் பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் சாதி, மதம், பணம், மது போன்றவையே பிரதானமாகத் தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்திகளாக விளங்கி வருகின்றன. அதனால் சாதி, மதம், முதலாளித் துவம் போன்றவற்றை ஒழிக்க நினைப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தத் தேர்தல் அரசியலை வெறுக்கக் கூடியவர்களாகவும் அதன் மீது பெரும் அதிருப்தி கொண்டவர்களாகவுமே இருக் கின்றார்கள். பெரியாருக்கும் இந்தத் தேர்தல் அரசியலின் மீது பெரிதாக ஈடுபாடு எல்லாம் இருந்தது கிடையாது. அதன் மீதான தன்னுடைய கடும் விமர்சனங்களை தன் வாழ்வின் இறுதிவரை அவர் வைத்துக் கொண்டே இருந்தார். அதைத் தன்னுடைய பேச்சிலும் எழுத்திலும் வெளிப் படுத்தவும் செய்தார்.

“இந்திய சட்டசபைத் தேர்தல் ஆரம்பமாகி

விட்டது. இது வேலையில்லா வாலிபர்களின் கஷ்டத்தை ஒருவாறு குறைக்க அனுகூலமாயிருக் கிறது என்று சொல்லலாம். அது போலவே கொள்கையோ, விஷயமோ இல்லாத பத்திரிக்கை காரர்களுக்கும் ஒரு அளவு கஷ்டம் நீங்கிற்று என்றும் சொல்லலாம். நாட்டுக்கோ, நகரத்துக்கோ, ஏழைப் பாட்டாளி மக்களுக்கோ இதனால் ஏதாவது பயன் உண்டா என்று பார்ப் போமானால் தேர்தல்களுடையவும், தேர்தல் முடிவுகளுடையவும் பயன் கடைசியாக "பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை நாயைப் பிடித்துக் கட்டுங்கள்" என்கின்ற மாதிரிக்குத்தான் அதாவது நன்மை ஏற்படாவிட்டாலும் கெடுதி யாவது இல்லாமல் இருந்தால் போதும் என்று பிரார்த்திக்க வேண்டிய அளவில்தான் வந்து முடியப்போகின்றதே ஒழிய வேறில்லை என்பது உறுதி"

இந்த நாட்டு மக்களில் கல்வியறிவு அற்ற நிலையையும், மூடத்தனத்தையும் எப்படி அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதை அன்றே தோலுரித்து காட்டினார். "நம் நாட்டு நிலைமையானது ஒட்டு மொத்த மக்களின் 100க்கு 7 அல்லது 8 பேர் பேரே படித்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்களாய் இருப்பதாலும், அதிலும் 100க்கு ஒருவர் இருவரே நன்றாய்ப் படிக்கவும், எழுதவும், யோசிக்கவும் உண்மையைக் கண்டுபிடிக்க சௌகரியமும் உள்ளவர்களாய் இருப்பதாலும் இம்மக்களை ஏமாற்ற அதிக கஷ்டமான மார்க்கம் ஏதுமே தேடவேண்டிய அவசியமில்லாமலும் போய்விட்டது. இதானது இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பெரிய அனுகூல மாய் ஏற்பட்டு விட்டது."

"இந்தக் காரணத்தால் தேர்தல்களில் பிரவேசிக்கின்றவர்கள் தங்கள் சொல்லும், எழுத்தும், கொள்கைகளும் உண்மையையும் நாணயமும், யோக்கியப் பொறுப்பும், நன்மையும் சிறிது கலந்ததாகவாவது இருக்கின்றதா என்கின்ற கவலையும், பயமும் இல்லாமல் என்ன வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பேசவும் எழுதவும் நடக்கவும் ஆன காரியங்கள் செய்ய துணிவுள்ளவர்களாகி விட்டார்கள்."

"இதோடு மாத்திரமல்லாமல் இந்நாட்டின் பொருளாதாரத் திட்டமும், வாழ்க்கைத் திட்டமும், மக்களுக்கு எவ்வித பொறுப்பும் ஜவாப்தாரித்தனமும் ஒழுக்கமும் அற்றதாகி, எப்படியாவது வயிறு வளர்க்க வேண்டியதே மனித ஜீவனின் கடமை என்று இருந்து வருகின்றபடியால் மேற்கூறப்பட்ட கூட்டத் தாருக்கு வெகு எளிதில் கூலிகள் கிடைத்து விடுகின்றார்கள். அவர்கள் மூலமும் மக்களை ஏமாற்றக் கருதி தங்கள் தங்களுக்கு அனுகூலமாக எப்படி வேண்டுமானாலும் உண்மைகளைத் திருத்தியும், அபாண்டங்களைக் கற்பித்தும் அகாரணமாய் வைதும், பேசவும், எழுதவும் கூடிய கூலிகளை நியமிக்க வேண்டியவர்களாவதுடன் இப்படிப்பட்ட பலர் கூலிக்கு அமர வேண்டியவர் களாகவும் ஆகிறார்கள்."


"இந்த இரு கூட்டத்தாரும் மக்களின் அறியாமையும், பாமரத்தன்மையையும் நன்றாய் அறிந்துகொண்டதால் தாங்கள் பேசுவதும், எழுதுவதும் 100க்கு 100 பொய்யாகவும் அயோக்கியத்தனமாகவும் ஏமாற்றலாகவும் இருக்கின்றது என்பதை உணர்ந்தும் இப்பவோ பின்னையோ இன்னும் அரை வினாடியிலோ உண்மை வெளியாகிவிடக் கூடியதாய் இருந்தா லும், இதற்கு முன் தாங்கள் பேசியதும் எழுதியதும் அடியோடு பொய்த்துப் போய் பலதரம் மக்களை ஏமாற்றி இருக்கின்றோமே என்பதை உணர்ந்திருந்தாலும், சிறிதும் பயமில்லாமல் தங்கள் காரியங்களை நடத்திச் செல்கின்றார்கள்."

"இவைகள் எல்லாம் இப்போதைய வாழ்க்கைத் திட்டத்தின்படி குற்றம் என்று சொல்ல நம்மால் முடியவில்லை. ஏனெனில் இந்தப்படி எல்லாம் நடந்தால்தான் இன்று மனிதன் மகாத்மாவாகலாம், பிரபலஸ்தராகலாம், கீர்த்தியும் புகழும் பெறலாம், பட்டம் பதவியும் அடையலாம், அதிகாரம் செய்யலாம், பணம் சம்பாதிக்கலாம், பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு கழுவலாம் மற்றும் அவற்றிற்கேற்ற தேசாபிமானி, தேசீய வீரர், தேசியப் பத்திராதிபர் ஆகியோர்கள் ஆகலாம் என்கின்ற நிலையில் வாழ்க்கைத் திட்டம் இருந்து வருகின்றது. இது இன்று நேற்று அல்லாமல் வெகுகாலமாகவே இருந்தும் வந்திருக்கின்றது."

"ஆதலால் இப்படிப்பட்ட செய்கைகளைக் கண்டு யாவரும் வருந்தக் கூடாது என்றும், யாவரையும் குற்றம் கூறக்கூடாது என்றும் சொல்வதோடு முன் சொல்லியபடி அவை களையெல்லாம் அப்புரட்டுகளையெல்லாம்

தைரியமாய் வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு யோக்கியமானவனுடையவும், பட்டம் அதிகாரம் பெருமை புகழ் ஆகியவற்றில் ஆசையில்லாத பொதுநல ஊழியத்திற்கு உயிர் வாழ்பவர்களுடையவும் கடமை.” (பகுத்தறிவு 26.03.1934). இதைப் படிக்கும் போதே உங்கள் மனதில் இன்றைக்கு இருக்கும் பல அரசியல்வாதி களின் முகங்கள் நிச்சயம் வந்துபோகும் என்பது உறுதி.

அதே போல ஓட்டுக்கு பணம் கொடுத்து வெற்றி பெறுவது என்பது பெரியார் காலத்தில் இருந்தே தேர்தலில் வெற்றிபெற கடைபிடிக்கப் பட்டு வரும் முறையாக இருந்திருக்கின்றது. அவர் காலத்தில் ஒவ்வொருவரின் தகுதிக்கு ஏற்ப எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்பதை அவரே பட்டியலிடுகின்றார். மார்க்கெட் நிலவரம் என்ற தலைப்பில் சட்டசபை ஓட்டு ஒன்றுக்கு ரூ.1 முதல் ரூ 5, ஒரு கிராமத்தின் மொத்த ஓட்டுகளுக்கு மணியக் காரருக்கு ரூ 100, கணக்குப் பிள்ளைக்கு ரூ 50, பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு, கிராமாந்தி ரங்களில் செல்வாக்குள்ள குடித்தனக்காரருக்கு ரூ.25, முனிசிபல் சேர்மென்களுக்கு ரூ 1000 முதல் ரூ 1500 வரை கடன், வைஸ் சேர்மென்களுக்கு ரூ 250 முதல் ரூ 500 என்று குறிப்பிடு கின்றார். பஜாரில் இன்னும் புது சரக்கு வராததால் போலிங் ஆபீசர்களை யாரும் வாங்க வர



வில்லை என கிண்டலடிக்கும் பெரியார் முனிசிபல் ஓட்டுகளுக்கு ஓட்டு ஒன்றுக்கு ரூ.5 முதல் 15 வரையும், சேர்மென்களுக்கு ரூ.1000, வைஸ் சேர்மென்களுக்கு ரூ.250, 20 முதல் 30 ஓட்டுள்ள தொகுதிகளில் ஓட்டு ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ. 250 வரையும் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடு கின்றார் (குடிஅரசு 17.10.1926). நிச்சயம் இந்தத் தொகை என்பது அன்றைய, பண மதிப் போடு ஒப்பிடுகை யில் இன்று கொடுக்கப்படும் ஐநூறு, ஆயிரத்தை விட மிகப் பெரியதாகும். இதில் இருந்தே அன்று தேர்தலில் போட்டியிட்ட யாரும் சாதாரண ஆட்கள் கிடையாது என்பதையும் மிட்டா மிராசுகள்தான் என்பதையும் நாம் உணரலாம்.

பெரியார் அவர்கள் இப்படி பணம் வாங்கிக் கொண்டு தேர்தலில் வெற்றிபெற முயலும் நபர்களைப் பற்றி அவர்கள் வெட்கித் தலைகுனியும் வகையில் விமர்சனம் செய்கின்றார். “அதிகப் பணம் செலவு செய்பவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது பார்வதிக்கு பரமசிவன் சொன்ன உறுதி மொழியாகும். ஆகவே இந்த எலக்ஷன் முறை, ஏழை ஓட்டர்கள் பிழைக்க அரசாங்கத்தார் செய்த தர்மமாகும். ஆதலால் ஓட்டர்கள் பணம் கொடுப்பவர்களை வாழ்த்து வதைவிட இப்படிப்பட்ட தேர்தல் முறையைக் கற்பித்த அரசாங்கத்தார் நீடூழி காலம் சிரஞ்சீவியாய் எப்படிப்பட்ட சிரஞ்சீவியாய்? மார்க்கண்டன், அனுமார், விபூஷணன் போன்ற சிரஞ்சீவியாய் அல்ல சூரியன், சந்திரன் போன்ற சிரஞ்சீவியாயும் அல்ல அவைகள் ஒரு காலத்தில் இல்லாமல் போய்விடும். மற்றெப்படிப்பட்ட சிரஞ்சீவியாய் என்றால் கல்லும், காவேரியைப் போல் சிரஞ்சீவியாய் இருக்க வேண்டுமென்று வாழ்த்த கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

சில கடவுள்களும் இந்த அரசாங்கத்துக்கு சிரஞ்சீவிப் பட்டம் கொடுக்கக் கடமைப்பட் டிருக்கின்றனர்.


ஏனெனின் ஓட்டுக்கு விலையாக ஓட்டர் களுக்குப் பணம் கொடுப்பது மாத்திர மல்லாமல் கோயில் கட்ட மசூதி கட்ட, சர்ச் கட்ட என்று 100, 500, 1000 கணக்காய் ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதால், அந்த அந்த மதக் கடவுள்கள் இப்படிப்பட்ட எலக்ஷனை உண்டாக்கிய அரசாங்கத்தை ஆசிர் வதிக்க கடமைப்பட்டிருக்கின்றன.” (பகுத்தறிவு 23.09.1934)


தேர்தல்களில் ஓட்டுக்கு பணம் கொடுப்பது மட்டுமில்லாமல் எப்படி அதிகார வர்க்கத்தை கைக்குள் போட்டுக் கொண்டு வெற்றி பெறு கின்றார்கள் என்பதை ஒரு நகைச்சுவையான கதையாக சொல்கின்றார். “ஒரு ஊரில் ஒரு எலக்ஷன் நடந்தது அதற்கு நின்ற இரண்டு அபேட்சகர்களும் எலக்ஷன் அதிகாரியிடம் சென்று எலக்ஷன் எப்படி இருந்தாலும் தங்களுக்கே அனுகூலமாய் இருக்க வேண்டு மென்று தனித்தனியே கேட்டுக்கொண்டு ஆளுக்கு 100 ரூ. வீதம் இரண்டு பேரும் “இரகசியமாய்” கொடுத்து விட்டுவந்து விட்டார்கள். அதற்கு

ஏற்றாற்போல எலக்ஷனிலும் போலிங் ஆபீசர்களது "தவறுதல்"களால் சில தப்பிதங்கள் நடந்தது. இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு (தான் தோல்வி அடைந்து விடக்கூடும் என்று கருதிய) ஒரு அபேக்ஷகர் முடிவு சொல்லும் (டிக்ளேர் செய்யும்) அதிகாரிக்கு மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுத்து தன்னையே டிக்ளேர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதுகேட்ட மற்ற அபேட்சகரும் ஓடி மறுபடியும் பணம் கொடுத்தார். இரண்டையும் வாங்கிக் கொண்டார். அதிகாரி யோசித்தார் யாருக்கு அனுகூலம் செய்தால் தனக்கு நல்லது என்று பார்த்தார். மற்றும் பல சங்கதிகளைப் பார்த்து ஒரு கட்சிக்கு அனுகூலமாக தீர்ப்பு கூறி கொஞ்ச ஓட்டு பெற்ற கயவனையே டிக்ளேர் செய்தார். வெற்றி பெற்றதாக முடிவு கூறினார். அதற்கு ஏதோ காரணமும் குறிப்பிட்டுவிட்டார். ஆகவே மறுபடியும் பணம் கொடுத்த எதிர் அபேட்சகர் தைரியமாய் அதிகாரி வீட்டுக்குப் போய் "இது தானே யோக்கியதை" என்றார். அதிகாரி ரகசியமாய் வீட்டுக்குள் அழைத்து வாங்கின பணத்தை கையில் கொடுத்து "சந்தர்ப்பம் வேறு விதமாய் போய்விட்டதால் இப்படிச் செய்ய நேர்ந்தது. ஆனால் வருத்தப்படாதே கோர்ட்டுக் குப் போனால் உனக்குதான் அனுகூலமாகும். மன்னித்துக்கொள் என்று கேட்டுக் கொண்டார். அபேட்சகனோ ஓட்டர் வீட்டுக்கு அலைந்தது போறாமல் எலக்ஷன் ஆபிசர் வீட்டுக்கு அலைந்து போறாமல் இனி கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டுக்கும் நீதிபதி வீட்டுக்கும் அலையும்படியா செய்கிறாய்? என்று ஏதோ தனக்கு மிக புத்தி வந்துவிட்டது போல் பேசியது மல்லாமல் அப்படித் தான் கோர்ட்டில் அனுகூலமானால் எனக்கு என்ன பிரயோஜனம்? இப்பொழுது நீ அனுகூலம் செய்திருந்தால் எனக்கு சமீபத்தில் நடக்கும் தலைவர் தேர்தலில் 1000மோ, 2000மோ கிடைத் திருக்கும், அதெல்லாம் பாழாய் போனது மல்லாமல் இன்னமும் 500ரோ 1000மோ செலவு அல்லவா செய்ய வேண்டி இருக்கிறது.

அதற்கும் இனி அப்பீல் செய்தால் அப்புறம் வேறே செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இவ்வளவும் செய்து அனுகூலம் ஆகாமல் போய் விட்டால் என்ன பண்ணுவது? அல்லது நமக்கு அனுகூலம் ஆச்சுதென்றே வைத்துக் கொண்டா லும் மந்திகளோடு மந்தியாய் நாற்காலியில் சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு வருவதைவிட வேறு என்ன செய்ய இடமுண்டாகும்? ஆதலால் இனிமேல் இந்த கிரகத்தைப் பற்றி நினைப்பதே இல்லை. நீ மாத்திரம் நல்லா இருந்தால் சரி, கடவுள் தான் உன்னைக் கேட்கவேண்டும். என்று சொல்லிக்கொண்டு வெளியில் வந்துவிட்டார். அதிகாரி உடனே கதவை மூடித் தாழ்போட்டுக் கொண்டார் என்பதாக ஒரு கதை தேசீய மதத்தைச் சேர்ந்த சுயராஜ்ய புராணத்தில் எலக்ஷன் அத்தியாயத்தில் காணப்பட்டது. (குடிஅரசு- 22.01.1933).

பெரியார் அவர்களுக்கு தேர்தல் அரசியலின் மீது மிகப் பெரிய வெறுப்பு இருந்தாலும் சாமானிய ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நன்மையைப் பொறுத்தே காமராஜர், அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்களை ஆதரித்தாரே தவிர தனிப்பட்ட முறையில் அவருக்கு என்றுமே தேர்தல் அரசியலின் மீதும், சாதியை கட்டிக் காப்பாற்றும் இந்திய அரசியலைமைப்பு சட்டத் தின் மீதும் நம்பிக்கை இருந்தது கிடையாது. அதை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியே வந்தார். பெரியாரின் பிற்கால அரசியல் நிலைப்பாடுகளில் பலருக்கு ஆட்சேபகரமான கருத்துக்கள் இருந்தா லும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால் அதில் பொது நலன் இருக்குமே தவிர சுயநலன் என்பது சிறிதும் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். •



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org
ஆண்டுக் கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com




**மத்திய செம்மொழித் தமிழாய்வு மையம் (Central Institute of Classical Tamil) சார்பாக, தமிழறிஞர்களுக்குக் குடியரசுத் தலைவர் வழங்கும் விருதுக்கானத் தேர்வுக் குழுவில், உறுப்பினராக தொல்லியல் துறை இயக்குனராகப் பணிபுரிந்து ஒய்வு பெற்றுவிட்ட திரு. நாகசாமியை நியமித்து இருப்பதான அறிவிப்பிற்கு பல்வேறு தமிழ் அறிஞர்களும், கடும் கண்டனம் தெரிவித்து இருக்கின்றனர்.**

# தமிழ்மீது நஞ்சு கக்கும் நாகசாமிக்கு செம்மொழி ஆய்வுக் குழுவில் பதவியா?

**ஒ. சுந்தரம்**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், “வேதங்களில் இருந்து திருக்குறள் வந்தது என அய்யன் திருவள்ளுவரைச் சிறுமைப் படுத்தி, திரிபுவாதத்தை முன்வைத்த முன்னாள் தொல்லியல் அதிகாரி நாகசாமியை, செம்மொழி விருதுத் தேர்வுக் கமிட்டியில் நியமித்திருப்பதைக் கண்டிப்பதாகவும், ஒரு ஆய்வல்ல, பல்வேறு ஆய்வுகளைக் கலப்படமான, ஆதாரமில்லாத, இட்டுக்கட்டிய தகவல்களின் அடிப்படையில் வெளியிட்டு, சமஸ்கிருதமும் வேதங்களும்தான் தமிழ் மண்ணுக்குச் சொந்தம் என்ற விஷமப் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் ஒருவர் எப்படிப் பாரபட்சமின்றி செம்மொழி விருதுகளைத் தேர்வு செய்ய முடியும் என்றும், செம்மொழித் தமிழ் மீது அடர்த்தியான நஞ்சைக் கக்கும் நாகசாமியை தேர்வுக் குழுவில் இடம்பெறச் செய்து தமிழர்களின் உணர்வுகளை கிள்ளுக்கீரையாக எண்ணி பா.ஜ.க. அரசு அவமானப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கடும் எதிர்ப்புகளுக்கு ஆளாகியுள்ள நாகசாமி யார் என்பதையும், செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் பற்றியும், நாகசாமி திருக்குறள் குறித்து திரிபுவாதம் செய்ய வேண்டிய தேவை என்ன என்பது குறித்தும் சுருக்கமாகக் காண்போம்.

இராமச்சந்திரன் நாகசாமி என அழைக்கப்படும் இரா. நாகசாமி ஒரு பார்ப்பனர். சென்னை, மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரியில் சமஸ்கிருத மொழியில் இளங்கலை பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை பயின்று, தொல்லியல் ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

கடந்த 1959 முதல் 1963 வரை சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாவலர் (Curator) எனும் பணியிலும் 1963-66 வரை தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் உதவி சிறப்பு அதிகாரி பணியிலும், 1966-88 வரை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் முதலாவது இயக்குனராகப் பணிபுரிந்தும் ஓய்வு பெற்றவர்.

தமிழகக் கல்வெட்டு, தொல்லியல் ஆராய்ச்சித் தொடர்பாக கண்டெடுக்கப்படுபவைகள் தொடர்பாக பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

சனாதான, சமஸ்கிருத வடமொழிப் பண்பாட்டில் பற்று கொண்ட நாகசாமி, திராவிட இன மக்களின் வரலாறு, தமிழ்மொழி யின் இலக்கண இலக்கியங்கள் தொடர்பாக ஆதாரமற்ற பொய்யுரைகளைக் கற்பனை கலந்து ஆங்கில நூல்களாக்கி பரப்பி வருவதுடன்,

மதவாத ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர் நடத்தும் கருத்தரங்குகளில் பங்கேற்று, தமிழர் தொன்மை வரலாற்றுக்கு எதிரானக் கருத்துகளைப் பரப்புரை செய்து வருபவராவார்.

கடந்த 2018ஆம் ஆண்டு, 'Thirukkural-An Abridgment of Sastras' - 'திருக்குறள்-வேதங்களின் சாரம்' எனும் ஆங்கில நூலினை எழுதி வெளியிட்டு, தமிழ் அறிஞர்களின் கண்டனத்துக்கு ஆளானார்.

இந்த நூலில், 'திருக்குறள் ஆரிய சாத்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்ட ஒரு வழி நூல், மனு தர்மம், அர்த்தசாஸ்திரம், காம சாஸ்திரம், மோட்ஷ சாஸ்திரம் போன்றவைகளிலிருந்தே, அந்தக் கருத்துக்களைத் தாங்கியே திருக்குறள் எழுதப்பட்டுள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.

இந்த 'நூலின்' நோக்கமே தமிழர்களின் கலை, பண்பாடு, வரலாறு, சமயம் உள்ளிட்ட அனைத்துக் கூறுகளும் ஆரியர்களிடமிருந்தே பெறப்பட்டது எனவும், ஒட்டு மொத்த இந்திய நிலப்பரப்புமே 'ஆரிய தேசம்' எனவும், இன்று நாட்டில் ஒற்றைக் கலாச்சாரத்தை - ஆரியக் கலாச்சாரத்தை நிறுவ முற்படுகின்ற பாசிச சக்திகளுக்குத் துணை போவது என்பதேயாகும். இதனைப் பட்டவர்த்தனமாக அறிவிக்கின்ற வகையில், நூலின் முதற் பக்கத்திலேயே 'நடமாடும் கடவுள்' எனப் பார்ப்பனர்கள் கொண்டாடிய காஞ்சி சந்திரசேகரேந்திர சங்கராச்சாரியின் வண்ணப்படத்தை அச்சிட்டு அர்ப்பணித்துள்ளார் திரு. நாகசாமி.

ஏன் நாகசாமி திருக்குறள் குறித்து திரிபுவாதம் செய்கிறார்? என்பதை ஆய்வு செய்ய வேண்டியது முக்கியமானதாகும்.

கடந்த 2004ஆம் ஆண்டு, (12.10.2004) தமிழக முதல்வர் கலைஞர் தமிழ், செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, 'தமிழ்ச் செம்மொழி' என அறிவிப்பதற்கு காட்டப்பட்ட பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளில் முதன்மையாக தொல்காப்பியமும், திருக்குறளும் அமைந்து இருந்தன.

ஒரு மொழி, செம்மொழி (Classical Language) ஆக அறிவிக்கப்பட வேண்டுமெனில், அம்மொழி 1500 முதல் 2000 ஆண்டுகள் வரையிலான வரலாறு மற்றும் பழைமையான இலக்கியங்கள் கொண்டதாக இருக்க வேண்டும்; அம்மொழியின் துவக்கக்கால இலக்கியங்கள் உயர்தரத்தில் இருத்தல்; அந்த இலக்கிய மரபும் தொடக்கக் காலத்திலிருந்தே அந்த மொழிக்கு மட்டுமே உரிமையானதாக இருக்க வேண்டும். மற்ற மொழிகளின் இலக்கிய மரபுகளிலிருந்து பெறப்பட்டதாக இருக்கக் கூடாது. இந்த அடிப்படையில் தான் ஒரு மொழிக்குச் செம்மொழித் தகுதியை இந்திய அரசு வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் தமிழ், செம்மொழி என அறிவிக்கப்பட்டது.

தமிழின் செம்மொழித் தகுதிக்கான இலக்கியப் படைப்புகளைத் தொகுத்து வகைப் படுத்திடத் தமிழறிஞர்கள் வ.அய். சுப்பிரமணியன், ச. அகத்தியலிங்கனார், ச.வே. சுப்பிரமணியனார், கோ.க. கந்தசாமி ஆகியோர் ஒன்று கூடி தமிழரின் இலக்கண இலக்கியமான தொல்காப்பியம், ஆற்றுப்படை நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள், நாலடியார், பழமொழி உள்ளிட்ட நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பியங்கள், முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் உள்ளிட்ட 41 நூல்களை 'செம்மொழித் தகுதி' படைத்த நூல்களாக வகை செய்து அளித்தனர்.

மொழியின் செம்மொழித் தகுதிக்கு 1) இலக்கியப் படைப்புகள், 2) ஓவியம், சிற்பக்கலை, கட்டிடக் கலை உள்ளிட்ட கலைப் படைப்புகள் சான்றுகளாக நிறுவப்படும். அதனடிப்படையில், கலைப் படைப்புகளாக தஞ்சை பெரியகோயில், திருவில்லிபுத்தூர் ஆலயம், மாமல்லை சிற்பங்கள் எனத் தமிழர் கலைப் படைப்புகள் தமிழைச் செம்மொழியாக்கிப் புகழ் பெற்றுள்ளவையாகும்.

கடந்த 2008 மே முதல், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் செம்மொழித் தமிழாய்வு மையம் கி.பி.600-க்கு முந்தைய காலத்தைச் செவ்வியல் காலமாகக் கொண்டு பண்டையத் தமிழ்ச் சமூகத்தினைப் பற்றிய ஆய்வை நிகழ்த்தவும், அதன் அனைத்துக் கூறுகளையும் வெளிப்படுத்தும் வகையில் ஆவணப்படுத்துவதையும், பாதுகாப்பதையும் தனது நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

செம்மொழித் தமிழ்ப் படைப்புகளை உலகெங்கும் பரவச் செய்தும், பல்வேறு

மொழிகளில் பதிப்பித்தும், செம்மைப் பதிப்புகளாக்கிடவும், உலகப் பல்கலைக்கழகங்களில் இருக்கைகளை ஏற்படுத்தி, ஆய்வாளர்களை உருவாக்கி, அவர்களது ஆய்வுகளுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிப்பதும் செம்மொழித் தமிழாய்வு மைய நோக்கங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆக, தமிழ் மொழிக்கு மட்டுமே உரிமை கொண்டதாகவும், பிறமொழி இலக்கியப் படைப்புகளின் வழி நூலாக இல்லாமல் தனித்த முதல் நூலாகவும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை உடையது என தமிழ்க்கடல் மறையலையடிகள் போன்ற அறிஞர்களால் காலம் கணிக்கப்பட்ட திருக்குறள், 500 ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுக்கப்பட்ட மனுதர்ம சாஸ்திரம் உள்ளிட்டவைகளின் சாரம், இவற்றின் வழி நூல் என எந்தவிதத் தரவுகளுமின்றி தனது ஆங்கில நூலில் நீட்டி முழக்குகிறார் நாகசாமி; தனது இன நலப் பற்றின் காரணமாக!

இதன் மூலம் நாகசாமி, திருக்குறளை செம்மொழித் தகுதிக்கு உரிய முதல் நூல் அல்ல; இது எங்கள் சாஸ்திரங்களின் வழி நூலே என நிறுவிட முயலுகிறார். இதன் வழியாக தமிழ் செம்மொழிக்குரிய தகுதியே பெறாது என்று சொல்ல வருகிறார். அத்தகைய ஒரு நபரை செம்மொழி விருது தேர்வுக் குழுவில் உறுப்பினராக்குகிறது பா.ஜ.க. ஆட்சி! இவரது முயற்சியை தமிழறிஞர் உலகம் குறட்பாக்களின் மூலமே ஆணித்தரமாக மறுத்துள்ளது.

'தீக்குறளை சென்றோதோம்' என்ற ஆண்டாள் பாடலுக்கு 'கோள் சொல்லுதல் கூடாது' என்பதே பொருளாகும். ஆனால், இதனைக் காஞ்சிப் பெரிய சங்கராச்சாரி சந்திர சேகரேந்திரர் என்ன விளக்கம் அளித்தார் என்றால், தீக்குறள் = தீமையான குறள்; இதனைப் படியாதீர்; ஓதாதீர்' என்றல்லவா பொய் உரைத்தார்?

'அவாளது' சாஸ்திரங்களின் சாரமாக திருக்குறள் இருந்திருக்குமேயானால், சங்கராச்சாரி குறளைப் படியாதீர் எனச் சொல்லியிருப்பாரா?

பின்னர் ஒரு கட்டத்தில், சின்ன சங்கராச்சாரி ஜெயேந்திரர், 'திருக்குறளில் உள்ள முதல் 10 பாக்களை மட்டும் பயன்படுத்தலாம்' என்றார். அந்தப் பத்துப் பாக்களில் 7 குறட்பாக்கள் மனுதர்மத்தை எதிர்க்கவே செய்கின்றன என நிறுவுகிறார் முனைவர் மறைமலை இலக்குவனார்.

பின் நாட்களில் கடவுள் வாழ்த் தாக்கப்பட்ட இக்குறட்பாக்கள் காலில் விழுதல் பற்றியே சிறப்பித்துக் கூறுகிறது.

1) கற்றதனாலாய பயனென்கொல்...... (2)

"தூய அறிவுடைய ஆசிரியரின் தாளை வணங்காவிடில் பயன் இல்லை."

2) மலர்மிசை ஏகினான்.... (3)

"மாண்புடையவர்களின்,
சிறப்புடையவர்களின் அடிகளைப் பொருந்தி
வாழ்பவர்களே நீடு வாழ்வார்."

3) வேண்டுதல் வேண்டாமை....... (4)

"விருப்பு வெறுப்பு அற்றவர்களின் அடியை வணங்குக."

4) தனக்குவமை இல்லாதான்.... (7)

"ஒப்பு நோக்குவதற்கு இணையற்ற ஆன்றோர் திருவடிகளைப் பற்றினாலன்றி மனக்கவலை மாற்ற இயலாது."

5) அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்.... (8)

"பண்பு நலன்களை உடைய அறவோர்களின் தாள் பணிதல்" (அந்தணர் = அறவோர்)

6) கோளில் பொறியிற் குணமிலவே...... (9)

"எண்ணிப் போற்றும் குணமுடையவனின் தாளை வணங்காத தலை பயனற்றது."

7) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்...... (10)

"நல்ல பண்புகளை உடைய இறைமையாளர்களின் அடி சேர்ந்தவர்களால் மட்டுமே, அவர்களது வழிகாட்டுதலில் துன்பக் கடலைக் கடக்க முடியும்."

- இவையாவும் திருக்குறள் போற்றும் நெறிகள்.

ஆனால், மனுதர்ம சாஸ்திரமும், பிரம்மனின் படைப்புக் கோட்பாட்டை சாஸ்திரங்களின் அடிப்படையில் கூறிடும் ரிக்வேதத்தின், புருஷசரித்திரம், 10ஆவது சுலோகமும், காலில் இருந்து பிறந்தவன் சூத்திரன்,




தீண்டத்தகாதவன் என இழிவுபடுத்துகிறது. எனில், திருக்குறள் எப்படி பார்ப்பனீய சாஸ்திரங்களின் தழுவலாக இருக்க முடியும்? வருணாசிரமக் கோட்பாடு தானே பார்ப்பனீய சாஸ்திரங்கள் என்பதை மறுக்க முடியுமா? என வினவுகிறார் இலக்குவனார்.

'பிராமணர் (பார்ப்பனர்) காலைத் தொட்டு வணங்காதவர்கள் சொர்க்கம் போக மாட் டார்கள்' என,

"அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க்
கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

எனும் குறட்பாவை மேற்கோள் காட்டி நமக்கு சிரிப்பை மூட்ட முயற்சிக்கிறார் நாகசாமி!

இப்படியான நாகசாமிப் பார்ப்பனர்கள் பிற்காலத்திலே பிறப்பெடுத்து வருவார்கள் என்று முன்கூட்டியே உணர்ந்ததால்தான் அய்யன் வள்ளுவர்,

"அந்தணர் என்போர் அறவோர்மற்று
எவ்வுயிர்க்கும்
செந்தண்மைப் பூண்டொழுக லான்"

- என்ற குறட்பாவின் மூலம் கன்னத்தில் அடித்தாற்போல் விளக்கமளித்துள்ளார்.

ஊர் பழமொழி ஒன்று.... 'மெத்தப் படித்த மூஞ்செலி கழனிப் பானைக்குள் விழுந்ததாம்' என்பதே நாகசாமி, அந்தணர் என்பதற்கு (பிராமணர்) பார்ப்பனர் எனப் பொருள் கூறும் போக்கு நினைவுக்கு வருகிறது.

எல்லா உயிர்களிடத்தும் செம்மையான அருளுடையவர், அன்புமிகக் கொண்டு நடக்கும் அறவோர் என்பதே 'அந்தணர்' என வள்ளுவர் குறிக்கும் சொல்லுக்குப் பொருள் என்பதை கற்றோர் அறிவர்.

இப்படி, இந்த நூல் முழுவதும் உளறிக் கொட்டியுள்ள நாகசாமி, இந்தக் கருத்துக்கள் எல்லாம் நானாகக் கூறியது அல்ல; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் தெரிவித்தது என உரையாசிரியர் பரிமேலழகரைத் துணைக்கு அழைக்கின்றார்.

திருக்குறளின் பழம்பெரும் உரையாசிரியர் களில் காலத்தால் இறுதியாகத் தோன்றியவர் பரிமேலழகர் என்றும், கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதற்கான கல்வெட்டுச் சான்று காஞ்சி வரதராஜ பெருமாள் கோவிலில் காணப்படு வதாகவும், இவர் எழுதிய திருக்குறள் உரையில் வைணவக் கருத்துகளே முதன்மையுற்று விளங்குவதாகவும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பரிமேலழகரின் திருக்குறள் உரை குறித்து டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை' எனும் 800 பக்கங்கள் கொண்ட நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளவற்றைக் காண்போம்.

"பரிமேலழகர் குறட்பாக்களின் உண்மைப் பொருள் விளக்கத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாத முறையில் சிற்சில கருத்துகளை கூறியிருந்தாலும், பற்பல குறட்பாக்களைப் பொறுத்து மிகவும் சிறப்புடையனவாகும்...."

"..... என்றாலும் மதியின் கண் மறு இருப்பதுபோல பரிமேலழகரின் வடமொழி நூலாரின் கொள்கைப் பற்றும், வைணவச் சமயப் பற்றும், வர்ணாசிரம சனாதன தருமப் பற்றும் சார்ந்த கருத்துகள் வள்ளுவர் வற்புறுத்திய சான்றோர் மரபுகளுக்கும், பொதுப் பண்பாட்டியலுக்கும், உலகியலுக் கும், உண்மையியலுக்கும் பொது அறத்திற்கும் முரண்பாடான முறையில், அவரால் உரையின் சிற்சில பகுதிகளில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டிருக் கின்றன என்பது மட்டும் உண்மை.

மேற்கண்ட காரணம் பற்றித்தான் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள், "வள்ளுவர் செய் திருக் குறளை மருவற நன்கு உணர" வேண்டும் என வலியுறுத்தினார். அவர் குறிப்பிட்டுள்ள 'மரு' என்பது, பரிமேலழகரால் புகுத்தப்பட்ட மாசுவும், மருவும் அறவே நீக்கப்பட வேண்டும் என்பது தான், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் பேராவலாகும்..." எனவும் குறிப்பிட்டுள்ளதுடன் பரிமேலழகர் 96 குறட் பாக்களுக்கான உரையில் பிற உரையாசிரி யர்களின் கருத்திலிருந்து வேறுபட்டும், மாறுபட்டும் உரை எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டு, பரிமேலழகரின் சனாதன வருணாசிரமப் பற்றினை வெளிப்படுத்தி யுள்ளார்.

மேலும் நாவலர்,

"வடமொழியிலுள்ள வேதங்கள், மனுதர்ம சாத்திரம் அர்த்தசாஸ்திரம், சுக்கிர நீதி, காம சூத்திரம் போன்ற நூல்களுக்கும், திருக்குறளுக்கும் எந்தவிதமான தொடர்பும் அறவே இல்லை. திருக்குறள் அவற்றிற் கெல்லாம் முற்றிலும் மாறுபட்டு விளங்கும், பொது அறம் போற்றும், தனித் தமிழ் பண்பாட்டுத் தனிப்பெரும் நூலாகவே திகழ்ந்து வருகிறது" எனப் பல சான்று களுடன் நிறுவியுள்ளார்.

"வடமொழியாளராகிய மனு, தனது சாஸ்திரத்தில் கூறுகின்ற 'தர்மம்' என்பது வேறு, வள்ளுவப் பெருந்தகையார், திருக்குறளில் கூறுகின்ற 'அறம்' என்பது வேறு.

மனுவின்படி, மனிதகுலம் நான்கு வருணத்தாராகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு வகையான சட்ட விதியின் கீழ் நீதி கூறும் தன்மையதே 'அறம்' ஆகும்" எனப் படம் பிடித்துக் காட்டும் நாவலர், இதற்கான சான்றுகளை அடுக்கிக் காட்டுகிறார்.


அந்த சான்றுகளை அடுத்த கட்டுரையில் மறுப்போம்.

(அடுத்த இதழில் முடியும்)

## 'நிமிர்வோம்' வாசகர் வட்டம் நடத்திய 9ஆவது ஆய்வரங்கம்

'நிமிர்வோம்' வாசகர் வட்ட 9ஆவது கூட்டம் மார்ச் 3, 2019 மாலை சென்னை இராயப்பேட்டை முருகேசன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இலட்சுமணன் தலைமை தாங்க, இராஜேஷ் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் ஜெயப்பிரகாஷ் நிகழ்வை ஒருங்கிணைத்தார். அருண் – 'சங்க காலத்தில் வைதிக ஊடுருவல்' எனும் தலைப்பிலும், சென்னைப் பல்கலைக் கழக அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தைச் சார்ந்த பிரவீண்குமார், 'பவுத்த தத்துவ சிந்தனையும்-கடவுள் மறுப்பும்' என்ற தலைப்பிலும், கருந்தமிழன் கலைமதி, 'உணர்வு-உரிமை-ஒழுக்கம்-பெரியாரியல் பார்வை' என்னும் தலைப்பிலும், சங்கீதா, 'பெண்களின் உரிமைகளை நோக்கிய உச்சநீதிமன்றத் தீர்ப்புகள்' என்ற தலைப்பிலும், நாத்திகன் இடஒதுக்கீட்டுக்கு எதிரான வாதங்கள்' என்ற தலைப்பிலும், இளம் தமிழகம் ஒருங்கிணைப்பாளர் செந்தில், 'புல்வாமா தாக்குதல்களும் – காஷ்மீர் பிரச்சினைகளும்' என்ற தலைப்பிலும், கழக தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் 'மத்திய அரசின் வேலை வாய்ப்புகளும்-மறுக்கப்படும் மாநில உரிமைகளும்' என்ற தலைப்பிலும் ஆழமான கருத்துகளை முன் வைத்துப் பேசினர். இளம் தோழர் இனியவன் நன்றி கூறினார். 'நிமிர்வோம்' ஆசிரியர் விடுதலை இராசேந்திரனுக்கு பெரியார் -அம்பேத்கர் படம் வாசகர் வட்டம் சார்பில் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. ஆய்வுரைகளைப் போல ஆழமான கருத்துகளை முன் வைத்து ஆற்றிய உரைகள் கூட்டத்தினரை மிகவும் ஈர்த்தது.

# ஊழலுக்கு அப்பாற்பட்டதா பா.ஜ.க.?




## அணிவகுக்கும் பட்டியல்கள்... ஆதாரங்களுடன்...

**பா.ஜ.க., லஞ்சம் வாங்காத ஊழல் செய்யாத உலக உத்தம கட்சி என உலகம் முழுக்க பொய் பேசி வருகிறார் பிரதமர் மோடி. ஆனால் அவர் கட்சியும், அவரும் ஊழலில் செய்தே திளைத்தவர்கள். பா.ஜ.க. செய்யும் ஊழலில் நாட்டின் பணம் மட்டுமல்ல, இந்த நாட்டின் சாமான்ய மக்களின் உயிரும் ஆயிரக்கணக்கில் பலியாயிருக்கிறது. அந்த ஊழல்களின் பட்டியல்களில் சில:**

**2003 - 40 ஏக்கர் நில மோசடி - மோடியின் குஜராத் ஊழல் :** *குஜராத் மாநிலத்தின் கட்ச் நகரத்தில் உள்ள 40 ஏக்கர் நிலத்தை அலுமினியா ரிஃபைனரி லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு, மோடி முதலமைச்சராக இருந்த போது வழங்கினார். இதில் சட்ட விதிகள் மீறப்பட்டிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது.*

*2003ஆம் ஆண்டில் எந்த காரணத்திற்காக நிலம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பபட்டதோ அந்த பணியினை பத்தாண்டுகள் ஆகியும் தொடங்கக் கூடவில்லை. இந்த நிலத்தின் மதிப்பு 2008ஆம் ஆண்டில் 4.35 கோடி. ஆனால் இதில் நான்கில் ஒரு பங்கை மட்டும் பெற்றுக் கொண்டு நிலம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது.* (Economic Time 24.1.2014)

**2005 - ஹட்கோ ஊழல் :** *முன்னர் மத்தியில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த போது நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சராக இருந்த ஆனந்த குமார் மீது, மத்திய இலஞ்ச ஒழிப்புத் துறை ஹட்கோ மூலம் 14,500 கோடி ரூபாய் ஊழல் செய்ததாக குற்றம் சாட்டியிருக்கிறது.*

அவுசிங் அண்ட் அர்பன் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் (ஹட்கோ) மூலம் ஒரே நாளில் 50 தனியார் நிறுவனங்களுக்கு ரூ5000 கோடி ரூபாய் கடனாக கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனந்த் குமார் அமைச்சராக இருக்கும்போது தனிப்பட்ட செலவான மொபைல் பில் உட்பட பல நடவடிக்கைகளை அரசு நிதியில் இருந்து தான் செய்து வந்தார் என்றும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. (The Hindu 30/8/2005 - Economic Times 17/7/07)

**2006 கூட்டுறவு ஊழல் – சத்திஸ்கர் :** சத்திஸ்கரில் உள்ள கூட்டுறவு வங்கி, இந்திரா பிரியதர்சினி நகரிக் ஷக்காரி பேங்க் ஊழலில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டு முக்கிய குற்றவாளியாக சின்ஹா மற்றும் வங்கியின் நிர்வாகஸ்தர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளியான சின்ஹாவிற்கு நார்கோ அனாலிஸ் (உண்மை கண்டறியும் சோதனை) டெஸ்டின்போது எடுத்த காணொளி ஊடகங்களில் வெளி வந்தது.

அந்த காணொளியில் சத்திஸ்கர் முதலமைச்சர் ராமன் சிங்கிற்கும் அவரது அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர் இருவருக்கும் கோடிக்கணக்கில் இலஞ்சம் கொடுத்ததாக சின்ஹா கூறுகிறார்.

**2007 ஆகஸ்டா விமான ஊழல் வழக்கு :** ஆகஸ்டா 109, வி.ஐ.பி.க்கள் பயணிக்கும் பிரத்யேக ஹெலிகாப்டர் 2007ஆம் ஆண்டு சத்திஸ்கர் அரசால் வாங்கப்பட்டது. வேறு எந்த நிறுவனங்களையும் கலந்துரையாடாமல் ஆகஸ்டா என்ற தனி நிறுவனத்திற்கே இந்த டெண்டர் கொடுக்கப்பட்டது. இதற்கான 30 சதவீதம் கமிஷன் பணம் தவறான முறையில் 1.57 மில்லியன் டாலர் முன்னதாகவே கமிஷன் என்ற பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊழலை முன்னின்று செய்தவர்கள் சத்தீஸ்கரின் முதலமைச்சராக இருந்த ராமன் சிங்கும், அவரது மகன் அபிஷேக் சிங்கும் தான் என்று தெரிய வந்தது. சிஏஜி அறிக்கையின்படி, இந்த ஒப்பந்தம் மூலம் ரூ.65 கோடி பணம் அரசாங்க நிதிக்கு இழப்பை தந்திருக்கிறது என்கிறது. (The Wire 14/2/18) (டைம்ஸ் ஆப் இந்தியா (TOI) 16/11/17)

**2008 – மத்திய பிரதேச வறட்சி ஊழல் :** 2008ஆம் ஆண்டு மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேச பகுதிகளில் வறட்சியில் நிலவும் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக மொத்தமாக ரூ.7400 கோடி ரூபாயை ஒதுக்கியது. அதில் மத்திய பிரதேச அரசுக்கு 3760 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பிறகு, மத்திய பிரதேசத்தில் அப்போது ஆட்சியில் இருந்த பா.ஜ.க. இந்த தொகையில் ரூ.2100 கோடி ரூபாய் அவர்களின் முன்னேற்றத்திற்காக செலவிடப்பட்டதாக கூறியது.

ஆனால் உண்மை என்னவென்று கோப்ரா போஸ்ட் என்ற பத்திரிகை ஆய்வு செய்து வெளியிட்டது. அதில் வறட்சியில் இருந்த மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து அவர்களுக்கு எந்தவொரு முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளும் செய்து தரவில்லை. அதற்கு மாறாக அவர்கள் அதிகாரிகளின் மூலமாக மேலும் அதிகமாக துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என தெரிய வந்தது.

வறட்சி நிலைமையில் பேரழிவை சந்தித்து வந்த மக்களின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்ட நிதியை ஊழல் செய்து பங்கீட்டுக் கொண்டது மத்திய பிரதேச பா.ஜ.க. அரசு.

(TOI 26.3.18) (The Wire 23.11.18)

**2009 மோடி – குஜராத் பெட்ரோலியம் ஊழல் :** குஜராத் மாநில பெட்ரோலிய வாரியம் (GSPC) என்ற நிறுவனம் 1979களிலிருந்து குஜராத் அரசின் கீழ் இயங்கக் கூடியது. கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு சம்பந்தமான பணிகளை செய்யக் கூடிய நிறுவனம் இது.

2002ஆம் ஆண்டிலிருந்து கிருஷ்ணா கோதாவரி நதிப் படுகையில் எரிவாயுவுக்கான சோதனையை நடத்தி வந்தது.

26, ஜூன் 2005ஆம் ஆண்டு குஜராத் முதலமைச்சராக இருந்த மோடி, இந்த பெட்ரோலிய வாரியம் இந்தியாவின் மிகப் பெரிய எரிவாயு இருக்கும் வளத்தை கோதாவரி நதிப் படுகையில் கண்டுபிடித்திருப்பதாகவும், இது ஒன்றே இந்தியாவுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் என்றும் கூறினார். அத்துடன் 1500 கோடியை முதலீடு செய்வதன் மூலம் 2007ஆம் ஆண்டு இங்கு எரிவாயு உற்பத்தி தொடங்கும் என்று அறிவிப்பு செய்தார்.

ஆனால் 2009க்கு பிறகு இதற்கான அனுமதி பெற்றதும், தொடங்குவதற்கு 8465 கோடி தேவைப்படும் என்று சொல்லப்பட்டது. இது 2005இல் மோடி சொன்ன தொகைக்கு 90 சதவீதம் அதிகமானது. 1500 கோடியிலிருந்து 8500 கோடிக்கு மாறியது. தற்போது வரை இந்த நிறுவனம் எந்தவொரு தயாரிப்புகளையும் தொடங்கவில்லை. ஆனால், 2015 வரை மட்டும் பொதுத் துறை மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து 19716 கோடி கடனாக வாங்கியிருக்கிறது. 2015ஆம் ஆண்டு வட்டி மட்டும் 1800 கோடி கடனாக வங்கிகளில் இருந்தது.

3000 கோடி மட்டுமே செலவு செய்திருப்பதாக கணக்கு காட்டியிருக்கும் நிறுவனம் இதர செலவுகளில் மற்றதை சேர்த்திருக்கிறது. இதன் மூலம் குறைந்தது 15,000 கோடிக்கு மேல் இதில் ஊழல் நடந்திருப்பது தெரிய வருகிறது.

(Firstpost 09.12.17) (NDTV 09.5.16)

**மீன் பிடி ஊழல் :** மோடி குஜராத் முதலமைச்சராக இருக்கும்போது அவரது அமைச்சர் புருஷோத்தம் சொலான்கி 400 கோடி ரூபாய் ஊழலை மீன்வளத்துறையில் செய்திருக்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிறார். 2009ஆம் ஆண்டு மீன்வளத் துறை அமைச்சராக இருந்தபோது 58 குளங்களில் மீன்பிடிக்க அனுமதி தரும் டெண்டரில் 200 கோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிறார் என வழக்கு நடந்து வருகிறது.

**2010 – மகா கும்பமேளா ஊழல் – உத்தரகாண்ட் :** மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு 2010ஆம் ஆண்டு உத்தரகாண்டில் நடக்கும் கும்பமேளாவிற்கு 565 கோடியை ஒதுக்கீடு செய்தது. ஆனால் மாநிலத்தில் இருந்த பா.ஜ.க. அரசு இதிலிருந்து 200 கோடியை தனியே எடுத்து விட்டு 300 கோடியை மட்டும் வைத்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்தது.

இதனால் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் எல்லாம் அரைகுறை நிலையிலேயே இருந்தது தெரிய வந்தது.

பிறகு தகவல் அறியும் சட்டத்தின் மூலம், இந்த கும்பமேளா நிகழ்ச்சிக்கு பா.ஜ.க. மாநில அரசு 380 கோடி தான் செலவு செய்தது என்று தெரிய வந்தது. மீதமான 180.07 கோடி பற்றி எவ்வித தகவலும் இல்லை. (India Today 1.4.2015)

ஆன்மிகத்தை கூறி அரசியல் நடத்தி வரும் பா.ஜ.க. எதிலுமே நேர்மையாக இருப்பதில்லை. பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் ஆன்மிக விழாக் களிலேயே ஊழல் செய்திருக்கிறது.

**ரெட்டி சகோதரர்கள் ஊழல் – சுஷ்மா :** ரெட்டி சகோதரர் களின் ஊழலுக்கு பா.ஜ.க. அரசும், இன்றைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் சுஷ்மாவும் எந்தளவு பக்கபலமாக இருந்தார்கள் என்பது வெட்ட வெளிச்சமானது.

காவல்துறை அதிகாரிகள் முதன்முதலில் ரெட்டி சகோதரர்களின் வீட்டுக்குள் நுழையும்போது தான் ரெட்டி சகோதரர்களை பற்றி நாடு தெரிந்து கொண்டது. பல ஏக்கர் பரப்பளவில் வீடு, வீட்டினுள் மட்டும் 50 அறைகள், குண்டு துளைக்காத பாதாள அறை, மூன்று ஹெலிகாப்டர்கள், வீட்டை சுற்றி பாதுகாப்புக்கு மட்டும் 100 பேர், வீட்டினுள் இருக்கும் தங்க நாற்காலியின் விலை மட்டும் 2.2 கோடி ரூபாய் என எவரும் மலைத்து போகும் வசதிகளுடன் வாழ்ந்தனர் ரெட்டி சகோதரர்கள்.

கர்நாடகத்தில் உள்ள பெல்லாரியின் இரும்பு சுரங்கங்கள் சூறையாடப்பட்டதிலிருந்து தான் ரெட்டி சகோதரர்கள் இந்தளவுக்கான வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள் என்பது கர்நாடக மக்கள் அனைவரும் அறிந்ததுதான். பண அதிகாரம் மட்டுமல்ல அரசியல் அதிகாரம் கூட அவர்களிடமே இருந்தது. கர்நாடாகாவில் முதன்முறையாக பா.ஜ.க.வின் இந்து இராஜ்ஜியம் அமைய “ஆபரேஷன் தாமரை”யை நடத்தி கொடுத்தவர்கள் இவர்கள்தாம்.

ரெட்டி சகோதரர்கள் ரூ.16000 கோடி சுரங்க ஊழல் முறைகேடுகளை வெளிக் கொண்டு வந்தார் கர்நாடகாவின் அப்போதைய லோக் ஆயுக்தாவின் நீதிபதி சந்தோஷ் ஹெக்டே. 16 மாத தனிப்பட்ட அவரது போராட்டங்களுக்கு பிறகே குற்றச்சாட்டின் பெயரில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வந்தது.

இப்பேர்ப்பட்ட ஊழல் பேர் வழிகளின் அரசியல் ரட்சகர் இன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஆண்டுதோறும் அவர்கள் வீட்டில் நடக்கும் சிறு சிறு நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்பவர். அவ்வளவு நெருக்கம் பாராட்டியவர்.

இறுதியில் சுரங்க ஊழல் வெளிவந்து 2011ஆம் ஆண்டு ஜனார்தன ரெட்டி சிறையில் அடைக்கப்படும்போது தான் ரெட்டிகளை கைவிட்டார் சுஷ்மா. அதுவரை சுஷ்மா அவர்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுத்து வந்தார். காரணம், ரெட்டி சகோதரர்கள் ஓசையில்லாமல் ‘ஆபரேஷன் சுஷ்மா’ என்று சுஷ்மாவை பிரதமராக கொண்டுவரும் முயற்சியை செய்து வந்தனர்.

**ஒரு வெளியுறவுத் துறை அமைச்சரின் குடும்பமே ஒரு தேடப்படும் குற்றவாளிக்காக, அவரை காப்பாற்றுவதற்காக வேலை செய்திருக்கிறது. இந்த நிலையில் மோடியின் அரசு ஊழலுக்கு எதிரானது என்ற பிரச்சாரம் எவ்வளவு வேடிக்கையானது.**

பா.ஜ.க. ஊழல்வாதிகளுக்கு எதிரான கட்சி என்று வேஷம் போட்டுக் கொண்டாலும், அவர்களின் சேவை முழுவதும் இந்த ஊழல்வாதிகளுக்காகத்தான் இருக்கும். (தி இந்து 19.6.15)

**உத்தரகாண்ட் சிடுர்கியா ஊழல் :** உத்தரகாண்ட் முதலமைச்சர் ரமேஷ் போஹரியால் நிசாங்க், சிடுர்கியா பயோகெமிக்கல் நிறுவனத்திற்கு நில ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்திருக்கிறது. இந்த நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட 30 ஏக்கர் இடம் 400 கோடி ரூபாய் செலவில் ரிஷிகேஷ் வீட்டு திட்டமாக மாற்றப்பட்டது.

இதே ரமேஷ் போக்ரியால் 400 கோடி நில ஊழலில் ஈடுபட்டுள்ளார். நிலம் கொடுக்கப்பட்ட நடைமுறையில் பல முரண்பாடுகள் சட்ட விதி மீறல்கள் இருக்கிறது.

தனியார் மனை விற்பனை நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதற்காகவே நடந்த ஊழல் இது. (இன்டியா டுடே 26.6.10)

**2012 – குஜராத் நிலநடுக்க நிவாரண நிதி ஊழல் :** குஜராத் மாநிலத்தில் 2001 நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பள்ளிகளை சீரமைக்க 21.01 இலட்சம் வழங்கப்பட்டது. இந்த நிதியில் குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. சங்கர் சௌதாரி ஊழல் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் எம்.எல்.ஏ. சங்கர், அந்த பணத்தை 10 சதவீத வட்டியுடன் சேர்த்து திருப்பி கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டது. (இண்டியன் எக்ஸ்பிரஸ் 7.7.12)

**2013 – குஜராத் கிப்ட் சிட்டி ஊழல் :** மோடி குஜராத் முதலமைச்சராக இருக்கும்போது குஜராத்தின் காந்தி நகர் பகுதியில் கிப்ட் சிட்டி என்ற ஒரு வளர்ச்சி மிகுந்த நகரம் உருவாக்கப்படும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் எல் அண்ட் டி, ஃபோர்டு, எஸ்ஸார் போன்ற நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இதில் குஜராத் மந்திரி சபை நிலம் வழங்குவதில் பெரிய ஊழல் செய்ததாக மத்திய அரசின் தணிக்கை அறிக்கை (சிஏஜி) கூறுகிறது. ரூ.2700 கோடி ரூபாய் பெருமானம் உள்ள நிலத்தை குஜராத் அரசு, தனியார் நிறுவனங்களுக்கு வெறும் ரூ.1க்கு கொடுத்திருப்பதாக சிஏஜி அறிக்கை அளித்திருக்கிறது.

2700 கோடி ரூபாய் நிலம் வெறும் 1 ரூபாய்க்கு! இந்த மோசடிகளை செய்தவர்கள் எல்லாம் ஊழலுக்கு எதிரானவர்களா? (இண்டியன் எக்ஸ்பிரஸ் 3.4.13)

**2014 – பாதுகாப்புத் துறை எக்ஸ்போ ஊழல் (கோவா) :** முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், தனது சொந்த மாநிலமான கோவா மாநிலத்தில் உள்ள

பெட்டுல் என்ற இடத்தில் உள்ள 150 ஏக்கர் கடற்கரை பகுதியை பாதுகாப்பு அமைச்சகத்துக்கு ஒதுக்குவதாக கூறியது பெரும் சர்ச்சையை கோவாவில் உருவாக்கியது.

ஏனென்றால், கோவாவின் முதலமைச்சராக பாரிக்கர் இருக்கும்போது கோவாவின் நிலத்தை மத்திய அரசுக்கு தர முடியாது என்று கடுமையாக பேசியிருந்தார். அவரே மத்திய அமைச்சரான பிறகு அதனை மீறுகிறார் என்றும் கோவாவில் நிலம் கொடுக்க முடியாது என்றும் கோவாவில் போராட்டம் தொடர்ந்தது.

ஆனால் பின்னாளில் கோவாவில் மனோகர் பாரிக்கருக்கே பா.ஜ.க. முதலமைச்சர் பதவியை கொடுத்தது. சூழலுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தியை போல மீண்டும் கோவாவில் தர வேண்டிய நிலத்தை தமிழ்நாட்டுக்கு மாற்றி விட்டார். இவை அனைத்தும் திரை மறைவில் நடந்து முடிந்தது. தமிழகக் கடற்கரைப் பகுதி - பாதுகாப்புத் துறைக்குப் பறி போனது. (TOI 19/1/18) (rediff 23/11/15)

**இராஜஸ்தானில் 17,000 பள்ளிகள் மூடல் :** இராஜஸ்தானில் உள்ள பா.ஜ.க.வை சேர்ந்த வசுந்தரா ராஜே அரசு ஆகஸ்ட் 2014ஆம் ஆண்டு 17000 அரசு பள்ளிகளை ஒரேயடியாக மூடியது. மூடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் அருகிலிருக்கும் பள்ளிகளில் இணைத்துக் கொள்ள வழிவகை செய்வதாகவும் கூறியது.

ஆனால் பிற்காலத்தில் மூடப்பட்ட பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பெரும்பாலானோர் பெரும் துன்பத்திற்கு ஆளானவர்களாகவும், பலர் படிப்பை பாதியில் விட்டவர்களாகவும் மாறினர்.

ஆனால் அரசு எதற்காக இம்முடிவை எடுத்ததோ அது மட்டும் சிறப்பாக நடந்தது. ஆம், தனியார் பள்ளியின் மாணவர் சேர்க்கை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமானது.

மூடப்பட்ட பள்ளிகளில் இருந்து பல மாணவர்கள் கட்டாயத்தின் பேரில் வேறு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். தலித் மாணவர்களை, அவர்களைவிட உயர்ந்த சாதி மாணவர்களின் பள்ளிகளில் இணைத்ததால் பலர் பள்ளிக்கே வரவில்லை. அதேபோல், மாணவிகள் மட்டும் படிக்கும் பள்ளியில் படித்த மாணவிகள் கட்டாயம் ஆண்களும் பெண்களும் கலந்து படிக்கும் பள்ளிக்கு மாற்றப்பட்டனர். உருது, சிந்தி மொழிகளை தேர்ந்தெடுத்து அதில் படித்து வந்த மாணவர்கள் கட்டாயமாக இந்தி மட்டும் உள்ள பள்ளிக்கு மாற்றப்பட்டனர்.

வசதி அடிப்படையிலும் கழிப்பறை இல்லாத பள்ளிகளுக்கும் பல மாணவர்கள் மாற்றப்பட்டனர். அதேபோல 4 கி.மீ. தொலைவுக்கு மேல் முதலாம், இரண்டாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள்கூட செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மொத்தமாக, 2012-2013இல் 72 இலட்சமாக இருந்த சேர்க்கை. 2014ஆம் ஆண்டு 68 இலட்சமாக குறையும் நிலைக்கு ஆளாக்கப்பட்டது.

2014-2016 காலகட்டத்தில் அடிப்படை வசதி இல்லாமையாலும் மொழிப்பாடம் இல்லாமையாலும் 1.4 இலட்சம் மாணவர்கள் பள்ளி வேண்டாம் என்று வெளி வந்ததாக மாவட்ட தகவல் நிலையம் சொல்கிறது. ஆனால் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

பள்ளி மூடப்பட்டதில் பல்வேறு ஊழல் அடங்கியுள்ளது. முதலாவது வறுமையால் உழலும் ஒடுக்கப்பட்ட மக்கள் பள்ளிப் படிப்பை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அடுத்தது, இதன் மூலம் தனியார் கல்வி நிறுவனம் பெரும் இலாபம் அடைந்தது. (The Hindu 29/9/14) (scrol 3/3/17) (TOI 6/1/15)



**2015 - லலித் மோடி ஊழல் - ஊழலுக்கு உதவிய மோடி அரசு :** 2010ஆம் ஆண்டு நடந்த ஐபி.எல். போட்டியில் மேட்ச் பிக்சிங், சூதாட்டத்தில் சுமார் ரூ.425 கோடிக்கு ஊழல் நடந்துள்ளதாகவும், இதில் லலித் மோடிக்கு தொடர்பு இருப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இதற்கிடையில் 2010ஆம் ஆண்டு திடீரென இங்கிலாந்து தலைநகர் இலண்டனுக்கு லலித் மோடி தப்பி சென்றவர் இந்தியாவுக்கு திரும்ப மறுத்து விட்டார். அதுமட்டுமல்ல, நிதி மோசடி, சூதாட்டம், தில்லுமுல்லு உள்ளிட்ட 16 வழக்குகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிற லலித் மோடி ரூ.1700 கோடி நிதி மோசடி செய்திருக்கிறார். அதனால், தேடப்படும் குற்றவாளி என மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு அறிவித்து அவரது பாஸ்போட்டையும் தடை செய்தது.


இந்தியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பிறகு, தன் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று போர்ச்சுக்கல் நாட்டுக்கு செல்ல விசா கோரி இங்கிலாந்து அரசிடம் முறையிட்டிருந்தார் லலித் மோடி. இந்நிலையில் ஒரு தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட ஒருவருக்கு விசா வழங்கக் கோரி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இங்கிலாந்து அரசுக்கு நெருக்கடி தந்தார் என்ற செய்தி வெளி வந்தது.

சுஷ்மாவுக்கும், குற்றவாளி லலித் மோடிக்கும் உள்ள நெருக்கம் தொடக்கக் காலத்திலிருந்தே மிக அதிகம். அதை லலித் மோடியே சொல்கிறார், “சுஷ்மா என் குடும்ப நண்பர். அதைத் தாண்டி சட்ட ரீதியான (தொழில் ரீதியான) உறவும் எங்களுக்குள் இருக்கிறது. சுஷ்மாவின் கணவர் ஷ்வராஜ் 22 ஆண்டுகளாக எனக்கு சட்ட ஆலோசனை வழங்கி வருகிறார். சுஷ்மாவின் மகள் கடந்த 4 ஆண்டுகளாக எனது வழக்குரைஞராக இருந்து வருகிறார்.

தனது உறவினர் பையனுக்கு பிரிட்டனின் சஸ்ஸெக்ஸில் உள்ள கல்லூரியில் இடம் வாங்கித் தருமாறு லலித் மோடியிடம் கேட்டிருக்கிறார் சுஷ்மாவின் கணவர் ஸ்வராஜ் கோசல். அதே போல் குற்றம் சாட்டப்பட்டு 2010ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு பாஸ்போர்ட்டை முடக்கியபோது, அது செல்லாது என்று நீதிமன்றத்தில் லலித் மோடிக்காக வாதாடியவர் சுஷ்மாவின் மகள் பன்சூரி.

ஒரு வெளியுறவுத் துறை அமைச்சரின் குடும்பமே ஒரு தேடப்படும் குற்றவாளிக்காக, அவரை காப்பாற்றுவதற்காக வேலை செய்திருக்கிறது. இந்த நிலையில் மோடியின் அரசு ஊழலுக்கு எதிரானது என்ற பிரச்சாரம் எவ்வளவு வேடிக்கையானது.

அதுமட்டுமல்லாமல் லலித் மோடி விசா கேட்டுக் கொண்டிருந்த அதே நேரம் சுவிஸ் வங்கியில் இந்தியர்கள் வைத்திருக்கும் பணத்தின் மதிப்பு 12615 கோடி என்று சுவிட்ஸர்லாந்து வங்கி அறிக்கை வெளியிட்டது. அதாவது முன்பு இருந்த பணத்திலிருந்து 10.6 சதவீதம் பணம் குறைந்திருந்தது. அதாவது இந்தியாவிலிருந்து சுவிஸ் வங்கியில் போடப்பட்டிருந்த கருப்புப் பணம் பாதுகாப்பாக வெளியில் எடுக்கப்பட்டிருக்கிறது. லலித் மோடியின் விசா, சுவிஸ் வங்கியில் பாதுகாப்பாக எடுக்கப்பட்டிருக்கும் பணம் என்று லலித் மோடிக்கு விழுந்து விழுந்து உதவியிருக்கிறது பா.ஜ.க. ஆட்சி. (தி இந்து, 15.6.15 - 19.6.15)



**அருண் ஜெட்லி – கிரிக்கெட் ஊழல் :** டெல்லி மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் (DCCA) தலைவராக 13 வருடம் இருந்த அருண் ஜெட்லி, இந்த சங்கத்தின் மூலம் நிறைய ஊழல் நடத்தியுள்ளதாக ஆதாரங்களுடன் ஆம் ஆத்மி கட்சி குற்றம் சாட்டுகிறது. அணிகள் தேர்வு செய்யப்படுவதில் போலியான நிறுவனங்கள் மூலம் ஒழுங்கற்ற நிர்வாகம் நடந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

கிரிக்கெட் சங்கத்தின் உள் ஆய்வுக் குழுவும், டெல்லி அரசும் இணைந்து நடத்திய விசாரணையில், கிரிக்கெட் வாரியத்தில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்றும், அது ஜெட்லி தலைமையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடத்தப்பட்டிருக்கிறது என கூறுகிறது.

பெரோஷ் ஷாஹ் ஸ்டேடியம் புணரமைக்க ரூ.24 கோடி தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இறுதியில் ரூ.90 கோடிக்கான செலவு செய்யப்பட்டிருப்பதாக காட்டப்பட்டு இறுதியில் ஐந்து நிறுவனங்களுக்கு இந்த தொகை பிரித்து கொடுக்கப்பட்டது. ஆனால் இறுதியில், பணத்தை பெற்றுக் கொண்ட ஐந்து நிறுவனங்களும் ஒரே இயக்குனர்களின் கீழ் இயங்குவதும், ஐந்து நிறுவனங்களுமே ஒரே முகவரியில் இயங்குவதாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், வேலையே செய்யாத நிறுவனங்களுக்கு போலியாக ஆவணங்கள் உருவாக்கப்பட்டு பண பரிமாற்றம் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் கிரிக்கெட் வீரர் கிர்தி ஆஜாத், கிரிக்கெட் வாரிய நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பது தணிக்கையில் தெரிய வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டி விசாரணையை தீவிரப்படுத்த வேண்டும் என்றார்.

தணிக்கைக் குழுவின் அறிக்கையும் அருண் ஜெட்லியையே குற்றவாளியாக மையப்படுத்துகிறது. ஆனால் அருண் ஜெட்லி மீதான புகார் அவரது பதவி மூலமும், சார்ந்த கட்சி மூலமும் திசை திருப்பப்பட்டு இந்த ஆய்வு அறிக்கைகளையே கணக்கில் எடுத்துக் கொள்ளாத நிலை ஏற்பட்டது. (Rediff 17.12.15) (Caravan 24.10.17)

**ரேஷன் அரிசியில் 36,000 கோடி ஊழல் :** சத்திஸ்கர் மாநிலத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு ரூ.36,000 கோடிக்கு ஊழல் செய்திருப்பதாக காங்கிரஸ் கட்சி ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகிறது. சத்திஸ்கரில் ஒரு கிலோ அரிசி ரூ.1 என்ற விலைக்கு அம்மாநில அரசு மானியமாக வழங்கி வருகிறது. இந்த மானிய விலை பொருட்கள் வழங்கும், பொது விநியோகத் துறையில் ஊழல் நடப்பது கண்டறியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இலஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் சட்டவிரோத ஆவணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

ஆலை உரிமையாளர்கள், கடை உரிமையாளருக்கும் கமிஷன் போக, முதலமைச்சராக உள்ள ராமன் சிங் குடும்பத்திற்கு சொந்தமான பண்ணைகளுக்கு, பொது விநியோகத் துறையில் இருந்து அரிசி, எண்ணெய், கோதுமை உள்ளிட்ட பொருட்கள் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அரிசி விநியோகத்தில் மட்டுமின்றி உப்பு, பருப்பு, மண்ணெண்ணை உள்ளிட்ட ஏழைகளுக்கு வழங்கப்படும் அனைத்து பொருட்களிலும் ஊழல் நடைபெற்றுள்ளது.

பா.ஜ..க மற்றும் ஆர்.எஸ்.எஸ்.சின் ஒவ்வொரு தலைமையகங்களுக்கும் அரசின் பொது நிதியிலிருந்து ரூ.16 கோடியை முதல்வர் ராமன் சிங் கொடுத்துள்ளார். ஆனால், எதற்காக வழங்கப்பட்டது என்று முதல்வரும் சொல்லவில்லை. இரு அமைப்புகளும் சொல்லவில்லை.

இந்த ஊழலில் பா.ஜ.க. முதல்வர் ராமன்சிங், அவரது மனைவி, மைத்துனி, சமையல்காரர் என நான்கு பேர் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்கள். ஊழல் தடுப்பு அமைப்பு நடத்திய சேதனையில் கிடைக்கப் பெற்ற முக்கிய ஆவணங்களான டைரி, பென்ட்ரைவ் போன்றவற்றில் முதல்வரின் பெயரும், அவரது மனைவி பெயரும் இடம் பெற்றிருக்கிறது. அதேபோல் ஊழலில் கிடைத்த பணம் டெல்லி, நாக்பூர், லக்னோவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஊழல் தடுப்பு நிறுவனம் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறது. (இந்துஸ்தான் டைம்ஸ் 25.7.15) (தினமலர் 5.7.15) (விகடன் 5.7.15)

**நில ஊழல் – கர்நாடகா :** தற்போதைய சட்ட ஒழுங்கு துறை அமைச்சர் சந்தான தேவகோடா, கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது 10 ஏக்கர் நிலத்தை சட்ட விரோதமான முறையில் தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளித்தார். ஏக்கருக்கு 3 கோடி பெருமானமுள்ள அந்த நிலத்தை ஏக்கருக்கு வெறும் 60 இலட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டு கொடுத்தார். இது 2017ஆம் ஆண்டு வருமான வரித் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்பந்தம் கைவிடப்பட்டது. (நியூஸ் மினிட் 10.12.15)

**நில உழல்-கேரளா:** கோவாவின் முன்னாள் முதலமைச்சர் லக்ஷ்மிகாந்த் பர்சேகரின் உதவியோடு அவரது சகோதரியின் கணவர் திலிப் மல்வங்கர் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தை திரும்ப பெறுவதற்காக இன்னொருவரிடம் இருந்து இலஞ்சம் பெறப்பட்டது தெரிய வந்து இலஞ்ச ஒழிப்புத் துறையால் கைது செய்யப்பட்டார்.

**மகாராஷ்டிரா தீ அணைப்புக் கருவி ஊழல் :** *மகாராஷ்டிராவில் பா.ஜ.க.வைச் சேர்ந்த, கல்வித் துறை அமைச்சராக இருந்த வினோத் தாவ்டே, தீ அணைப்புக் கருவி வாங்குவதில் 191 கோடி ரூபாயை ஊழல் செய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார். டெண்டர் வழங்குவதில் முறைகேடு செய்து தனிப்பட்ட தான் விரும்பிய நிறுவனத் திற்கு ஒதுக்கீடு செய்ததில் இந்த ஊழல் வெளி வந்தது.*

*பல் மருத்துவ படிப்புக்கான நுழைவுத் தேர்வில் வியாபம் ஊழலைவிட பெரிய அளவிலான ஊழல் நடைபெற்றிருப் பதாக சி.பி.ஐ. கூறுகிறது.*

*பா.ஜ.க. அரசுக்கு கீழாக இருந்த மத்திய பிரதேசத்தில், ஆயிரத்திற்கும் அதிகமான தகுதி குறைந்த மாணவர்கள் மேனேஜ்மென்ட் கோட்டாவில் சேர்க்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டை விசாரிக்க சிபிஐக்கு உச்சநீதிமன்றம் உத்தர விட்டிருந்தது. அதன் பெயரிலேயே சி.பி.ஐ. பெரும் ஊழல் நடந்திருப்பதாகவும் ஆள் பற்றாக்குறை இருப்பதால் விசாரணையில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தது.*

*மொத்தம் 15 பல் மருத்துவ தனியார் கல்லூரிகளும், 6 தனியார் மருத்துவ கல்லூரிகளும் மத்திய பிரதேசத்தில் இருக்கின்றன. இதிலுள்ள 2800 இடங்களுக்கான நுழைவுத் தேர்வை 'ஏ.டி.பி.எம்.சி.' என்ற அமைப்பு நடத்துகிறது. இந்த தேர்வு மூலமே சேர்க்கை நடைபெறுகிறது. 42 சதவீதம் மாநில அரசு ஒதுக்கீடு, 43 சதவிதம் மேனேஜ்மென்ட் ஒதுக்கீடு, 'என்.ஆர்.அய்.' களுக்கு (வெளிநாடுகளில் வாழ்வோர்) 15 சதவீதம் ஒதுக்கீடு என்ற முறையில் சேர்க்கை நடைபெறு கிறது. ஆனால் இந்த 43 சதவீதம் ஒதுக்கீடு, நுழைவுத் தேர்வில் எடுக்கும் மதிப்பெண் முறையில் சேர்க்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.*

*ஆனால், பணம் மூலம் வாங்கப்படும் சீட்டுகளில் சேர்க்கப்படும் மாணவர்கள் நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு வெள்ளைத் தாளை அப்படியே வைத்து விடுவார்கள். தேர்வு முடிந்த பிறகு அந்த தாளில் விடைகளை எழுதி அவரை தேர்ச்சி பெறச் செய்து அவருக்கான இடம் உறுதி செய்யப்படுகிறது.*

*மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சவுஹனின் மனைவி சாதனா சிங்கின் சகோதரர் மகளுக்கும், மாநில அரசின் கீழ் உள்ள நான்கு அமைச்சர்களின் உறவினர் களுக்கும் இப்படி சேர்க்கை வழங்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.*

*'டி.எம்.ஏ.டி.' நுழைவுத் தேர்வு மூலம் ரூ.8000 முதல் ரூ.10000 கோடி வரை ஊழல் நடந்திருக்கிறது என்கிறார்கள் சிபிஐ அதிகாரிகள்.* (TOI 13.8.15) (Wire 14.7.15) (The Hindu 15.8.15) (TOI 31.190.17)

**பருப்பு ஊழல் (குஜராத் மற்றும் மகாராஷ்டிரா) :** *பா.ஜ.க. ஆட்சி செய்த குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் 2015-16ஆம் ஆண்டில் மிகப் பெரும் பருப்பு நெருக்கடி ஏற்பட்டது. இது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஊழல். ஆனால் இதை தவிர்க்க வேண்டிய மோடி அரசு கைகட்டி வேடிக்கைப் பார்த்தது. மக்களவைத் தேர்தலின்போது அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பேன் என்று மோடி சொல்லியிருந்தார். ஆனால் 15 மாதங்கள், 1 கிலோ, 70 ரூபாய்க்கு விற்ற பருப்பு ரூ.200க்கு விற்கப்பட்டது.*

*இந்த விலையேற்றத்திற்குக் காரணம், மத்திய அரசின் தவறான கொள்கைகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததும் தான். மேலும் இயற்கையாக உருவான விலையேற்றம் அல்ல இது. வியாபாரிகளால் திட்டமிட்டு விலையேற்றப்பட்டு விற்பனைக்கு வரும் வணிக ஊழல் இங்கு நடந்திருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் கோடி ஊழல் நடந்திருக்கிறது.*

*நமது நாட்டில் விளையும் பருப்பு 70 சதவீதம் மட்டுமே நம் நாட்டிற்கு போதுமானதாக இருக்கிறது. மீதம் எல்லாம் இறக்குமதி செய்யப்படுவதுதான். ஆனால் இந்த இறக்குமதிக்கு ஏற்பட்ட கால தாமதமே பருப்பு விலை உச்சத்திற்கு சென்றதற்குக் காரணம். இந்த தாமதமும் தானாக ஏற்பட்டது இல்லை. திட்டமிட்டு ஏற்படுத்தப் பட்டது.*

*மியான்மர், ஆஃப்ரிக்க நாடுகளான கென்யா, டான்சானியா போன்ற நாடுகளில் இருந்துதான் அதிக இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் வெளிநாட்டு துறைமுகங்களில் பதுக்கப்படுகிறது.*

*அங்கிருந்து தேவையான நேரத்தில் கப்பல் மூலமாக இறக்குமதி செய்யப்படும். இங்கு பருப்பு தட்டுப்பாடு ஏற்படும்போது அந்தத் தட்டுப்பாட்டின் வீரியத்தை வளர விடுகின்றன நிறுவனங்கள். பிறகு பருப்பின் விலை உச்சத்தை அடையும்போது அதிக விலைக்கு பருப்பு உள்நாட்டில் வணிகர்களுக்கு விற்கப்படுகிறது. வணிகர்கள் இதனை மேலும் தங்களுக்கான இலாபத்தை சேர்த்து நுகர்வோரான மக்களுக்கு அளிக்கிறார்கள்.*

*2.50 இலட்சம் கோடி ஊழலுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம், நிர்வாகம் செய்ய தெரியாமல் வேடிக்கைப் பார்த்த மோடி அரசையே சாரும். (தி இந்து 18.10.15), (எக்னாமிக் டைம்ஸ் 30.7.16), (இண்டியா டுடே 23.11.15), (பிசினஸ் ஸ்டாண்டர்ட் 29.7.16)*

**ரஃபேல் ஊழல் :** *இந்திய விமான படைக்கு போர் விமான பற்றாக்குறை இருப்பதால், 2007ஆம் ஆண்டே, அன்று ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு, விமான தயாரிப்பு நிறுவனங்களுக்கு டெண்டர் விட்டது. அதில், லாக்ஹீட் மார்ட்டின், எஃப் 16, தசால்ட் ரஃபேல், போயிங் எஃப்/ஏ, ருஷ்யா எம்.ஐ.ஜி-25, சுவீடன் சாப்ஸ் கிரிஃபன், ஈரோஃபைட்டர் டிஃபூன் போன்ற பல நிறுவனங்கள் கலந்து கெண்டன. இறுதியில் டசால்ட் ரஃபேல் நிறுவனம் தான், ரஃபேல் போர் விமானத்தை தயார் செய்யும் பொறுப்பைப் பெற்றது.*

*பல கட்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு, 2012இல் 54000*

கோடிக்கு குறைவாக 126 ரஃபேல் போர் விமானங்களை தயாரித்து தருவதாகவும், அதில் 18 பிரான்சில் உள்ள தங்கள் நிறுவனத்திலிருந்து பறக்கும் நிலையிலும், மீதி 108 விமானங்களை எச்.ஏ.எல். (இந்துஸ்தான் ஏரோனாட்டிக் லிமிடெட்) என்ற இந்தியாவின் பொதுத் துறை நிறுவனத்திற்கு தனது தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்து இந்தியாவிலேயே தயாரித்து தருவதாகவும் டசால்ட் நிறுவனம் ஒப்புக் கொண்டது. பிறகு 2014 ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று. இந்த ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையெழுத்தானது.

2014ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு பிரதமர் மோடி 2015ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்குப் பயணம் மேற்கொள்கிறார். அப்போது முன்னால் போடப்பட்டிருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து இராணுவ விமானம் சம்பந்தமாக புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது. அதில் 36 ரஃபேல் போர் விமானங்களும் பிரான்சிலேயே தயாரித்துத் தரப்படுவதாக முடிவு செய்யப்பட்டது.

பிறகு இந்த அறிவிப்பை வெளியிட்ட, அப்போது இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர், இந்தியாவிற்கு அதிக போர் விமானத்திற்கான தேவை இல்லை. மேலும் முன்னாள் சொல்லப்பட்ட ஒப்பந்தத்திற்கான நிதி ஒதுக்கீடு அளவும் அதிகமாக உள்ளதாகவும், அதனாலேயே ஒப்பந்தம் மாற்றப்பட்டிருப்பதாகவும் கூறினார். ஆனால், பாதுகாப்புத் துறையில் சிறப்பு அனுபவம் வாய்ந்த சுக்லா, சொல்லும்போது, இந்தியாவிற்கு 200க்கும் அதிகமான போர் விமானங்களின் தேவையிருக்கும் நிலையில் இப்படியொரு முடிவு எடுப்பது அவசியமற்றது என்கிறார்.

ஜூலை 2015இல், காங்கிரஸ் ஆட்சி காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செப். 28, 2016ஆம் ஆண்டு பிரான்சின் டசால்ட் நிறுவனத்துடன் இணைந்து, அனில் அம்பானியின் ரிலையன்ஸ் பாதுகாப்பு தனியார் நிறுவனம் 36 ரஃபேல் போர் விமானங்களை 58,000 கோடி செலவில் தயார் செய்ய வேண்டும் என்று மோடி அரசால் ஒப்பந்தம் போடப்பட்டது. 2017 பிப். 16இல் அதிகாரப்பூர்வமாக உறுதியும் செய்யப்பட்டது.

ஆனால் போடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள முரண்பாடுகள், பலத்த சந்தேகத்தை உருவாக்குவதுடன், நாட்டின் பாதுகாப்புத் துறையில் பெரிய ஊழல் நடந்திருப்பதையும் வெளிச்சமிட்டு காட்டுகிறது. (தி ஒயர் 17.11.18)

இது தொடர்பாக பல முறைகேடுகளை ஒவ்வொன்றாக ஆவணங்களுடன் ‘இந்து’ ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தி வருகிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தில் 126 ரஃபேல் விமானங்கள் 54000 கோடிக்கு குறைவாக தயார் செய்து தர வேண்டும் என்று இருந்தது. ஆனால் மோடி அரசால் போடப்பட்ட ஒப்பந்தம், வெறும் 36 விமானங்களுக்கு 58000 கோடி என நிர்ணயிக்கிறது. ஆட்சி மாற்றம் நிகழ்ந்த நான்கு ஆண்டுகளுக்குள் எதற்காக இந்த இமாலய வித்தியாசத்தில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்? (தி ஒயர் 17.11.18)

எண்ணிக்கை 36 ஆக குறைந்ததற்கு இந்தியாவிற்கு பெரிய எண்ணிக்கையில் போர் விமானம் அவசியம் இல்லை என்றும், பொருளாதார ஒதுக்கீடு போதாது என்றும் அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர் கூறினார். ஆனால் 126 போர் விமானங்களுக்கு 54000 கோடி, நாட்டின் நிதிநிலை பிரச்சினை என்றால், 36 விமானங்களுக்கு 58000 கோடி ஒதுக்கீடு எப்படி சரியாகும்? (தி ஒயர் 17.11.18)

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தில் 126 விமானங்களில் 18 மட்டும் பிரான்சிலும் மீதி 108 விமானங்கள் இந்தியாவின் பொதுத் துறை நிறுவனமான எச்.ஏ.எல். உடன் இணைந்து தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் செய்த தரப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், மோடி அரசால் போடப்பட்ட ஒப்பந்தம் 36 விமானங்களும் பிரான்சில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் கட்டாயம் இல்லை என்றும் சொல்கிறது. பா.ஜ.க. தன் விளம்பரங்களில் எல்லாம் ‘மேக் இன் இந்தியா’ என்று ஒவ்வொரு முறையும் சொல்கிறது. ஆனால் இந்தியாவின் பாதுகாப்புத் துறைக்கு கிடைக்க இருந்த பெரும் தொழில்நுட்ப வளர்ச்சியை கிடைக்க விடாமல் செய்தது ஏன்? (தி ஒயர் 17.11.18)

இந்தியாவின் பொதுத் துறை நிறுவனமாக உள்ள இந்துஸ்தான் ஏரோனாட்டி நிறுவனத்திற்கு SU-30MKI, Tejas போன்ற விமானங்களை தயாரித்திருக்கிற அனுபவம் இருக்கிறது. ஆனால் எவ்வித அனுபவம் சிறிதும் இல்லாத அம்பானியின் ‘ஆர்.டி.எல்.’ நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருப்பது ஏன்? மோடியின் இம்முடிவு பாதுகாப்புத் துறையின் கொள்கை விதிகளுக்கே எதிரானது என்கிறார் பாதுகாப்புத் துறை நிபுணர் அஜாய் சுக்லா. (National Herald 18.2.18)

முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரியாக மாறிய எம்.ஜி. தேவசகாயம், பிரதம அமைச்சர் இந்த நாட்டினுடைய மக்களின் பணத்தை செலவு செய்வதில் பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். இதில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். இதற்கு பதிலளிக்க வேண்டிய தற்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சரின் (நிர்மலா சீதாராமன்) போக்குகளை பார்க்கும் போது, இந்த ஒப்பந்தம் அவருக்கு விளையாட்டாக தெரிகிறது. இது பாதுகாப்பு சம்பந்தமான ஒப்பந்தம். ஆயிரக்கணக்கான கோடி சம்பந்தப்பட்டது. பாதுகாப்பு கொள்கை விதிகளின்படி, குறிப்பிட்ட அனுபவம் இருக்கும் நிறுவனங்களுக்கே இணைந்து தயாரிக்கும் உரிமையை கொடுக்க வேண்டும். ஆனால் அம்பானியின் ஆர்.டி.எல். நிறுவனத்திற்கு இதில் ‘அரிச்சுவடியே’ கூட தெரியாது.

எல் அண்ட் டி நிறுவனம் 40 வருட அனுபவம் கொண்டது. டாடா 30 வருட அனுபவம் கொண்டது. ஆனால், எந்த அனுபவமும் இல்லாத நிறுவனத்திற்கு ஒதுக்கியிருப்பது திட்டவட்டமாக மிகப் பெரிய ஊழல் என்கிறார். (National Herald 18.2.18)

அனில் அம்பானியும், பிரதமர் மோடியும் நண்பர்களாக இருக்கலாம். ஆனால் அதற்காக, இந்தியாவின் பாதுகாப்புத் துறை சம்பந்தமான ஒப்பந்தத்தை முடிவு செய்ய அவரை

உடன் அழைத்துச் சென்று அந்த ஒப்பந்தத்தையும் அவருக்கே வழங்குவது மிகப் பெரிய ஊழல். ரஃபேல் ஒப்பந்தம் பெற்று தந்த அதே வருடத்திலேயே அம்பானியை ரஷ்யாவிற்கும் உடன் அழைத்துச் சென்று ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இந்தியாவின் பாதுகாப்பிற்காக வேலை செய்ய வேண்டிய பிரதமர் மோடி, தொழிலதிபர் அனில் அம்பானிக்காக பறந்து பறந்து வேலை செய்வது ஏன்? (National Herald 18.2.18)

ரஃபேல் ஊழலில் பிரதமர் மோடிக்கு நேரடியாக பங்கு இருப்பதை சில புலனாய்வு நிறுவனங்கள் கூறியதால் அதன் பேரில் விசாரணை தொடங்கவிருந்த காரணத்திற்காகவே சிபிஐ இயக்குனர் அசோக் வர்மா அவர்களை, வேக வேகமாக அப்பதவியிலிருந்து நீக்கம் செய்தது என்று பிரபல மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூசன் சொல்கிறார். (Financial Express 25.11.18)

ஒப்பந்தம் போடப்பட்டபோது பிரான்ஸ் அதிபராக இருந்த பிரான்கொயிஸ் ஹாலண்டே, இந்த ஒப்பந்தத்தை அம்பானி நிறுவனத்திற்கு கொடுக்கும்படி மோடி கேட்டுக் கொண்டார் எனவும், மற்ற நிறுவனங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை என்றும், பத்திரிகைகளுக்கு சொல்லியிருக்கிறார். (rediff 4.1.19)

இந்த ரஃபேல் விமான ஒப்பந்தத்தில் 40,000 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊழலை மோடி நேரடியாகவே முன்னின்று நடத்தி யிருக்கிறார்.



**அமித்ஷா மகன் ஜெய்ஷா விஸ்வரூப வளர்ச்சி :** மோடி தனது நாடாளு மன்ற தேர்தல் பிரச்சார மேடை களில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் 15 இலட்சம் பணமும், விவசாயிகளின் வருமானம் இருமடங்காக்கப்படும். பல கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று சொன்னார்.

சொன்னவற்றில் ஒன்றைகூட காப்பாற்ற முடியவில்லை என்றாலும் இருந்த சிறுதொழில்களை நாசமாக்கி, விவசாயிகளின் தற்கொலைகளை எப்போதும் இல்லாத அளவு அதிகமாக்கி, இருந்த வேலை வாய்ப்பை எல்லாம் திட்டங்கள் என்ற பெயரில் அழித்து விட்டு சாமானியனின் வாழ்வாதாரத்தையே அழித்தவர், தனியார் பெரும் தொழி லதிபர்களுக்கு மட்டும் பெரும் சேவையாற்றி யிருக்கிறார். இந்த வரிசையில் பா.ஜ.க.வின் தேசியத் தலைவர் அமித்ஷா வின் மகன் ஜெய்ஷாவின் வளர்ச்சி குறிப்பிடத் தக்கது.

2014-2015இல் வருடத்திற்கு வெறும் 50,000 இலாபம் பெற்ற ஜெய்ஷாவின் நிறுவனம், மோடி ஆட்சி பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குப் பிறகு ஜெய்ஷாவின் நிறுவனம் 2015-16ஆம் ஆண்டில் 80 கோடிக்கு மேல் இலாபம் பெறும் நிறுவனமாக வளர்ந்து நின்றது. 50,000 ரூபாயிலிருந்து 80,00,00,000 ரூபாய் இலாபமாக ஒரு வருடத்தில் மாய வளர்ச்சியை பெற்றிருக்கிறது. 16 இலட்ச சதவீதம் முன்னேற்றம் ஒரு வருடத்தில்.

தனது ஆட்சி முடிவதற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்கு ஆக்கப்படும் என்றார் மோடி. ஆனால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு சாவும் அவலம் அதிகமாகி இருக்கிறது. ஆனால், தொழிலதிபர் களுக்கு அதுவும் அமித் ஷாவின் குடும்பத்துக்கு வருமானத்தை 16,000 மடங்கு அதிகமாக்கிக் கொடுத்திருக்கிறார். (தி ஒயர் 8.10.17)

**450 கோடி போக்குவரத்து ஊழல் :** மத்திய உள்துறை அமைச்சராக இருந்த கிரண் ரிஜ்ஜுவின் உறவினர் 450 கோடி மதிப்பிலான ஊழலில் ஈடுபட்டதாகவும் அதற்கு கிரண் ரிஜ்ஜு உதவி செய்ததாகவும் இலஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரி சதிஸ் வர்மா 129 பக்க அறிக்கையை விசாரித்து தாக்கல் செய்திருக்கிறார்.

600 மெகாவாட் ஹைட்ரோ மின் திட்டம் கொண்ட இரண்டு அணைகளை கட்டுவதில் 450 கோடிக்கு மேல் ஊழல் நடந்திருக்கிறது.

ஒப்பந்ததாரர்களால் கொடுக்கப்பட்ட பல ஆவணங்கள் போலியானதாக இருந்தது. அணை கட்டுவதற்கு தேவையான கற்களை ஏற்றிச் சென்ற வாகன போக்குவரத்தில் போலி படிவங்களே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதற்கு பின்னணியில் இருப்பது, ரிஜ்ஜுவின் உறவினர் நடத்தும் Patel Engineering Limited (PEL) என்ற நிறுவனம் என்று அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார் வர்மா.

மேற்கொண்டு விசாரணை நடக்கவிருந்த நிலையில் உண்மையை வெளிக்கொண்டு வந்த காரணத்திற்காக, வேறு காரணம் கூறி அதிகாரி, வர்மா திரிபுராவில் இருக்கும் CRPFற்கு உடனடியாக பணிமாற்றப்பட்டார். (தி ஒயர் 13.12.16)

**2016 – MIDC ஊழல் – மகாராஷ்டிரா :** முன்னாள் பா.ஜ.க. மந்திரி ஏக்நாத் காட்சே, தனது மனைவி பெயரிலும் மருமகன் பெயரிலும் மஹாராஷ்டிராவின் போஷாரி பகுதியில் சட்ட விரோதமான முறையில் நிலத்தை வாங்கியிருக்கிறார். அதுவும் இந்நிலம் மஹாராஷ்டிரா தொழில்துறை மேம்பாட்டு நிறுனத்துக்கு சொந்தமானது. அன்றைய மார்கெட் விலை ரூ.40 கோடி என்று இருக்கும்போது வெறும் ரூ.3.75 கோடிக்கு இந்த நிலத்தை சட்ட விரோதமாக வாங்கியிருக்கிறார். இதனை இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அறிக்கையாக பதிவு செய்திருக்கிறார்கள். (இண்டியன் எக்ஸ்பிரஸ் 15.5.18)

**பணமதிப்பிழப்பு :** நள்ளிரவில் மக்களை பிச்சைக்காரர் களாக மாற்றிய திட்டம். நாட்டின் பிரபலங்களெல்லாம் புரட்சி, மாற்றம், முன்னேற்றம் என்று சமூக வலைத் தளங்களில் மோடியின் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை கொண்டாடிக் கொண்டு இருந்த நேரம் இந்தியாவின் சாமான்ய மக்கள் ஏடிஎம் வாசல்களில் நாள் கணக்காக அன்றாடம் சேமித்து வைத்த பணத்தை எடுக்க முடியாமல் அவதிக்குள்ளானார்கள். இதுவெல்லாம் இந்தியாவின் வளர்ச்சிக்கு தான் என்று ஏசி ரூம்களில் உட்கார்ந்து கொண்டு நாளுக்கு ஒருவர் வானொலியிலும், தொலைக்காட்சிகளிலும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பொருளாதார அறிஞர்கள் எல்லாம் முட்டாள்தனமான நடவடிக்கை என்று கத்திக் கொண்டிருந்தபோது நடிகர்கள் மாபெரும் புரட்சி என்றார்கள். மக்கள் உணவுக்கு வழி இல்லாமல் செத்துக் கொண்டிருந்தனர். இழந்தது எக்கச்சக்கமாக இருப்பினும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு தானே இந்த இழப்பெல்லாம் என்று நினைத்த சாமானியனையும் ஏமாற்றினார் மோடி.

100க்கும் மேற்பட்ட மரணங்கள், 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வேலை பறி போனது. 150 மில்லியன் மக்களுக்கு மேல் பல வார ஊதியம் இல்லாமல் போனது. இது மட்டும் அல்லாமல் இந்தியா பல முன்னேற்றங்களை இழந்து நின்றதற்கு மோடி என்ற ஒற்றை நபரின் சர்வாதிகார போக்குதான் காரணம்.

நவம்பர் 2016 திடீரென நள்ளிரவு முதல் ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிப்பு வெளியான நாளிலிருந்து இன்று வரை இந்தியா அதனால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள முடியவில்லை.

ரிசர்வ் வங்கிக்கு 99.3 சதவீத நோட்டுகள் திரும்ப வந்து விட்டது, ஆனால் நாட்டின் கருப்புப் பணம் ஒழிந்து விடும் என்ற மோடியின் வாக்கு பொய்யாகிப் போனது. கருப்புப் பணம் என்பது நோட்டுகளாக மறைத்து வைக்கப்படவில்லை. தங்கமாக, நிலமாக, அயல்நாடுகளில் சேமிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது என பொருளாதார மேதைகள் சொல்கிறார்கள். பொருளாதாரம் படிக்க வேண்டும் என்பதில்லை. டீ விற்கும் சாமானியருக்கும்கூட இது தெரிந்திருக்கும். இருந்தும் இது பிரதமருக்கு தெரிய வில்லை.

மோடியின் தவறால் ஏற்பட்ட பாதிப்புக்கும்கூட அவர் பொறுப்பேற்பதில்லை. மீண்டும் மீண்டும் மேடைகளில் தான் செய்தது சாதனை என்று பொய் பேசி புள்ளி விவரங்களுக்கு மாறாக பேசி வருகிறார். இந்தியா இதுவரை இப்படி பொய் மட்டுமே பேசும் பிரதமரை பார்த்ததே இல்லை. மோடி செய்தது தவறு என பொறுப்பேற்றுக் கொண்டாலாவது, அவரால் பலியான 100க்கு மேற்பட்ட இந்திய குடிமக்களின் உயிருக்கு வருந்துகிறார் எனக் கூறலாம். ஆனால் மோடியின் பொய்கள் இது அநியாயமாக ஏற்படுத்தப்பட்ட பலி இல்லை. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கொலை என்பதைப்போல் காட்டுகிறது. (தி கார்டியன் 31.8.18)

பணமதிப்பிழப்பு நடவடிக்கை பெரும் ஏமாற்று நடவடிக்கை. இதன் மூலம் பா.ஜ.க. பெரும் ஊழலை நிகழ்த்தியுள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்பே பா.ஜ.க.வினர் தங்கள் பணத்தை பாதுகாப்பாக வங்கிகளிலோ அல்லது நிலங்களை வாங்குவதிலோ பத்திரப்படுத்தி விட்டனர்.

பீகார் சட்டமன்றத்தின் உறுப்பினர், சஞ்சீவ் சௌராசியா சொல்கிறார், 'பீகாரில் மட்டும் அல்ல பீகார் உள்பட இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் நிலம் வாங்கப்பட்டது. அதற்கான பணம் கட்சியிலிருந்து எங்களுக்கு தரப்பட்டது. இந்த நிலங்கள் அனைத்தும் கட்சி பணிகளுக்காக வாங்கப்பட்டது. இந்த நிலங்கள் அனைத்தும் நவம்பர் மாத தொடக்கத்தில் வாங்கப்பட்டது என்கிறார்.

16 ஆயிரம் கோடி பணம் தவிர எல்லாம் ரிசர்வ் வங்கிக்கு வந்து சேர்ந்து விட்டது. இந்த எண்ணிக்கையில் பாதிக்கும் அதிகமாக ஏழை மக்கள் மாற்ற முடியாமல் போன, கிழிந்து போன, தொலைந்து போன பணமாக இருக்கலாம். ஆனால் இதனையே கருப்புப் பணம் என சொல்கிறது பா.ஜ.க. அப்படியே 16 ஆயிரம் கோடி பணத்தை செல்லாமல் போக செய்வதற்காக 21 ஆயிரம் கோடி செலவில் புதிய நோட்டுகள் அச்சிடப்பட்டன. எவ்வளவு ஏமாற்றுத்தனம்? இதற்காக நாட்டின் பொருளாதாரம், 15 இலட்சத்திற்கும் அதிகமான வேலை இழப்பு, 100 மக்களுக்கு மேற்பட்ட உயிர்ப் பலி நடந்து முடிந்தது.

அசையாத சொத்துக்களின் எண்ணிக்கை முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்கு கீழ் 2.5 இலட்சம் கோடியாக இருந்தது. ஆனால் இன்று மோடி அரசின் கீழ் 12.5 இலட்சம் கோடியாக மாறியிருக்கிறது. இது சாமானிய மக்களின் வளர்ச்சி அல்ல கார்ப்பரேட் தொழிலதிபர்களுக்கான வளர்ச்சி. மோடி சாமானியருக்கான பிரதமர் அல்ல. அவர் கார்ப்பரேட் முதலாளிகளின் பிரதமர். (எக்னாமிக் டைம்ஸ் 21.8.18)

**கூட்டுறவு வங்கியின் மூலம் ஊழல் :** பணமதிப்பிழப்பு நடவடிக்கை, முட்டாள்தனமான ஒன்று என்றாலும், இந்தத் திட்டத்திற்குப் பின்னால் பா.ஜ.க. நிகழ்த்திய ஊழலும் மிகப் பெரியது.

இயக்குனர்களில் ஒருவராக, பா.ஜ.க. தேசிய தலைவர், அமித்ஷா உள்ள அஹ்மதாபாத் மாவட்ட கூட்டுறவு வங்கி தான், அனைத்து கூட்டுறவு வங்கிகளைவிட அதிகமான பணத்தை மாற்றியிருக்கிறது. ரூ.745.59 கோடி ரூபாய், பணம் பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஐந்து நாட் களுக்குள் இந்த வங்கியில் மட்டும் போடப்பட்டிருக்கிறது.

பா.ஜ.க. கண்காணிப்பின் கீழ் குஜராத் மாநிலத்தில் உள்ள கூட்டறவு வங்கிகளில் மட்டும் ரூ.3118.51 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டு இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு கீழ் உள்ள கூட்டுறவு வங்கிகளில் மட்டும் ரூ.14293.71 கோடி ரூபாய் பணபரிமாற்றம் நடந்திருக்கிறது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஐந்து நாட்களுக்குப் பிறகு கூட்டுறவு வங்கிகளில் பழைய பணத்தை மாற்ற தடை விதிக்கப்பட்டது. ஆனால் அதற்குள்ளாகவே பெரும் தொகை மாற்றப்பட்டுவிட்டது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவு சரிய செய்த நடவடிக்கையாக இருந்தாலும், பா.ஜ.க.வில் பலருக்கு அது கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொள்ளும் திட்டமாக அமைந்திருக்கிறது. (தி வயர் 22.6.18) (இன்டியா டுடே 22.6.18)

**விளம்பர மோசடி ஊழல் :** பா.ஜ.க. இந்திய மக்களின் வரியிலிருந்து ரூ.14 கோடி ரூபாயை போலி செய்திகளை பரப்புவதற்காக மட்டும் பல வலைத்தளங்களை உருவாக்கி யுள்ளது. இதுவரை 234 வலைத்தளங்கள் கண்டறியப்பட் டிருக்கின்றன.

மக்களின் வரிப் பணத்தை இப்படி வீணாக்குவது மட்டுமல்லாமல், தங்களது இந்துத்துவ கொள்கையை பரப்புவதற்கும், மக்களுக்குள் வெறுப்பை விதைக்கும் வேலையையும் செய்து வருகிறார்கள்.

மல்லையா 9000 கோடியுடன் மோடி அரசால் விமானத்தில் வழியனுப்பி வைக்கப்பட்டார்.

பி.ஜே.பி. ஆட்சி கட்டிலில் ஏறிய காலத்திலிருந்து சிலரை காப்பாற்றி வருகிறது. காப்பாற்றப்பட்டவர்கள் ஏழைகளோ, நிரபராதிகளோ, சாமானியர்களோ அல்ல. மத்திய அரசின் அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியலில் இருக்கும் சில கோடிஸ்வரர்கள் தாம் அவர்கள்.

விஜய் மல்லையாவின் கதை, இவர் நம் நாட்டு வங்கிகளிடமிருந்து 9000 கோடி ரூபாய் கடன் பெற்றிருந்தார். இன்று கடனை அடைக்காமல் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி விட்டார். நம் நாட்டின் சாமான்யர்கள் தங்கள் தேவைகளை சுருக்கி சேமித்த பணமிது. ஊதாரிகளுக்காக சேமித்த சேமிப்பில்லை!

வங்கியிடம் இருந்து 9000 கோடி கடன் பெற்ற குற்றச்சாட்டுக்காக கடந்த ஆண்டு (2015) டிசம்பர் மாதமே சி.பி.ஐ. அதிகாரிகளின் கண்காணிப்பில் விஜய் மல்லையா கொண்டு வரப்பட்டார். ஆனால் மார்ச் 2, 2016 அன்று இலண்டனுக்கு சகல ஏற்பாடுகளுடன் ஏழு பெரிய சூட்கேஸ்களுடன் தப்பி ஓடினார். (ஆதாரம் தி இந்து, டிசம்பர் 11, 2015 மதுரை), (தி டைம்ஸ் ஆப் இந்தியா, மார்ச் 11, 2016, மதுரை)

இடைப்பட்ட காலத்தில் பிஜேபி அரசு மல்லையாவின் பாஸ்போர்ட்டை முடக்காமல் வெளிநாடு தப்பி செல்லும் வரை அமைதி காத்தது. இப்பிரச்னையை எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் எழுப்பியபோது, டெல்லி கிரிக்கெட் வாரியம் ஊழல் மனன்ன் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, “நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மட்டுமே ஒருவருடைய பாஸ்போர்ட்டை முடக்க முடியும். இல்லாவிட்டால், ஒருவர் வெளிநாடு செல்வதை யாராலும் தடுக்க முடியாது” என்று தனது பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தினார். ஆனால் 2010ஆம்ஆண்டு லலித் மோடியின் பாஸ்போர்ட்டை காங்கிரஸ் தலைமையிலான அரசு முடக்கியது குறிப்பிடத்தக்கது. (தி இந்து, மார்ச், 11, 2016, மதுரை)

மேலும், அக்டோபர் 2015 அன்றே சிபிஐ அதிகாரிகளால் விஜய் மல்லையா வெளிநாடு செல்வதை தடுப்பதற்காக ஒரு சுற்றறிக்கை எல்லா விமான நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சுற்றறிக்கையையும் கண்டு கொள்ளாமல் மல்லையா 9000 கோடி சொத்துடன் தப்ப வைக்கப்பட்டிருக்கிறார். (ஆதாரம் - டைம்ஸ் ஆப் இந்தியா 11, மார்ச் 2016, மதுரை)

ஒரு குற்றவாளி சி.பி.ஐ. விசாரணை வலைக்குள் இருந்தாலும் வெளிநாடு எளிதாக தப்பி செல்லலாம் எனும் நிலை பா.ஜ.க.வால் மட்டுமே உருவாக்க முடியும்.

உள்நாட்டில் உள்ள வாராக் கடனையே வசூலிக்க முடியாதவர்கள் வெளிநாட்டில் இருக்கும் கருப்புப் பணத்தை மீட்டு வருவார்களாம்! யார் காதில் பூ சுற்றுகிறார்கள்?

9000 கோடி கடன் வாங்கி மோசடி செய்தவரை வெளிநாட்டுக்கு தப்ப விட்டுவிட்டு ஏழை விவசாயிகளை அவர்கள் வாங்கிய கடனுக்காக அடித்து உதைத்து துன்புறுத்துகிறார்கள்.

**பிட்காயின் ஊழல் :** பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பிறகு பிட்காயின் மூலம் கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றும் முயற்சி நடைபெற்றது. இந்த ஊழலில் பா.ஜ.க.வை சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனிஷ் பாட்டியா இருப்பது குஜராத் சிஐடி காவல்துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

5000 கோடிக்கும் மேலாக இதில் ஊழல் நடந்துள்ளதாக காவல்துறையினர் கூறுகிறார்கள்.

**சத்திஸ்கர் இ-டெண்டர் ஊழல் :** சத்திஸ்கர் மாநிலத்தில் ராமன் சிங் (பா.ஜ.க.) தலைமையிலான அரசின் கீழ் ஏப்ரல் 2016 - மார்ச் 2017 வரை மட்டும், 74 கம்ப்யூட்டர்களை உபயோகித்து அரசின் 17 துறைகளுக்கு 1971 டெண்டர் களுக்கான 477 மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த புள்ளி விவரம் டெண்டர் எடுக்கும் முதலாளி களுக்கும் அரசின் கீழ் இயங்கும் அதிகாரிகளுக்கும் டெண்டர் கொடுக்கும் முன்பிருந்தே தொடர்பு இருப்பதை உறுதி செய்கிறது. அதனால் இதில் பெரும் ஊழல் நடந்திருப்பதாகவும், பல டெண்டருக்கு வழங்கப்பட்ட மனுக்கள் ஒரே இமெயில் ஐ.டி.-லிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருமான வரித் துறை விதிகளை அரசு மீறி யிருக்கிறது. அதோடு 15.44 கோடிக்கான ஐந்து டெண்டர்கள் தகுதியில்லாத ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கியிருக்கிறது என்று CAG (Comptroller and Auditor General) அறிக்கை வெளியிட்டிருக்கிறது. (தி இன்டியன் எக்ஸ்பிரஸ் 11.1.2019)

**குஜராத் முதலமைச்சர் ஆனந்தி பென் குடும்ப ஊழல் :** குஜராத்தின் முதலமைச்சர் ஆனந்தி பட்டேல் (பாஜக) அரசின் கீழ் ஒரு சந்திப்பு கூட்டத்தில் இரு நிறுவனங் களுக்கான நில ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அதில், குஜராத் முதலமைச்சரின் மகள் அனர் பட்டேலுக்கு உரிமையான நிறுவனத்திற்கு 422 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதே நேரம் முரளிதர் கௌ என்ற நிறுவனத்திற்கும் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இருவருக்கும் நிலம் வழங்கப்பட்ட தொகையில் இமாலய வேறுபாடு இருந்தது.

அனர் பட்டேல் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் அரசு நிர்ணயித்த தொகையான ஒரு சதுர மீட்டருக்கு ரூ.180 என்றதிலிருந்து 92 சதவீதம் தள்ளுபடி செய்து வெறும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.15 ரூபாயில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே மற்றொரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிலத்துக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.671 ரூபாய் என்று வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரே சந்திப்பில் இரு வேறு முடிவுகள் ஒரே துறையின் கீழ் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டும் நேர் எதிர் முடிவுகள். அதிகாரத்தின் பேரில் ஊழல் எளிமையாக நடந்தேறியிருக்கிறது. (எக்னாமிக் டைம்ஸ் 2.3.16)

**நீட் ஊழல் - தமிழ்நாட்டின் பாதிப்பு :** தமிழகம் தொடர்ச்சியாக இந்த நீட் நுழைவுத் தேர்வை எதிர்ப்பதற்கு காரணம் இதுதான். இது இந்நாள் வரை தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த சமூக நீதியின் அடிப்படையிலான கல்வி முறையை தகர்ப்பதோடு மட்டுமல்லாமல் தமிழகம்

அடைந்து கொண்டிருந்த வளர்ச்சியை பின்னுக்கு தள்ளியிருக்கிறது.

2016க்கு முன் தமிழகத்தில் மருத்துவப் படிப்புக்கான சேர்க்கை, தமிழகக் கல்வி முறையில் பயிலும் 12ஆவது வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் இருந்து வந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக 'நீட்' நுழைவுத் தேர்வின் மூலம் இந்த சேர்க்கை நடந்து வருகிறது. இது தமிழகத்தின் திராவிட இயக்க சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பு மூலம் தமிழகம் அடைந்து வந்த வளர்ச்சியையும், சமூக நீதியையும் குலைத்திருக்கிறது. இதனை இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக மருத்துவ கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம் உணர்த்தியிருக்கிறது.

**நீட்டிற்குப் பிறகு பின் தமிழகத்தின் பாதிப்புகள் :** தமிழகத்தில் மட்டும்தான், இந்தியாவிலேயே அதிகப்படியான மருத்துவத் துறையின் சிறப்பு சிகிச்சைகளுக்கான உயர் மேற்படிப்பில் 195 சீட்டுகள் இருக்கின்றன. இந்தியாவில் உள்ள 10 மாநிலங்களில் ஒரு சீட் கூட இல்லாத நிலையும், 10 மாநிலங்களில் பத்துக்கும் குறைவான சீட்டுகளே இருக்கின்றன. இந்த நிலையில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட NEET-SS நுழைவுத் தேர்வில் வெறும் 19 பேர் தான் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் தேர்வானார்கள். தேர்வான மற்றவர்கள் எல்லாம் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இது தொடர்ந்தால் மருத்துவத் துறையிலும், சிறப்பு சிகிச்சை முறையிலும் பேர் பெற்றிருக்கும் தமிழ்நாடு அந்த நிலையை இழக்க நேரிடும் என்கிறார்கள் தமிழக மருத்துவர்கள்.

MBBS சேர்வதற்கு நடத்தப்படும் நீட் தேர்விலும் இதே நிலைதான். கடந்த ஆண்டு நீட் தேர்வில் 720 மதிப் பெண்ணிற்கு 420க்கு அதிகமாக மதிப்பெண் எடுத்தவர்கள் தமிழ்நாட்டில் வெறும் 470 பேர் மட்டும் தான். ஆனால் அதுவே கேரளாவில் 4000 மாணவர்கள், உத்தரபிரதேசத்தில் 11900 மாணவர்கள், டெல்லியில் 9000 மாணவர்கள் 400க்கு மேல் வாங்கியிருக்கிறார்கள். (7.8.17-TOI)

தமிழ்நாட்டில் மொத்தம் 22 அரசு மருத்துவ கல்லூரியில் 2447 எம்.பி.பி.எஸ். சீட்டுகள் இருக்கின்றன. ஆனால் கடந்த ஆண்டில் அரசு பள்ளியிலிருந்து நீட் தேர்வின் மூலம் வெறும் 4 பேருக்கு மட்டும்தான் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுவே 2017இல் 2 பேர் என்ற அளவில்தான் இருந்தது. ஆனால், 2016ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு அடிப்படையில் நடந்த மருத்துவ சேர்க்கையில் அரசு பள்ளியில் இருந்து 30 மாணவர்கள் தேர்வாகியிருந்தார்கள். இந்த எண்ணிக்கை போதாது எனும் நிலையில்கூட, முன்னேறிக் கொண்டிருந்த வளர்ச்சியையும் அழித்து தமிழகத்தை படுபாதாளத்தில் தள்ளியிருக்கிறது மத்திய அரசு கொண்டு வந்த 'நீட்' நுழைவுத் தேர்வு.

**மருத்துவத் துறையில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சி:** உலகத் தரத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் விதி, 1000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என சொல்கிறது. ஆனால், தமிழகம், கேரளா, கர்நாடகம், டெல்லி போன்ற மாநிலங்களில் இதைவிட அதிகமான மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்று மருத்துவத் துறையின் உச்சியை தொட்டிருப்பதாக சொல்லப்படும் மேலை நாடுகளுக்கு நிகராகவும், அதிகமாகவும் தமிழகத்தின் வளர்ச்சி இருக்கிறது.

1000 பேருக்கு 4 மருத்துவர்கள் என்பது தமிழகத்தின் நிலை. இது நார்வே (4.3), ஸ்வீடன் (4.2) ஆகிய நாடுகளுக்கு இணையான வளர்ச்சியாகும். இதுவே டெல்லியில் 1000:3, அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு இணையான வளர்ச்சி. கேரளா மற்றும் கர்நாடகாவில் 1000:1.5 எனவும், பஞ்சாப் மற்றும் கோவா 1000:3 என்ற அளவிலான வளர்ச்சியையும் பெற்றிருக்கிறது.

தமிழகத்தின் கல்வி வளர்ச்சி அடைந்ததற்கான காரணம், இங்கிருந்த திராவிடர் இயக்க சிந்தனையாளர்களே. ராஜஸ்தான், உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்களில் 4 பேரில் ஒருவர் மட்டுமே எழுதப் படிக்க தெரிந்தவர்கள். ஆனால் தமிழகம் மற்றும் கேரளாவில் இது 100 சதவீதம் ஆக இருக்கிறது. இது தேசிய அளவில் இருப்பதைவிட இருமடங்கு அதிகம். உலக அளவில் 10 சதவீதம் அதிகம்.

**உயர்நீதிமன்றம் – உச்சநீதிமன்றம் :** 2018ஆம் ஆண்டு நடந்த நீட் நுழைவுத் தேர்வில் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகளில் தமிழக மாணவர்கள் அதிகமாகவே மன உளைச்சலுக்கு உள்ளானார்கள்.

தமிழகத்திலிருந்து நீட் தேர்வை எழுத 1500 பேருக்கு கேரளா, கர்நாடகம், ராஜஸ்தான் என வெளி மாநிலங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதனை ஒட்டி மதுரை உயர்நீதிமன்றம் தமிழகத்திற்குள்ளேயே தேர்வு மையம் ஒதுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதனை நம்பி முன்பதிவு செய்திருந்த பயணச் சீட்டுகளையும் இரத்து செய்தனர் பல மாணவர்களின் பெற்றோர்கள். ஆனால் இறுதி நேரத்தில் உச்சநீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பு செல்லாது என உத்தரவிட்டது. இதில் தமிழக மாவர்கள் பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகி தேர்வு மையத்திற்குச் சென்றார்கள்.

நீட் தேர்வில் தமிழில் தேர்வெழுதிய மாணவர்களுக்கு 49 கேள்விகள் தவறாக கொடுக்கப்பட்டிருந்தது. அதனால், மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 198 மதிப்பெண்களை கருணை அடிப்படையில் வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனால் ஆறுதலடைந்த மாணவர்களுக்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றத்தை தந்தது. உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து CBSE உச்சநீதிமன்றத்தை முறையிட்டபோது, எந்த மதிப்பெண்ணும் வழங்க முடியாது இது தமிழ் மொழிப் பெயர்ப்பாளர்களின் குற்றம். ஆங்கிலத்தில் சரியாகவே இருந்தது. மாணவர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை. அதனால் கருணை மதிப்பெண் வழங்கக் கூடாது என்ற சிபிஎஸ்இ தரப்பின் வாதத்தை ஆமோதித்து உச்சநீதிமன்றமும் அதே தீர்ப்பை வழங்கியது.

இவ்வளவு ஊழல்களையும் பாதிப்புகளையும் உருவாக்கிய பா.ஜ.க. ஆட்சிதான் உத்தமர் வேடம் போடுகிறது.

**நன்றி : 'வைகறை வெளிச்சம்'**



# அன்னையார் வாழ்க்கைப் பாதை

*1919* மார்ச் மாதம் 10-ஆம் நாள் வேலூரில் வி. எஸ். கனகசபை - பத்மாவதி தம்பதியருக்கு மகளாய் பிறந்தார். உடன் பிறந்தவர்கள் சண்முகம், தியாகராஜன் ஆகிய இரண்டு சகோதரர்களும் கமலா என்ற ஒரு சகோதரி யும் ஆவார்கள்.

வேலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி ஆண்டு (எஸ்.எஸ்.எல்.சி.,) வரை படித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குலசேகரப் பட்டினம் சி.டி. நாயகம் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் புலவர் வகுப்பு படிக்கையில் கல்வி தடைப்பட்டுவிட்டது.

1936 வேலூருக்கு ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வந்த பெரியாரிடம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். அப்போது நான்காவது பாரம் (9ஆம் வகுப்பு) படித்துக் கொண்டிருந்த போது பெரியாரைச் சந்தித்த காரணத்திற்காக, பள்ளி நிர்வாகம் இவரை வகுப்பிலிருந்து வெளி யேற்றியது.

1943 செப்டம்பர் மாதம் 11 -ஆம் நாள் தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளால் கவரப்பட்டு அய்யாவின் தொண்டராகப் பணியாற்ற வந்தவர்.

1944 சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சி 'திராவிடர் கழக' மாக மாறிய மாநாட்டில் (27-8-1944) கே. காந்திமதி என்ற பெயரை கே. அரசியல் மணி என்று மாற்றப் பட்டு மாநாட்டில் அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்.

1948 டிசம்பர் 20-ஆம் நாள் குடந்தையில் நடந்த மொழி உரிமைப்போரில் அரசு தடையை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டு, பாபநாசம் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

விசாரணைக்குப் பின் இரண்டு மாதம் தண்டனை அளிக்கப்பட்டு வேலூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்.

1949 பிப்ரவரி மாதம் 23ஆம் நாள் வேலூர் சிறையிலிருந்து விடுதலை அடைந்த மணி யம்மையாரை பெரியார் வரவேற்றார்.

மார்ச் மாதம் 31ஆம் நாள் சென்னையில் மணியம்மையார் தலைமையில் இந்தி எதிர்ப்பு மறியல் போர் நடந்தது.

ஜூலை மாதம் 9ஆம் நாள் பெரியார்- மணியம்மையார் பதிவுத் திருமணம், திருமண

*பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்யப் பட்டது. திருமணத்திற்குப் பிறகு கே.ஏ.மணியம்மை (கே. அரசியல் மணி) என்று இருந்து வந்த பெயரை ஈ.வெ.ரா. மணியம்மை என்று தமிழிலும் E.V.R.மணியம்மை என்று ஆங்கிலத்திலும் அழைக்குமாறு பெரியார் வேண்டுகோள் விடுத்தார்.*

*1952இல் பதிவு செய்யப்பட்ட பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுள் செயலாளராக பெரியாரால் நியமிக்கப்பட்டார்.*

*1958 மார்ச் மாதம் 8ஆம் நாள், ஜாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டுத் திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட தோழர் பட்டுக்கோட்டை ராமசாமியும், 10ஆம் நாள் மணல்மேடு வெள்ளைச்சாமியும் மாண்டனர். இவர்களின் சடலத்தைத் தரச் சிறை அதிகாரிகள் மறுத்து விட்டனர்.*

*அந்த நேரத்தில் மணியம்மையார், முதலமைச்சர் காமராசர் அவர்களைச் சந்தித்து மறைந்த தோழர்களின் உடல்களைத் திரும்பப் பெற்றார். காவல்துறையின் தடையை மீறி மணியம்மையாரின் தலைமையில் சவ ஊர்வலம் நடந்தது.*

*19.1.1958 'விடுதலை'யில் வெளியான "இளந் தமிழா! புறப்படுபோருக்கு என்ற கட்டுரை சம்பந்தமாக அதன் ஆசிரியரும் வெளியிடு பவருமான ஈ.வெ.ரா. மணியம்மையார் மீது வழக்குத் தொடரப்பட்டது. மணியம்மை யாருக்கும், கட்டுரையை எழுதிய தோழருக்கும் ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.*

*1957-58 பெரியார் அவர்களும், கழக முன்னணியினரும் சிறையில் இருந்த முக்கியக் காலகட்டத்தில் கழகம் சோர்வடையாமலும், கழகப் பணி, நிர்வாகப் பணிகளைத் திறமையாகக் கவனித்துக் கொண்டதற்காகவும் அன்னை மணியம்மையாருக்குத் திருச்சியில் நடைபெற்ற - திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு கூட்டத்தில் (19.7.1959) பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.*

*1973 டிசம்பர் 24ஆம் நாள் 'பகுத்தறிவு பகலவன்' பெரியார் அவர்கள் மறைவுற்றபின் அன்னை மணியம்மையார் அவர்கள் கழகத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கழகத்தை வழி நடத்திச் சென்றார்.*

*1974 திருச்சி பெரியார் மாளிகையில் 6.1.1974இல் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு, கழகத் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந் தெடுத்தது.*

*3.4.1974 அன்று அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வகை செய்ய மத்திய அரசை வற்புறுத்தி சென்னை தலைமை அஞ்சலகம் முன் மறியல் கிளர்ச்சி செய்தார்.*

*இப்போராட்டத்தின் 2ஆம் கட்டமாக 26.5.1974 அன்று சென்னை வந்த மத்திய அமைச்சர் ஒய்.பி.சவானுக்கு கருப்புக்கொடி காட்டினார்.*

*அன்னை மணியம்மையார் அவர்களின் எதிர்காலப் பாதுகாப்பைக் கருதி அன்னை மணியம்மையார் அவர்களுக்கே கூடத் தெரியாத நிலையில் தந்தை பெரியார் அவர்களால் ஏற்பாடு செய்து வைத்திருந்த சொத்துகளைத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்ளாமல் மக்களின் பொது நலனுக்கே அவை பயன்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் உடல் நலமின்றி, தாம் சென்னைப் பொது மருத்துவமனையில் இருந்த போது அன்னை மணியம்மையார் அவர்கள் 23.9.1974 அன்று பெரியார் மணியம்மை கல்வி அறக்கட்டளைக் கழகம் தொடங்கப்படஏற்பாடு செய்தார்கள். அந்த அமைப்பு 24.9.1974 அன்று சென்னையில் பதிவு செய்யப்பட்டது.*

*1974 டிசம்பர் 25ஆம் நாள் சென்னை - பெரியார் திடலில் 'இராவண லீலா'வை நடத்தி வரலாற்றைப் படைத்துக் காட்டினார்.*

*சென்னை பெரியார் நூலகம் - ஆய்வகத்தை நிறுவினார். பெரியார் மணியம்மை பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் திருச்சியில் ஏற்படுத் தினார்.*

*1975 ஏப்ரல் 26இல் வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் பொன்விழாவில் கலந்து கொண்டு பெண்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.*

*சென்னை அண்ணாசாலையில் 21-9-1975 அன்று கலைஞர் சிலையை அமைத்தார்.*

*1975 செப்டம்பர் 9ஆம் நாள் 'இராவண லீலா'. வழக்கில் மணியம்மை மற்றும் தோழர்களுக்கு 6 மாதம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது.*

*'மிசா' காலத்தில் 16.9.1976 அன்று தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவிற்கு முதல் நாள் திடீரென்று கைது செய்யப்பட்டு இரண்டு நாள் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.*

*1977 ஏப்ரல் 25ஆம் நாள் 'இராவண லீலா' வழக்கில் மணியம்மையாரும் மற்றத் தோழர்களும் விடுதலை செய்யப்பட்டனர். அக்டோபர் மாதம் 30-ஆம் நாள் தமிழகம் வந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு, தமது உடல்நலம் பாதிக்கப் பட்டிருந்த நிலையிலும் கருப்புக் கொடி காட்டியதற்காகக் கைது செய்யப்பட்டார்.*

*பெரியார் திடல் முகப்பில் 'பெரியார் பில்டிங்ஸ்' என்ற ஒரு பெரிய கட்டடத்தை உருவாக்கினார்.*

*1978 மார்ச் மாதம் 16ஆம் நாள் மாரடைப்பு ஏற்பட்டு சென்னை பொது மருத்துவமனையில் முடிவெய்தினார்.*



# பெரியார் காட்டிய பாதையில் பயணத்தைத் தொடர்ந்தார்!

**பெரியாரால் அடையாளம் காட்டப்பட்ட அன்னை மணியம்மையார், - பெரியார் மறைவுக்குப் பிறகு, தலைவர் காட்டிய வழியில் பயணத்தைத் தொடங்கினார். பெரியார் விட்டுச் சென்ற பணிகளை எவ்வித சபலங்களுக்கும் ஆளாகாமல் பெரியார் போட்டுத் தந்த பாதையில் சென்று முடிப்போம் என்று உறுதியேற்று கருஞ்சட்டைத் தோழர்கள் அணி வகுத்தனர்.**

**பெரியார் மரணத்தைத் தொடர்ந்து அன்னை மணியம்மையார் 'திரும்பி வருகிறேன்' என்று 'விடுதலை' ஏட்டில் விடுத்த அறிக்கை இது:**

*என்ன செய்வது, எதை எழுதுவது, எப்படி நினைப்பது என்பதே புரியவில்லை. மனதை எவ்வளவுதான் திடப்படுத்தினாலும், என்னையும் மீறிச் சில சமயங்களில் தளர்ந்து-விடுகிறேன். உடனே அய்யாவின் அந்தப் புன்னகை முகம் என் கண்முன் தோன்றி,*

*"பைத்தியக்காரி, இவ்வளவுதானா நீ! இத்தனை ஆண்டுகள் என்னோடு பழகியும் நான் எடுத்து எடுத்துச் சொல்லிவந்த கருத்துகளை உன்னிடத் திலேயே காணமுடியவில்லையே! நீ எப்படி மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் என் கொள்கையைக் கடைப்பிடிப்பவளாய் இருக்கப் போகிறாயோ! சாதாரணப் பெண்களைப் போலேயே பக்குவமடையாத மனநிலையிலேயே இருக்கிறாயே! என்றாவது ஒரு நாள் எனக்கு இந்த நிலை ஏற்படும். இயற்கையை வெல்ல முடியாது. அப்போது எப்படி நீ இருக்கவேண்டும் என்று எத்தனை முறை உனக்கு உன்மனம் நோகாத வண்ணம் வேடிக்கைப் பேச்சாகவே சொல்லிச் சொல்லிப் பக்குவப்படுத்தி வைத்தேன். என் எண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல், மற்றவர் களுக்கும், உனக்கும் ஒரு வித்தியாசமும் இல்லாமல் நடந்துகொண்டு என் மனத்திற்கு வேதனை தருகிறாயே!" என்று சொல்லுவதுபோல் தோற்றம் அளிக்கும்.*

*உடனே நான் "இல்லை - இல்லை - மன்னித்து விடுங்கள். உங்கள் வார்த்தையை மீறி இன்று அல்ல என்றுமே நடக்க மாட்டேன்" என்று மனதால் நினைத்துக் கொண்டு நானே ஒரு சிரிப்பும் சிரித்துக் கொண்டு என் உள்ளத்தை இரும்பைப் போல கடினமாக ஆக்கிவிடுவேன். அப்போதுதான் என் மனதில் அமைதியும் ஒரு நிறைவும் பெறும்.*

*அய்யாவைப் போலவே என் வாழ்நாள் முழுவதும் என் சக்திகளை இயன்ற அளவு உழைக்கவும், மக்களுக்கு அவர் செய்து வந்த உயிர்நாடிக் கொள்கையை இயன்ற அளவு பரப்பவும், மனிதத் தன்மையோடு, பண்போடு, உண்மையும், ஒழுக்கமும் உயர்வெனக் காட்டிய வழியிலேயே நாமும் இனி வாழ்நாளெல்லாம் வாழ வேண்டும் என்று ஒரு உறுதியான எண்ணத்துடன், இன்று முதல் செயல்படத் துவங்கிவிட்டேன். இனி எனக்கு என்று எந்தவிதமான சுயநலப் பற்றும், பாசமும், பந்தமும்,*

இல்லாது மனநிறைவோடு, மனிதப் பற்றோடு, வாழ்வை நடத்த வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு என்னை ஆளாக்கிக் கொண்டேன்.

எனது இளம் வயதிலிருந்து அதாவது, எனக்குப் புத்தி தெரிந்த நாளிலிருந்து அவர் கொள்கையால் ஈர்க்கப்பட்டு அதே பைத்தியமாகிப் பள்ளிப் படிப்பையும் செம்மையுற முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டு, என் தந்தை இறந்த சிறிது நாள்களுக்குள்ளாகவே அய்யா அவர்களிடம் என்னை ஒப்படைத்துக் கொண்டேன்.

அவர் தொண்டுக்கு முழுக்க முழுக்க ஆளாகி, அவர் நலத்தைக் கண் எனப் பாதுகாக்க, ஒரு தாயாக என்னைப் பாவித்துக் கொண்டு, அவரை ஒரு சிறு குழந்தையாகவே என் மனதில் இருத்தி, அக்குழந்தைக்கு ஊறு நேரா வண்ணம் பாதுகாப்பதிலேயே மகிழ்ச்சி கண்டேன்.

அவரும் என்னை ஒரு நாளும் பெயரிட்டு அழைக்காமல், அவர் உயிர் பிரியும்வரையிலும் அம்மா! அம்மா! என்று ஆயிரம் அம்மாக்களைத் தினமும் அழைத்தவண்ணமே இருப்பார். அந்த மழலை மொழியைத்தான் இனி நான் கேட்க முடியாதே தவிர, என் உள்ளம் மட்டும் மானசீகமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

### நெகிழ வைத்த நிகழ்ச்சி

அவரோடு நான் 30 ஆண்டு, 3 மாதம், 13 நாள்கள் பிரியாது இருந்தேன். 1943 செப்டம்பர் 11 ஆம் நாள் வந்தடைந்த அன்றுமுதல் இன்றுவரை ஒரு நாளும் அவரை விட்டுப்பிரியாது மகிழ்ந்த நான், ஓர் ஆண்டாக இயற்கையின் கொடுமைக்கு ஆளாகி நடு நடுவே பிரிய நேர்ந்தது. 1972 செப்டம்பர் 17ஆம் நாள் ஈரோட்டிலே அவர் பிறந்து வாழ்ந்த ஊரிலே, என்றும் இல்லாத அளவுக்கு வெகு சிறப்புடன் அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடி, அவரது திரு உருவச் சிலையையும் திறந்து, கடலென மக்கள் திரண்டு வந்திருந்து மகிழ்ந்திருந்த வேளையிலே - நானும் அம் மகிழ்ச்சியில் பங்கு கொண்டு, அது முடிந்ததும், அம் மகிழ்ச்சியின் வேகத்தைத் தாங்கும் சக்தி இல்லாததனாலோ என்னவோ அன்று இரவு 11 மணியளவில் இருதயவலி முதன்முதலாக ஏற்பட்டுப் படாதபாடுபட்டு அவதியுற்ற வேளையில், அய்யா அவர்கள் பயந்து துடித்த துடிப்பு, என் துடிப்பைவிட அதிகமாய் இருந்ததாகவும், அன்று வந்திருந்த நமதியக்கத் தோழர்கள் பட்டபாட்டையும் பின்னர், உடல்நலம் தேறியவுடன் ஒவ்வொருவரும் சொல்வதைக் கேட்டு ஒருபுறம் வேதனையும், அதே

**அவரும் என்னை ஒரு நாளும் பெயரிட்டு அழைக்காமல், அவர் உயிர் பிரியும்வரையிலும் அம்மா! அம்மா! என்று ஆயிரம் அம்மாக்களைத் தினமும் அழைத்த வண்ணமே இருப்பார்.**

நேரத்தில் பூரிப்பும் அடைந்து, அய்யா அவர்களிடம் சென்று நீங்கள் பயந்து விட்டீர்களாமே! நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் பிழைத்தது ஏதோ காரணத்திற்காகத்தான். உங்களை விட்டுவிட்டு அவ்வளவு சீக்கிரம் போய்விட மாட்டேன். எத்தனையோ ஏளனப் பேச்சுகளையும், தூற்றுதலையும் கேட்டுத் தாங்கிய இந்த உள்ளம், உங்களுக்கு இன்று ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தாங்கமுடியாமல் போய் விட்டது. அவ்வளவுதான் வேறில்லை என்று கூறி அவரை மகிழ்வித்தேன்.

அய்யா அப்பொழுது சொன்னது இன்னமும் என் மனதில் அப்படியே இருக்கின்றது.

இயற்கையை வெல்வது கடினம் தான்! உனக்கு ஏதாவது இன்று நேர்ந்திருந்தால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால், என் எண்ணம் வீணாயிற்றே, வீண்பழிக்கும் பொல்லாப்புக்கும் (பலபேரின் அதிருப்திக்கும் வெறுப்புக்கும் ஆளாகி) எந்த ஏற்பாடுகள் செய்தேனோ அது நிறைவு பெறாமல் நீ போய்விடுவாயோ என்றுதான் கலங்கினேன், என்று கூறிக் கண்ணீரை உதிர்த்தார்.

அப்போது நான் அவரை ஊக்கப்படுத்துவதற்காகச் சொன்னேன், இதென்ன நீங்கள் இவ்வளவு பலவீனமானவரா, எல்லோருக்கும் மரணத்தைப் பற்றித் தத்துவம் பேசுவீர். இயற்கையின் நியதியைப்பற்றி வண்டி வண்டியாய்ச் சொல்வீர், கடைசியிலே நீங்களே இப்படி இருந்தால் மற்றவர்களுக்கு மட்டும் அப்படி இருக்க வேண்டும் என்று சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே உங்கள் பேச்சு என்று சற்றுப் பொய்க் கோபத்துடன் கடினமாகச் சொன்னேன். உடனே, தமக்கே உரிய சிரிப்புச் சிரித்து ஏதோ சமாதானம் செய்தார். உண்மையிலேயே அந்நிகழ்ச்சி எங்கள் இரு வரையும் மிகவும் நெகிழ வைத்த ஒன்றாகும்; மறக்க முடியாததும் கூட.

**இருக்கும் வரை மனிதன் தன்னால் ஆன தொண்டை, மக்களுக்கு ஆன தொண்டைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். அது தான் என் ஆசை; என் கொள்கையும் கூட.**

சில சமயங்களிலே, எனக்கும் அய்யா அவர்களுக்கும் சிறு சிறு சம்பவங்களுக்கெல்லாம் கூடச் சங்கடம் ஏற்படுவதுண்டு. அதுவும் அவர் நலத்தைப் பற்றிய அக்கறையினால் கடுமையாகக் கூட நடந்து கொள்வேன். அது தவிர அவர் மனது நோகும்படியாகவோ, துயரம் தரும்படியாகவோ ஒன்றும் பெரியதாக இருக்காது. ஒன்று, இரண்டு சம்பவங்கள் நேர்ந்ததுண்டு.

உடனே, சிறிது நேரத்தில் அய்யா அவர்களே முதலில் முந்திக்கொண்டு நான் கொண்டிருந்த வருத்தத்தைக் களைய முன்வந்து விடுவார். மற்றபடி, பெரும்பாலும் அவர் குறிப்பறிந்து நடந்துகொண்டு அவர்தம் வேலைகளுக்கு எந்தவிதமான இடையூறும் தொந்தரவும் இன்றிக் கவனித்துத் தான் வந்தேன். நான் வருத்தப் பட்டாலும், கோபித்துக் கொண்டாலும் அய்யா அவர்கள் மற்றவர்களிடம் கூறுவார்.

“இந்தம்மாவுக்கு இப்பொழுதெல்லாம் பொறுமையே இருப்பதில்லை. பாவம்! நோய் வந்த பிறகு என்னமோ மனதில் வைத்துக்கொண்டு இருக்கிறது; மிகவும் பலவீனமாகிவிட்டது. எல்லாத் தொல்லைகளையும் தன் தலைமேலேயே போட்டுக் கொண்டு துன்பப்படுகிறது. என்ன சொன்னாலும் கேட்ப தில்லை. இந்தப் பள்ளிக்கூடம் (அனாதைக் குழந்தைகள் இல்லம்) வந்த பிறகு இந்தப் பசங்களோடு போராடுவதே அதற்குக் கஷ்டம், இதுதான் காரணம்” என்று மற்ற நண்பர்கள், தமக்கு மிக நெருக்கமானவர்களிடம் மட்டும் சொல்லு வார்கள். என் மனச்சுமையைத் தீர்க்கத் தம் அறிவுரையினால், அன்பு மொழியால், வேடிக்கைப் பேச்சினால் பக்குவமாகப் பேசி என் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த பரிபக்குவமற்ற எண்ணத்தை மாற்ற அதை மறக்கும்படி செய்து உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்திவிடுவார்.

அப்படிப்பட்ட அருமை அய்யா அவர்கள் இன்று இல்லை என்ற ஒரு குறையைத் தவிர, அவர் நம்மைவிட்டு எங்கும் போகவில்லை. நம்மிடையே நம் செயலிலே கருத்திலே என்றென்றும் இருக்கிறார். அவர் கருத்தை கொள் கையை நாம் சிறிதும் வழுவாமல், அவர் வாழ்நாளெல்லாம் என்னென்ன நினைத்தாரோ, செய்தாரோ அதை மனதில் இருத்தி, தொடர்ந்து செய்து வந்த அவர் பணியை நாமும் மேற்கொண்டு உலகெல்லாம், நாடெல்லாம், பட்டிதொட்டி எல்லாம் அவர் சிந்தனைகள், கொள்கைகள், மக்கள் நலப்பணிகள் பரவும் வகையில் அவரது ஆயுதமான அயராத உழைப்பையும், பொறுமையையும் கைக்கொண்டு, பிரச்சாரப் பணியை செய்து, அவர் முடிக்காமல் விட்டுச் சென்றவைகளை முடித்து வெற்றி பெற்றால்தான் அவருக்காக நாம் காட்டிய அன்பு, நன்றி, மதிப்பு ஆகியவை என்றும் வீண் போகாது என்று நான் கருதுவதோடு, நமது அன்புத் தோழர்களையும், தமிழ் மக்களையும் மிக அன்புடன், பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

## தாய்மார்களுக்கு வேண்டுகோள்

ஒவ்வொருவரும் முக்கியமாகத் தாய்மார்களும், இனி ஏராளமாக இப்பணியினைச் செய்யத் தங்களைத் தாங்களே முழுமையாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குடும்பப் பணிகளிலே இதுவும் ஒன்றாகக் கருதி, நாள்தோறும் சிறிது நேரமாகிலும், அவர்தம் செயலுக்கு ஒதுக்கி வரவேண்டும். இப்படிச் செய்வோமானால் வெகு சீக்கிரத்தில், அய்யா அவர்களது நூற்றாண்டு விழாவிற்குள் பெரும்பாலும் இன்று அவர் விட்டுச் சென்றதை முடித்துவிடலாம். அதன் பின்னரும் தலைமுறை தலைமுறையாக என்றென்றும் நிலைத்து நிற்கும்படியாகத் தொடர்ந்து செய்வதற்குரிய வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அய்யா அவர்களைப் பார்க்க வரும் நண்பர்கள், கழக முக்கியஸ்தர்கள், தோழர்கள் அனைவரும், “ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் அய்யா. இப்படி இரவு பகலாக ஒரு நாள்கூட விடாமல் தொடர்ந்து கூட்டங்களுக்குச் செல்கிறீர்களே, உடம்பு என்ன ஆவது? இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கு மாக 500, 300 மைல் நாளொன்றுக்குச் சென்றால் என்னாகும்” என்று மிகவும் கெஞ்சி உருக்கமாகச் சொல்வார்கள்.

உடனே அப்படிச் சொல்பவருக்கு அவர் சொல்லும் பதில் வேடிக்கையாகவும், அதே நேரத்தில் மீண்டும் இந்த யோசனையைச் சொல்லாதீர்கள் என்று அவர்கள் உணரும் வண்ணம் சொல்வார்.

“மனிதனாய்ப் பிறந்து விட்டேன், இருக்க வேண்டிய நாளுக்கு இரண்டு பங்கு அதிகமாக வாழ்ந்துவிட்டேன். இன்னும் கொஞ்ச நாள், அதை

வீணாக்குவதா? உயிரோடு இருப்பதனால் செய்கிறேன். இதற்கு எதற்கு ஓய்வு? வீட்டில் தான் நான் என்னத்தைச் சாதிக்கப்போகிறேன். வாய்க்கு ருசியாகச் சாப்பிடுவதும்; தூங்குவதும் தான். இருக்கும் வரை மனிதன் தன்னால் ஆன தொண்டை, மக்களுக்கு ஆன தொண்டைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். அது தான் என் ஆசை; என் கொள்கையும் கூட.

பெருமைக்காகச் சொல்லவில்லை, அப்படி ஒரு எண்ணத்தை எப்படியோ என் மனத்தில் வளர்த்துக் கொண்டேன். இப்போது மாற்றிக் கொள் என்றால் முடிகிற காரியமா? நீங்களே சொல்லுங்கள். அதிலும், நம்நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டியது; சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. பெரும்பாலும் நமக்குப் படிப்பு இல்லை; சிந்தனை இல்லை; பகுத்தறிவு இல்லை.

என்னடா? இப்படிப் பேசுகிறானே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். உண்மையைச் சொல்கின்றேன். யார் என்ன சொன்னாலும் அப்படியே பின்பற்றும் குணம்தான் அதிகம். அதிலும் பழைய மூடநம்பிக்கையில், கடவுள் பக்தியில் ஊறிப்போனவர்கள். அவர்களைத் திருத்துவது என்றால் என் ஒருவனால் மட்டுமே போதுமா? நிறையப் பேர் தோன்ற வேண்டும். அப்படி யார் இத்தொண்டைச் செய்ய முன் வருகிறார்கள்? இதில் எவனுக்காவது லாபம் இருந்தாலும், தன் உழைப்பையும், முதலையும் போட்டுப் பாடுபட்டாலும் நல்ல பெயரும் வருவதில்லை. மக்களின் எதிர்ப்பைத்தான் வளர்த்துக் கொள்கிறோம் என்று பயப்படுகிறவர்களைத் தானே நான் பார்க்கிறேன் எவ்வளவோ இன்னும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதற்கு எல்லாம் நான் எங்கே? எனக்கோ வயது ஏறிக் கொண்டே போகிறது. எத்தனை நாள் இன்னும் இருக்கப் போகிறேன். ஒரு வருடமோ, இரண்டு வருடமோ, இன்றோ, நாளையோ யார் கண்டார்கள்? அதனால் ஒரு வழிக்காவது; சிந்திக்கும் அளவிற்காவது தயார்படுத்திவிட வேண்டும். பிறகு, சூடுபிடித்து விடும். இளைஞர் சமுதாயம் கவனித்துக் கொள்வார்கள்"

- என்று அன்பொழுகப் பேசி சொன்னவர்கள் வாயை மூடச் செய்துவிடுவார். அத்தகைய ஆற்றலை இனி நாம் எங்கு காணப் போகிறோம்? முடிந்துவிட்டது அய்யாவின் சகாப்தம், அவர் சொல்லி வந்தது போலவே திடீரெனத் தம் வாழ்வை உழைத்து உழைத்துக் கடைசி நாள் வரை உழைத்தே முடித்துக் கொண்டார்.

பெரும் பொறுப்பை, சுமையை நம் எல்லோர் தலையிலும் வைத்துவிட்டார். அதை நாம் சுமந்து கொண்டே இருப்பதா? என்பது தான் இப்போது நம் கண்முன் உள்ள பிரச்சினை. நம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு, அவர் நீண்ட துயில் பெற்று, நாம் எல்லோரும் கேட்டுக் கொண்டபடி அடிக்கடி ஓய்வு கொள்ளாமல் நிரந்தர ஓய்வுக்குப் போய் விட்டார். நம்மை எல்லாம் பார்த்து இனி நீங்களே செய்து கொள்ளுங்கள் என்னை அடக்கி அடக்கி வந்தீர்களே, இனி பார்க்கிறேன், நீங்கள் எப்படிச் செய்யப்போகிறீர்கள் என்று சொல்லாமல் சொல்லி அமைதியுடன் நாம் இனி எப்படி நடந்து கொள்கிறோம், கட்டுக்குலையாமல் என்றும் போல் கட்டுப்பாடு ஒழுக்கம் உண்மையுடன் இருக்கிறோமா, இல்லையா? என்று பார்த்துக் கொண்டே இருப்பதற்காக அவரது இல்லத்திலேயே ஓய்வுடன் இருக்கிறார். வேறு ஒன்றும் இல்லை. நம்மை அவர் கவனித்துக் கொண்டுதான்; நமது செயலைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்.

அன்புள்ள தமிழ் மக்களே, தொடர்வோம் அவர் பணியை!

ஆகவே, அன்புள்ள தமிழ் மக்களே, தாய்மார்களே! உண்மையாகவே நாம் அய்யாவிடம் அன்பு செலுத்துபவர் களாய் இருந்தால் அவர் கொள்கையை; அவர் நினைவை; கருத்தைத் தொடர்ந்து செய்து கொண்டே நம்மை நாமே பக்குவப்படுத்த நல்ல உறுதியான மனங்களைப் பெற்றுத் தொடருவோம். நம் பணியை, அய்யாவின் பணியைக் குறைவில்லாமல் செய்து நிறைவு பெறுவோம், அவர் சிந்தனைக்கு வழி வகுப்போம்.

சென்ற மாதம் (டிசம்பர்) 3ஆம் தேதி இரவு, திருச்சியிலி ருந்து புறப்பட்டு அய்யா அவர்களுடனும், நண்பர்களுடனும் மாநாட்டு வேலைக்காகத் தட்டுமுட்டு சாமான்களுடன் 4ஆம் தேதி காலை சென்னைக்கு வந்த நான், இன்று 4ஆம் தேதி ஒரு மாதத்திற்குப் பிறகு, அவரைத் தினம், தினம் பார்த்து, அவர், கருத்துகளை அள்ளி, அள்ளி வீசிய அவரது இல்லத்தையே ஓய்வாக இனி அமைத்துக் கொள்ளுங்கள்; என்னுடன் வர வேண்டாம்; நான் தனித்தே செல்கிறேன், என்று சொல்லிவிட்டு அவர் நினைவிடத்தை நோக்கி விடைபெற்றுக் கொண்டு 6ஆம் தேதி உங்களைச் சந்திக்க, இன்று 4ஆம் தேதி மாலை சென்னையை விட்டுப் புறப்பட்டு, நண்பர்களுடன் திருச்சியை நோக்கி

அவர் வாழ்வில் பெரும்பகுதியைச் செலவழித்த அவரது அருமை இல்லத்தை நோக்கி வருகிறேன்.

இனி என்றென்றும் எனக்குத் துணையாக அவர் அன்பு காட்டிய நம் கழக அன்பர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தோடு எவ்விதக் கலக்கமும் இன்றித் துயர் அடங்கிய நெஞ்சுடன் வருகிறேன். வணக்கம்"

– ஈ.வெ.ரா. மணியம்மையார், விடுதலை 4.1.1974



# பெரியார் தொண்டை மட்டுமே முகர்ந்த பெண்

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**

தாம் போகும் வழிகளை மறித்துக் கொண்டிருந்த ஒரு குன்றத்தைக் குந்தி உடைத்துக் கொண்டிருந்த இரண்டு கோள்களைக் கண்டோம். தம்மை நோக்கிச் சீறி வருகின்ற நெருப்பு மழைக்குச் சிரித்துக் கொண்டிருந்த இரண்டு உதடுகளைக் கண்டோம். "தமிழ்நெறி காப்பேன் - தமிழரைக் காப்பேன் - ஆரிய நெறியை அடியோடு மாய்ப்பேன்" என்று அறையில் அல்ல - மலைமேல் நின்று மெல்ல அல்ல, தொண்டை அறையில் அல்ல - மலைமேல் நின்று மெல்ல அல்ல, தொண்டை கிழிய முழக்கமிடும் ஓர் இருடியத்தால் செய்த உள்ளத்தைக் கண்டோம்.

அதுமட்டுமல்ல

குன்று உடைக்கும் தோளும், நெருப்பு மழைக்குச் சிரித்த உதடுகளும் இருடிய உள்ளமும் ஒரே இடத்தில் கண்டோம் - இந்த அணுகுண்டுப் பட்டறைதாம் பெரியார் என்பதும் கண்டோம்.

யாரைப் புகழ்ந்து எழுதினோம், புகழ்ந்து பாடினோம். ஆயினும் நம் புகழ் நாம் பாட இன்னும் மேலான பொருள் வேண்டுமென்று ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

பெரியார் செத்துக் கொண்டிருந்தார். தமிழர் அழுது கொண்டிருந்தார்கள்.

ஆனால் பெரியாரின் உடம்பை விட்டுப் பிரிந்துபோக மூட்டை முடிச்சுகளுடன் காத்திருந்த உயிரைப் போகாதே என்று பிடித்து இழுத்து வைத்துக் கொண்டிருந்தவை இரண்டு, ஒன்று அவரின் பெருந்தொண்டு; மக்கள்மீது அவர் வைத்திருந்த அருள் மற்றொன்று.

ஆயினும்,

*காற்றிறங்கிப் பொதிமாடு போல் பெருத்துத் தொங்கும் அவர் விதையின் ஒரு பால் ஒட்டிய ஆண்குறியினின்று முன்னறிவிப்பு இன்றிப் பெருகும் சிறுநீரை உடனிருந்து கலன் ஏந்திக் காக்கும் ஓர் அருந்தொண்டு, அவர் பெருந்தொண்டால் முடியாது; அவர் மக்கள் மேல் வைத்துள்ள அருளால் முடியாது. பெரியார் வாழட்டும் என்று தன் துடிக்கும் இளமையைப் பெரியாருக்கும் ஒப்படைத்த ஒரு பொடிப் பெண்ணை,*

*அன்னை என்று புகழாமல் நாம் வேறு என்ன என்று புகழவல்லோம்?*

பெரியார் மேடைமேல் வீற்றிருப்பார். ஓர் இலக்கம் தமிழர் அவரின் தொண்டுக்காக மல்லிகை முதலிய மலர்களாலும் வெட்டிவேர் முதலிய மணப் பொருளாலும் அழகு பெறக்கட்டிய மாலை ஒவ்வொன்றாகச் சூட்டிப் பெரியார் எதிரில் இரண்டு வண்டியளவாகக் குவிப்பார்கள்.

அதே நேரத்தில் எல்லாம் உடைய அன்னை மணியம்மையார் ஏதுங்கெட்ட வேலைக்காரி போல் மேடைக்கு ஏறத்தாழ அரைக்கல் தொலைவில் தனியே உட்கார்ந்து சுவடி விற்றுக் கொண்டிருப்பார்கள்.

'ஒரே ஒரு மாலையை எந் துணைவியார்க்குப் போடுங்கள்' என்று அந்தப் பாவியாவது சொன்னதில்லை. எம் அன்னையாவது முன்னே குவிந்துள்ள மாலைகளை மூட்டை கட்டுவதன்றி - அம் மாலைகளில் எல்லாம் மணக்கும் பெரியார் தொண்டை முகர்ந்து முகர்ந்து மகிழ்வதன்றி ஓர் இதழைக் கிள்ளித் தம் தலையில் வைத்தார் என்பதுமில்லை.

(10.4.1960 'குயில்' இதழில் எழுதியது)

# இந்துத்துவ முழக்கம் தோற்கும்போது, போரை ஆயுதமாக்குவார்கள்!



*நீங்கள் புனைவுகளின் எல்லைக்குள் நிற்காமல் அரசியல் கட்டுரைகள் எழுதுவதால் தான் இந்தச் சிக்கலா?*

“இல்லை. God of small things என்ற என் புத்தகத்திற்காக, ஒழுக்கத்தைக் கெடுக்கிறேன் என்று என் மீது பத்தாண்டுக்காலம் கிரிமினல் வழக்கு நடந்தது. நான் அப்படி எதையும் திட்டமிடுவதில்லை. என்னுடைய அடுத்த நாவலில் காஷ்மீர் சிக்கலையும், இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்கள் சந்திக்கும் பிரச்னை களையும் இணைத்து எழுத முயற்சி செய்திருக்கிறேன். புனைவின் எல்லைக்குள் தான் இது எளிதில் சாத்தியம். **தலித்துகளையும் பிற்படுத்தப்பட்டவர்களையும் எதிர்த்துக் கல்வி நிறுவனங்களுக்குள் “பிராமணிய” நடவடிக்கைகள் அதிகமாகும் இந்தச் சூழ்நிலையில், வெவ்வேறு புள்ளிகளாக இருக்கும் பிரச்னைகளை ஒப்பிட்டு இணைப்பதன் மூலம் புரிதல் மேம்படும் என நினைக்கிறேன்.**

இரண்டு சாதிகளுக்கிடையிலோ, இரண்டு பழங்குடிகளுக்கு இடையிலோ நடக்கிற சண்டையோ, இந்துத்துவச் சக்திகள் தூண்டி விடும் சண்டையோ, வெறும் தண்ணீர் நெருக்கடியை மறைப்பதற்காகக்கூட இருக்கலாம். ஆகவே, புள்ளிகளை இணைத்துப் புரிந்து கொள்வது காலத்தின் தேவையாக இருக்கிறது எந்தப் பிரச்சினையையும் தனியாகப் புரிந்து கொள்ள முடியாது.

*சமீபத்திய போர்ச் சூழல் குறித்து உங்கள் கருத்து?*

“காஷ்மீரில் நடக்கும் எந்தவொரு நிகழ்வைக் குறித்தும் வெளி வருகிற செய்திகளைக் கொண்டு மட்டுமே அதன் முழுப் பரிணாமத்தைப் புரிந்து கொள்ள முடியாது. ஏன் நடந்தது, ஏன் இப்போது நிகழ்ந்தது என்று எதையும் உறுதியாகக் கூறிவிட முடியாது என்றே நினைக்கிறேன். ஆனால், நடைமுறைப்படுத்தப்படும் தனியார் மயக் கொள்கைகளின் தாக்கத்தை மறைக்க இந்துத்துவ முழக்கங்களையும், அது சரிவராத பட்சத்தில் போரையும் ஆயுதமாகக் கையிலெடுப்பார்கள் என்று ஏற்கெனவே பலரும் பேசியிருக்கிறோம்.

ஆளும் மத்திய அரசுக்கு, மக்களுக்கு மறக்க வைக்க வேண்டிய விஷயங்கள் நிறையவே இருக்கின்றன. பண மதிப்பிழப்பு நடவடிக்கை, தனியார் மயக் கொள்கைகள், பன்னாட்டு முதலாளித்துவத்துக்கு ஆதரவான நிலைப்பாடு, ரபேல் ஊழல் என நிறைய இருக்கின்றன. போர் முழக்கங்களின் மூலம் இவற்றை மறைக்க முயலலாம்.

தன்னுடைய 56 இன்ச் மார்பில் தனியார் மயம், தாராளமயம், சாதியம், மதவாதம் என அனைத்தையும் உள்ளடக்கிய பிரச்னையாக மோடி இருக்கிறார். அவருடைய முதுகில் இருக்கும் கரும் பலகையில், சமாதானம் விரும்பும் எல்லோரும் இணைந்து இந்தப் பிரச்னைகளை எதிர்கொள்வதற்கான பார்முலா எழுதும் நேரம் வந்துவிட்டது. நேரம் மிகக் குறைவாக இருக்கிறது.

எழுத்தாளர் அருந்ததிராய்
(‘ஆனந்தவிகடன்’ பேட்டி)

# விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்ட திராவிடர் மரபு




திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர், தோழர் கொளத்தூர் மணி 30.9.2018ஆம் நாளன்று திருச்செங்கோடு நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் ‘கருஞ்சட்டைக் கலைஞர்’ எனும் தலைப்பில் ஆற்றியுள்ள உரை, நூல் வடிவம் பெற்று வெளியிடப்பட்டு இருக்கிறது.

பெரியார் அவர்களின் சுயமரியாதை, பகுத்தறிவுக் கருத்துகளை ஏற்று, திராவிடர் கழகத்தின் கருஞ்சட்டை இளைஞனாக உருவாகி, அறிஞர் அண்ணாவின் தலைமையில் தி.மு. கழகத்தின் தொண்டனாக அரசியல் களம் புகுந்த கலைஞர் அவர்கள், தனது அறுபதாண்டு தொண்டறத்தை நிறைவு செய்து முடிவெய்தி யுள்ளதை நினைவுகூர்கிறது இந்த நூல்.

தன்னை ‘மானமிகு சுயமரியாதைக்காரன்’ என அறிவித்துக் கொண்ட கலைஞர், அய்ந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப் பேற்று, நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளில் மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளதையும், அதனூடாக, திராவிடர் இயக்கத்தின் வரலாற்றுப் போக்கைச் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டும் வகையிலும் இந்த உரையானது அமைந்துள்ளது.

தந்தை பெரியார் அவர்களிடமிருந்து பிணக்கு கொண்டு, அறிஞர் அண்ணா தலைமையில் கலைஞர், நாவலர் உள்ளிட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் கட்சியைத் தொடங்கியபோதும், திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் ஒருவருக்கொருவர் கடுமையான விமர்சனங்களை வெளியிட்ட போதும், தமிழ்நாட்டின் நலம், தமிழர் நலம் என்று வருகிறபோது இணைந்து நின்று போராடிய இன நல உணர்வை இந்த நூல் சுட்டிக் காட்டுகிறது.

‘தமிழரசுக் கட்சி’ என்று தொடங்கி, திராவிடர் இயக்கக் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டு, பின்னாளில் கழக ஆட்சிகளால் ‘வாழ்நாள் பயன்களைப்’ பெற்றுக் கொண்ட மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் (எ) ம.பொ.சி., 1951ஆம் ஆண்டில், ஆண்டு முழுவதும் தனது வேலைத் திட்டமாக திராவிடரியக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியவர் ஆவார்.

இவர், மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்படு வதற்கான அறிவிப்புகள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையிலே, திருத்தணி உள்ளிட்ட வடக்கெல்லைப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டும் எனப் போராட்டங்களை நடத்தி வந்தார்.

‘இந்தியாவிற்குள் தானே எல்லாம் இருக்கிறது. இதற்கெல்லாம் போராட்டமா?’ என எரிச்சலடைந்த அன்றையப் பிரதமர் நேரு, தமிழ்நாட்டு மக்களின் இந்தப் போர்க் குணத்தை

அவமதிக்கின்ற வகையில் 'அறிவிலிகள்' என்று கடுமையாக 'அர்ச்சித்து' விட்டார்.

திராவிடரியக்க எதிர்ப்பாளர்தானே ம.பொ.சி. என்று பெரியாரும், அண்ணாவும் அமைதி காத்து விடவில்லை; வெகுண்டெழுந்தனர். 'விடுதலை' ஏட்டில் கண்டனம் தெரிவிக்கின்றார் பெரியார்.

தி.மு.கழகமோ, அப்போது குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த இராஜகோபாலாச்சாரியாரை எதிர்த்தும், டால்மியாபுரம் எனும் வடவரின் இரயில் நிலையப் பெயரை 'கல்லக்குடி' என மாற்றக் கோரிய போராட்டத்தையும் அறிவித்த நிலையில், பிரதமர் நேருவின் 'நான்சென்ஸ்' என்ற துடுக்குத்தனத்தைக் கண்டிக்கின்ற வகையில் 1953 ஜூலை 15ஆம் நாள், ஒரு நாள் இரயில் நிறுத்தப் போராட்டத்தையும் இணைத்து 'மும்முனைப் போராட்டம்' நடத்தியது; தமிழர் எனும் இனநலப் பார்வையால்!

திராவிடர் கழகத்தோடு, தி.மு.கழகம் கருத்து வேறுபாடு கொண்டிருந்த நிலையில், 1957ஆம் ஆண்டு, நவம்பர் 26இல் 'சாதி தீண்டாமையைப் பாதுகாக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தீ வைத்துக் கொளுத்தி, தந்தை பெரியாரும், அவர்தம் தொண்டர்களும் சிறை புகுந்திருந்தனர்.

இதனைக் கண்டு ஆத்திரத்தின் உச்சத்திற்குச் சென்ற பிரதமர் நேரு, நிலை தடுமாறி 'பைத்தியக்காரத்தனம்; இந்த நாட்டில் இருக்க முடியாவிட்டால் மூட்டையைக் கட்டிக் கொண்டு வெளியேறட்டும்' என்றெல்லாம் தந்தை பெரியார் மீது வசை மாரிப் பொழிந்து தள்ளி விட்டார்.

இப்படி, தந்தை பெரியாரை, தமிழகத் தலைவர்களைத் தொடர்ச்சியாக அவமதித்து வந்த பிரதமர் நேரு, சென்னை வந்தபோது 1958ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் நாள், 20000க்கும் மேற்பட்ட தமிழர்கள், தி.மு.கழகத்தினர் ஒன்று கூடி, கருப்புக் கொடி காட்டி, தெரிவித்த எதிர்ப்பு நேருவை அதிர்ச்சியடையச் செய்தது.

இவ்வகையில், தமிழ்நாட்டின் நலம், தமிழர் இன நலம் என்று வருகிறபோது கருத்து வேறுபாடுகள் இருந்த போதும் நம் தலைவர்கள் ஒன்றுபட்டுப் போராடிய வரலாற்றுச் செய்திகளைச் சுட்டிக்காட்டி, அந்த நிலைப்பாட்டையே நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் தோழர் கொளத்தூர் மணி.

அய்ம்பது ஆண்டுகால திராவிடரியக்க ஆட்சியில் தமிழ்நாடு வீழ்ச்சியடைந்துள்ளது எனப் பிதற்றும் கூட்டத்திற்குக் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் எத்தகைய உயர்ந்த நிலையை எட்டியுள்ளது என்பதை, நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியாசென் போன்றோரின் ஆய்வு முடிவுகளைப் புள்ளி விவரங்களுடன், தரவுகளை எடுத்து வைத்து விளக்குகிறது இந்த நூல்.

"தமிழ்த் தேசியர்கள் எனும் போர்வையில், திராவிடரியக்கக் கோட்பாட்டை, ஏதோ திராவிடம் என்பது தெலுங்கர்களுக்கும், கன்னடர்களுக்கும், மலையாளிகளுக்கும் வால்பிடிக்கும் ஒன்று" எனக் கூவித் திரிபவர்களுக்கு ஆப்பு வைக்கும் வகையில், "இலங்கையில் வாழ்கிற திராவிடர்களாகிய நாங்கள்" எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட சர்வதேச மாநாட்டுக்கான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதையும், படை மரபியல் ஆய்வறிஞர் தாராக்கி சிவராம், 'திராவிட மரபியலிலிருந்து வந்த தமிழ்த் தேசிய உணர்வோடு போராடுபவர்கள் புலிகள்' என்றும், உலகறிந்த தமிழ்ப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, 'திராவிடம் என்பது ஆரியத்தின் எதிர் நிலையாகக் கருத்தில் கொள்ளப்பட்டது; அது ஆரிய ஆதிக்கத்திற்கு எதிரான சொல்; இலங்கையின் தமிழ்த் தேசிய உணர்வு உருவாக்கத்தில் திராவிடரியக்கத்தின், பெரியாரின் செல்வாக்கு மிகக் கணிசமானதாகும்' என்றும் எடுத்துரைத்திருப்பதை ஆவண ஆதாரங்களுடன் இந்நூல் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

நிறைவாக, நீதிக்கட்சி, அதன் நீட்சியாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகம், அதன் தலைவராக கலைஞர் விளங்கிய காலம் வரையிலான திராவிடரியக்கச் சாதனைகளை நிரல்பட தொகுத்துக் காட்டியிருக்கும் கொளத்தூர் மணி அவர்களின் உரை தாங்கிய 'கருஞ்சட்டைக் கலைஞர்' எனும் இந்நூல், தமிழின இளைஞர்கள் தங்கள் கைகளில் ஏந்த வேண்டிய குறுவாளாகத் திகழ்கிறது!

- 'ஆதிரை'

அண்ணா நேருக்குநேர்
நடத்திய சொற்போர்

# ஆரிய இராமனை ‘கற்புக்கரசனாக்கிய’ கம்பன்




1943, 1948ஆம் ஆண்டு “இராமாயணம், பெரியபுராணம் எரிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா?” எனும் தலைப்பில் நேருக்கு நேர் விவாதங்கள் நடந்தன என்ற வரலாறு – இன்றைய இளைய தலைமுறை பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை. எரிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டு வாதத்தில் வென்று காட்டினார் அண்ணா. முதல் வாதப் போர் 9.2.1943 அன்று சென்னை சட்டக்கல்லூரியில் இந்து மத பரிபாலன வாரியத் தலைவர் என். இராமச்சந்திர செட்டியார் தலைமையில் நிகழ்ந்தது. “எரிக்கப்பட வேண்டும்” என்ற தலைப்பில் அண்ணா மற்றும் ஈழத்தடிகளும், “எரிக்கக் கூடாது” என்ற தலைப்பில் ஆர்.பி. சேதுப் பிள்ளை மற்றும் சீனிவாசன் ஆகியோரும் வாதிட்டனர். அப்போது சட்டக் கல்லூரி, தமிழ்க் கழக அமைச்சராக இருந்து பிறகு உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்த வேணுகோபால்தான் அன்று தலைவரை முன்மொழிந்து பேசியவர். தொடர்ந்து 14.3.1943இல் இதே தலைப்பில சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கர் பாடசாலை மண்டபத்தில் இதே விவாதப்போர் நடந்தது. இதில் அண்ணாவும் நாவலர் சோம சுந்தர பாரதியாரும் நேருக்கு நேர் வாதிட்டனர். இரு தரப்பு வாதங்களும் தொகுக்கப்பட்டு ‘தீ பரவட்டும்’ என்ற தலைப்பில் நூலாக வெளி வந்திருக்கிறது. அண்ணாவின் தர்க்கபூர்வ வாதங்களுக்கு முன் பழமையாளர் வாதங்கள் தோற்றோடின. அண்ணா எடுத்துரைத்த வாதங்களிலிருந்து சில தேர்வு செய்யப்பட்ட பகுதிகளை ‘நிமிர்வோம்’ வெளியிடுகிறது.

கம்பரோ? தாம் இராமாயணம் எழுதியதற்கு நோக்கம் கூறாது, நொந்த மனம் கொண்டு, வையகம் என்னை இகழுமோ? மாசு வந்து எய்துமோ? என்று கூறுகிறார். ஆண்டவனின் அவதாரம் என்று ஆரியராலும், கம்பராலும் போற்றப்படும் இராமகாதை பாடுவதற்குக் கம்பர் ஏன் இவ்வளவு சஞ்சலப்படுகிறார்? இதனால் உலகு பழிக்குமோ, என்ற சந்தேகம் ஏன் கொண்டார்? என்று கேட்கிறேன். ஆரியக் காதையைப் பாடுவது கூடாது என்பதையும், அதற்குப் பூச்சுவேலை செய்து வைப்பது தமிழருக்குத் தீங்காகும் என்பதையும் ஒருவாறு உணர்ந்தே, இங்ஙனம் உரைத்தாரோ என்று கேட்கிறேன்.

இற்றைக்கு 700 ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட கம்ப இராமாயணத்தையே மக்கள் பெரிதும் அறிவர்; போற்றுவர். அதற்குக் காரணம், அதிலே உள்ள ஆரிய நெறி, தமிழ் மக்களை அடிமைப்படுத்தியதுதான். கம்ப இராமா யணத்திலே, சங்க நூற்களிலே காணப்படும் அணிகளும் அலங்காரங்களும் உவமைகளும் நிரம்ப உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. குறள் நன்றாக நுழைக்கப்பட்டிருக்கிறது. கம்ப இராமாயணக் கவிச்சுவை என்று எதைப் பண்டிதர்கள் எடுத்துரைக்கிறார்களோ, அவை கம்பனின் சொந்தச் சரக்குமல்ல; சங்க நூற்கள் தந்த சுவை! அந்த மூலத்தை இழக்கும்படி நாங்கள் கூறவில்லை. அந்தச் சுவையை ஓர் ஆரியக் கற்பனைக்குப் பயன்படுத்தியதால், அக்கற்பனை யின் விளைவு கேடு தருவதால், அந்த ஏடு வேண்டாம் என்று கூறுகிறோம்.

அரசு போவதறிந்து இராமனின் முகம் கோணியதை வால்மீகி கூறினார். கம்பர் மெழுகினார். இராமனாவது தந்தை சொல்லால், சிற்றன்னை கொடுமையால் அரசு துறந்தான். இளங்கோ அடிகளோ தாமாகவே மனமுவந்து அரசு துறந்தார் - இது உண்மைத் தியாகம்.

எனவேதான், மக்களின் பொது அறிவு வளர்ந்த நாடுகளில் தெளிவு கொண்ட மக்கள் உள்ள தேசங்களில் இத்தகைய கற்பனைக் கதைகள் இருப்பினும் கவியழகை மட்டும் கண்டு கருத் துரையிலே உள்ள ஆபாசத்தை, மூடத்தனத்தை நீக்குகின்றனர். கிரேக்க உரோமானியர்கள் இதிகாச காலக் கடவுள்களாகக் கொண்டிருந்த 'வீனஸ்' அபாலோ முதலியனவற்றை, ஏசுவிடம் விசுவாசம் வைத்ததும் விட்டொழித்தனர். பிரிட்டனிலே கிறித்தவ மார்க்கம் பரவியதும், பழங்காலத்திலே வணங்கிய தார் ஒடின் எனும் தெய்வங்களை மறந்தனர். இங்கோ அன்று தொட்டு இன்று வரை, ஆரியக் கற்பனையான சிறு தெய்வங்களிலே ஒன்றை நீக்கவும், மக்கள் தயாரில்லை. இந்நிலை கண்டு, புலவர்கள் என் செய்தனர் என்று கேட்கிறேன். ஆரியர், தம் இன வளத்துக்காக வேண்டிப் புனைந்து கொண்ட கற்பனைகளை எல்லாம், கடவுளெனக் கொண்டுள்ள மக்களின் மதியைத் திருத்த முன் வந்தனரா என்று கேட்கிறேன்.

காடேக இராமன் கிளம்பும்போது, உடன் வர புறப்பட்ட சீதையுடன் வாதிடுகையில், சீதை கூறும் மொழியின் தன்மையும், இலக்குவன், கைகேயியை நிந்திக்கும் பகுதியையும், சீதையை இராவணன் எடுத்துச் சென்ற விதத்தையும் வால்மீகி கூறி உள்ளபடியே கம்பர் எடுத்து எழுதியிருப்பின் அந்த ஆரியப் பாத்திரங்களிடம் ஆபாச குணங்கள் கிடந்ததை, தமிழர் கண்ட அவர்களைத் தெய்வங்கள் என்று போற்றும் கீழ் நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். ஆனால், கம்பரோ ஆரிய இராமனைக் குற்றம் குறையற்ற கற்புத்திரனாக்கி வழிபாட்டிற்கு உரிய தெய்வ மாக்கி விட்டார்.

இராமனும், குகனும் கண்டவுன் நட்புக் கொண் டனர். குகன் இராமனுடைய எல்லையினன். ஆனால், கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் காணாமலேயே நட்பு கொண்டு உயிர் துறந்தனர்.

- வாலியை மறைந்திருந்து கொன்றது.
- சூத்திரன் சம்புகன் தவம்செய்தான் என்பதற்காக அவன் தலையைக் கொய்தது.
- இராமன் அரசு தனக்குச் சொந்த மானதல்ல. பரதனுக்குச் சொந்தமானது எனத் தெரிந்தும் தசரதர் தனக்கு முடிசூட்டு விழா வைத்ததை ஒப்புக் கொண்டு இராச்சியம் ஆள இசைந்தது இவை கொடுஞ் செயல்கள்.

தமிழரோ ஆரிய மார்க்கத்தையும், கலையையும் தமக்கெனக் கருதிக் கொண்டு, ஆரியக் கற்பனைகளைத் தமிழ்க் கலையிலே கலக்கிக் கொண்டதனாலேயே இன்று, தமிழர் என்ற தனி உரிமைக்கோ, தன்மானத்துக்கோ, தன்னரசுக்கோ, போரிட முடியாத நிலை பெற்றனர். எனவே, தமிழரும், இஸ்லாமியர் போலவே, தங்களின் தனிக் கலையைப் போற்றிப் பிற இனக் கலையை ஒழித்து வாழ்ந்தால் தான் சுயமரியாதையுடன் வாழ முடியும். ஆகவேதான் கம்ப இராமாயணம் பெரிய புராணம் ஆகிய ஆரிய நெறி கூறும் ஏடுகள் பொசுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம்.

கம்பரது கவிதையின் விளைவாகத் தமிழ் இனம் தாழ்ச்சியுற்று, ஆரியத்திடம் அடிமைப்படும் விளைவு நேரிட்டதைக் கண்டு நாங்கள் வேதனைப்படுகிறோம். நாங்கள் கண்டிப்பது கம்பனின் கவித் திறனையல்ல; அதன் தன்மையை, விளைவை என்பதை, அறிஞர்கள் அறிய வேண்டுகிறேன். கம்பர், இராமகாதை பாடியதன் நோக்கம் யாது? என்று கேட்கிறேன்.

கம்பர் இராமகாதை எழுதியதால்தான், இமயம் வரை சென்று ஜெயித்த செங்குட்டுவனையும், பர்மா வரை சென்று புகழ்ப் பெற்ற இராசேந்திரனையும் தமிழர் மறந்தனர். அயோத்தி மன்னனின் மகன், ஆண்டவன் அவதாரம் என்றுரைக்கும் ஆரியத்துக்கு அடிமையாயினர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே, சமற்கிருத பண்டிதராக உள்ளவர் ஒரு தமிழர். இராவணனும் வடமொழி தெரிந்திருந்ததால், ஆரியனல்லன் என்றார். ஆர்.பி. சேதுப் பிள்ளை அவர்கள் ஆரியரின் குறைகளை நிறைவாக்கியது கம்பனின் பெருந்தன்மை என்றார். மாற்றுக் குறைந்த உலோகத்தைப் பொன்மெருகிட்டு ஏய்ப்பது, சட்டப்படி குற்றமாகும். அதுபோலவே ஆரியக் கற்பனைகளைத் தமிழ்க் கலை எனும் நகாசு வேலை செய்தது, தமிழருக்குக் கம்பர் செய்த கேடு என்பேன். கண்ணகியின் மாண்பைக் கம்பன் சீதையைத் தீட்டுவதிலே காண்கிறோம் என்கிறார். கண்ணகி குறித்த ஏடு இருக்க இது ஏன்? என்று கேட்கிறேன்.

இராவணன் சீதையை எடுத்துச் சென்றது, காமச் செயல் என்றன்றோ இன்றும் கூறுகின்றனர். அக்காலப் போர் முறையிலே, ஆநிரை கவர்தல், மாதரை எடுத்தல், கோட்டை தாக்குதல் என்பன முறைகள். ஆகையால் இராமனைப் போருக் கிழுக்கத் தன் தங்கையை மானபங்கம்செய்த பின்னர் போருக்கிழுக்க, அந்தச் சமயத்திலே இராமனிடம் எஞ்சியிருந்த விலை மதிக்கக் கூடிய பொருள் சீதை மட்டுமேயாகையால், சீதையை எடுத்துச் சென்றான் என்ற உண்மையை உரைக்கலாகாதா?

கம்ப இராமாயணம், பெரிய புராணம் ஆகியவற்றைக் கொளுத்த வேண்டும் என்று எம் தலைவர் ஈ.வெ. இராமசாமி கூறியது கண்டு, மக்களுக்குக் கோபம் வருவது இயற்கை என்று அமைச்சர் உரைத்தார். உண்மை, மக்கள் கோபிப்பர் என்பதை நாங்களறிவோம். நாங்கள் தொடங்கிய எக்காரியத்துக்கும், நாங்கள் புகுத்திய எக்கருத்துக்கும் எதிர்ப்பு ஏற்பட்டு, மக்கள் கோபித் துப் பின்னர் எம்முடன் சேர்ந்து எமது பாசறை களுக்கு வந்துற்றனர் என்பதை அவர் அறிய வேண்டுகிறேன் என்று வாதிட்டார் அண்ணா.

**நாம் ஏன் இந்து அல்ல என்று கூறுகிறோம்?**
**('திராவிட நாடு' இதழில் எழுதியது)**

• செல்வம் படைத்தவர்கள், உழைப்பால் பணம் சேர்ந்தவர்கள், ஏதோ தங்கள் முயற்சியினால் பணம் கிடைத்தது என்று எண்ணாமல் எங்கள் (கடவுள்கள்) அருளால் கிடைத்தது என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையின் காரணமாகக் கோயிலுக்கும், கும்பாபிசேகத்திற்கும், கடைக்கும், தேருக்கும் பணத்தைச் செலவிட்டு, பஞ்சத்தையும், பட்டினியையும், பட்டினியால் பிணமாகும் சோகத்தையும் கண்டாலும், கடவுளே! என்று கூறி சும்மா இருந்து விடுகிறார்கள். எங்களுக்காக அவர்கள் செலவு செய்வதை ஏழ்மையைப் போக்கச் செலவிட்டால் எழுபது பேர் இப்படி (பசி பட்டினியால்) செத்திருக்க முடியுமா?

தங்கக் குடையில்லாததால் வேங்கடேசன் வெயிலில் வாடியா போனான்? தரித்திரம் நெருப்பை விடக் கொடியதாயிற்றே, அதனின்றும் இந்த ஏழைகளைக் காப்பாற்ற அந்தக் கொடையாளி முன் வந்திருக்கலாமே, வேங்கடேசுவரர் இல்லாதிருந்தால்! மற்ற சீமைகளிலே ஒரே தெய்வம், அதற்காக செலவு மட்டு. இங்கோ நாங்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கு எங்களுக்கே தெரியாது. எங்களைத் திருப்திபடுத்த, தயவு பெற பணம் செலவிட்ட பிறகு, சீமான்கள் அலுத்துப் போவதுகூட சகஜம். இந்தச் செலவு இல்லாவிட்டால், அவர்கள் பணத்தை ஏழைகளுக்கு இதம் தேடச் செலவிடு வார்கள்.

'திராவிட நாடு' (11.7.1943)

• நாலு தலைச் சாமிகள், மூன்று கண் சாமிகள், மூன்று தலைச் சாமிகள், ஆயிரம் கண் சாமி, ஆறுதலைச் சாமி, ஆனை முகச்சாமி, ஆழிவாய்ச்சாமி, பருந்தேறும் சாமி, காளை ஏறும் கடவுள், காக்கை மீது பறக்கும் கடவுள், தலை மீது தையலைத் தாங்கி நிற்கும் தெய்வம், ரிஷி பத்தினிகளிடம் சுகமனுபவிக்க நடுநிசியில் போகும் தெய்வம் என்று புராண அட்டவணை களிலே உள்ளனவே! நாம் இந்து என்று கூறிக் கொண்டால், இவைகளை நமது தெய்வங்கள் என்று ஒப்புக் கொண்டு தொழ வேண்டுமே. இந்தச் சேதியைக் கேட்டால், உலக நாகரிக மக்கள் நம்மை நீக்ரோக்களைவிடக் கேவலமானவர்கள் என்று கேலி செய்வார்களே! இந்தக் கண்ணறாவிக்கு என்ன செய்வது? இத்தகைய ஆபாசத்தை நம் தலையில் தூக்கிப் போட்டுக் கொள்ள, நமக்கு மனம் எப்படித் துணியும்? ஆகவேதான், நாம் இந்து அல்லவென்று கூறுகிறோம்.

நமக்கு நாலு, ஆறு, நாற்பத்தெட்டுக் கண் படைத்த கடவுள்கள் வேண்டாம். நமக்கு ஒரே ஆண்டவன் போதும். உருவமற்ற தேவன்! ஊண் வேண்டாத சாமி! ஊரார் காசைக் கரியாக்கும் உற்சவம் கேட்காத சாமி! ஆடல் பாடல், அலங்கா ராதிகள், அப்பம், பாயசம் அக்காரவடிசல் கேட்காத சாமி! அங்கே, இங்கே என்று ஆளுக்கு ஆள் இடத்தைப் பிரித்து வைக்காத சாமி! அர்ச்சனை உண்டியல் என்று கூறி, அக்கிரகாரத்தைக் கொழுக்க வைக்காத சாமி இருந்தால் போதும், நம்மிடத்திலிருந்து "தியானத்தைப்" பெறட்டும், அருளைத் தரட்டும்; நம்மிடத்திலிருந்து தட்சணை பெற்றுத் தர்ப்பாசூரர்களுக்குத் தானம் தரும் தேவதைகள் நமக்கு வேண்டாம் என்பதை உறுதிப்படுத்தவே, நாம் நம்மை இந்து அல்ல என்று கூறுகிறோம்.

ஆள் நடமாட ஒரு உலகம், ஆவி உலவ மற்றோர் உலகம், இந்திரன் இருக்க ஒரு உலகம், நாகன் தங்க ஒரு உலகம், மேலே ஏழு, கீழே ஏழு எனப் பதினான்கு உலகங்களாம்! அதல, விதல,

சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதாளம் என ஏழாம்! பூலோக, புவலோக, சுவலோக, சனலோக, தபோலோக, மகாலோக, சத்தியலோகம் என மேல் உலகம் ஏழாம்! இத்தனை உலகங்கள் இந்துவுக்கு உண்டு ஏட்டிலே. நமக்கு இவை வேண்டாம்; நாமிருக்கும் நாடு நமக்கு இருந்தால் போதும்; நன்செயும் புன்செயும், சாலையும் சோலையும், வாவியும், நீரோடையும், நதியும், மக்களும் சுபீட்சமும் இருக்கட்டும். காம தேனுவும் கற்பகவிருட்சமும், ரம்பையும் ஊர்வசியும் இருக்கிற உலகத்திலே, டாக்டர் வரதராஜுலுவே உலவட்டும்! முடி சூட்டிக் கொள்ளட்டும்! **நாமிருக்கும் நாட்டிலே நமது உழைப்பு நமக்குப் பயன்பட்டு, நாலு ஜாதியிலே நாம் கீழ்ஜாதி என்று கொடுமை இன்றி, நாமார்க்குங் குடியல்லோம் என்று நாம் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தினால் தான், நாம் நம்மை இந்து அல்ல என்று கூறிக் கொள்கிறோம்.**

நாம் யாருக்கும் மேல் அல்ல, யாரும் நமக்கு மேலோர் அல்ல! நாம் ஆள ஆட்கள் வேண்டாம்! நம்மை ஆளவும் அய்யர்மார் வேண்டாம்! நம்மிடையே தரகர் கூடாது, தர்ப்பை ஆகாது. சேரியும் கூடாது. அக்கிரகாரமும் ஆகாது. யோக, யாகப் புரட்டுகள், மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று கூறுபவர் எப்படித் தம்மை "இந்து" என்று கூறிக்கொள்ள முடியும்? மூட மதிக்காரர், கொடுமைக்காரர், அடிமை, சூத்திரன் என்று கூறிக்கொள்ள எப்படித் தான் மனம் இடந்தரும்? எப்படித்தான் துணியும்? இந்து மதம் என்பதிலே உள்ள கடவுள் முறை, சமுதாய முறை, மதக்கதை முறை, மக்கள் வாழ்க்கை முறை ஆகியவைகளை அலசிப் பார்த்தபிறகு யாருக்குத் தான் தன்னை ஓர் "இந்து" என்று கூறிக்கொள்ள மனம் இடம்தரும் ? .....

...... தென்னிந்தியாவில் உள்ள முகமதிய மதம், கிறிஸ்தவ மதம் போக இந்த ஜனங்கள் எந்த மதம் என்று கேட்கிறோம். அவர் எல்லோரும் வேதத்தை ஆதார முறையாகப் பின்பற்றுவார்கள் என்று சொல்ல முடியாது. பிராமணர்கள்கூட பழக்கங்களில் வேதாகமங்கள்படி நடப்பதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியிருக்க எல்லோருக்கும் பொதுவான மதம் என்று சொல்ல எப்படித் துணிந்தாய்?

'திராவிட நாடு' (26.9.1943)

- ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்திற்று என்ற ஆராய்ச்சி வரலாறாயிற்று. இயற்கை இன்பத்தை நுகர்ந்து, வீரத்தை வணங்கி, அறத்தை ஓம்பி வாழ்ந்த திராவிடரிடையே, கட்டுக் கதைகளைப் புகுத்திக் கோழைத்தனத்தை வளர்த்தவர் ஆரியரே என்பதும், ஆரியக் கோட்பாடுகள் புகா வண்ணம் திராவிடர் அறிவுத் துறையிலேயே ஆர்வம் கொண்டிருந்தார்களே அல்லாமல், கண்ணுக்குப் புலனாகாததும், கருத்துக்கு எட்டாததும், வாதத்திற்குக் கட்டுப் படாததும், பிரத்யட்சம் பிரமாணத்துக்கு ஒத்து வராததுமான கொள்கைகளிலே மூழ்கிக் கிடக்க வில்லை என்பதும், பிறகு ஆராய்ச்சியாளர்களால் விளக்கப்பட்டது. ஆனால், இவையாவும் பிரேத விசாரணையாகக் கருதப்பட்டதே அல்லாமல், வீழ்ச்சியுற்ற இனத்திற்குத் திருப்பள்ளி எழுச்சியாக உபயோகிக்கப்பட வில்லை.

'திராவிட நாடு' 26.9.1943

இந்தக் கடவுள்கள் இப்படிச் செய்தால்!

- விண்ணிலே எதிரி விமானங்கள் வட்ட மிட்டால், விநாயகர் தமது துதிக்கையால் அவற்றை துவம்சம் செய்யலாமே!
- எதிரி விமானங்கள், நம் நாட்டின் மீது படை யெடுத்து வந்தால், விமான அறிவிப்புக்காகத் தமது பாஞ்சான்யம் எனும் சங்கினை மகாவிஷ்ணு ஊதலாம்!
- எதிரி நாடுகளான ஜெர்மனியையும், ஜப்பானையும், பரமசிவம் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து தீப்பொறி கிளப்பி, பொசுக்கித் தள்ளலாம்! புராணங்களில், இக்கடவுள்களைப் பற்றிக் கூறுவதைப் பார்த்தால், இதுவும் செய்யலாம் இதற்கு மேலும் செய்யலாம்!

ஆனால், நடப்பது என்ன? கோயில்களிலே கொலு வீற்றுக் கொண்டு கோலாகலமாக இக்கடவுள்கள் உள்ளன!

சக்தி உண்டா? இல்லையா? இருந்தும் பயன்படுத்தவில்லையா?

சக்தியில்லையென்றால், இக்கடவுளுக்கு இங்கு இவ்வளவு வைபவங்கள் ஏன்? பக்தர்கள் கூறுவார்களா?

'திராவிட நாடு' 3.10.1943
(டாக்டர் அண்ணா பரிமளம் தொகுத்த 'அண்ணாவின் பகுத்தறிவுக் களஞ்சியம்' நூலிலிருந்து)
(சிந்தனைகள் தொடரும்)

*பெரியார் நீண்ட நெடுங்காலம் பண்பாட்டுத் தளத்திலேயே வேலை செய்தவர். அண்ணா ஒரு கட்டத்துக்கு மேல் அரசியல் நோக்கி நகர்ந்தவர் என்பதால் அண்ணாவை விடவும் பெரியாரின் பெண்ணியப் பார்வை மிக அதிகமாகக் கவனம் பெறுகிறது. பெரியார் அளவுக்கான வெளி அண்ணாவுக்குக் கிடைக்கவில்லை என்றபோதும், கிடைத்த தளத்தில் பெண் விடுதலைக்காக அவர் குரல் கொடுக்கத் தவறவில்லை.*

# பெண்ணுரிமை பேசிய அண்ணாவின் படைப்புகள்



அக்டோபர் 10, 1950இல் இந்திய நல்லெண்ணத் தூதுக் குழு பேரறிஞர் அண்ணாவைச் சந்தித்தது. அந்தச் சந்திப்பின் போது தூதுக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ராகவதாஸ், திராவிட நாட்டில் பார்ப்பனர்களின் நிலை என்னவாக இருக்கும் என்ற கேள்வியை முன்வைக்கிறார். சற்றும் தாமதிக்காமல் அண்ணா சொல்கிறார், “மனித உரிமையோடு வாழ்வார்கள்” என்று.

அண்ணாவின் ஒட்டுமொத்த வாழ்வை ஒரே வரியில் அடக்க வேண்டுமானால் மேற்சொன்ன பதிலில் அடக்கலாம். தன்னளவில் முரண்பட்டு, காலமெல்லாம் தான் எதிர்த்துப் போராடும் தத்துவத்தைப் பின்பற்றுபவர்களும் மனித உரிமையோடு வாழ வேண்டும் என்று நினைத்தவர் அவர். அவரது 50-வது ஆண்டு நினைவு நாளையொட்டி (பிப்ரவரி 3) பெண்களுக்காக அவர் முன்னெடுத்தவற்றை நினைவுகூர்வது பொருத்தமாக அமையும்.

எதிரிகளுக்குமான சமத்துவம் பற்றிப் பேசிய அண்ணா, தான் ஏற்றுக்கொண்ட அரசியல் தத்துவத்தின் முதன்மை அங்கமான பெண்களுக்கான சமத்துவம் பற்றிப் பேசாமல் இருந்திருக்க மாட்டார். அனைத்துத் தளங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலினச் சமத்துவமின்மை நிலவி வந்த நிலையில், பண்பாடு சார்ந்தே பெண்கள் மிகக் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அதனால், அவற்றிலிருந்து வெளியேறுவதற்கான வாதங்களே மிகப் பிரதானமாக தேவைப்பட்ட காலம் அது.

பெரியார் நீண்ட நெடுங்காலம் பண்பாட்டுத் தளத்திலேயே வேலை செய்தவர். அண்ணா ஒரு கட்டத்துக்கு மேல் அரசியல் நோக்கி நகர்ந்தவர் என்பதால் அண்ணாவை விடவும் பெரியாரின் பெண்ணியப் பார்வை மிக அதிகமாகக் கவனம் பெறுகிறது. பெரியார் அளவுக்கான வெளி அண்ணாவுக்குக் கிடைக்கவில்லை என்றபோதும், கிடைத்த தளத்தில் பெண் விடுதலைக்காக அவர் குரல் கொடுக்கத் தவறவில்லை.

சாதி அமைப்பில் நிலவிய பாகுபாடுகள், அதன் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது சாதி அமைப்பு செலுத்திய தாக்கங்கள், குடும்ப அமைப்பில் பெண்களுக்கென்றே விதிக்கப்பட்ட பிரத்யேகக் கட்டுப்பாடுகள், அவற்றின் விளைவுகள், மதத்தின் பெயராலும் மூடநம்பிக்கைகளின் பெயராலும் பெண்கள் மீது செலுத்தப்பட்ட அதிகாரம் உள்ளிட்ட எல்லா வகையான அதிகாரங்களையும் கேள்விக்குட்படுத்தின அண்ணாவின் படைப்புகள்.

கதைகள், புதினங்கள், நாடகங்கள் உள்ளிட்ட புனைவு சார்ந்த படைப்புகளின் வழியேயும் அவர் பெண்ணியம் பேசினார். பெரியாரின் கருத்துகளில் இருந்த கொதிநிலையை இலக்கியத்தின் வழியே ஆறவைத்து, மக்களுக்கு அத்தகு தீவிரப் பார்வைகளின் தேவையை உணர்த்தினார்.

நேரடியாகப் பெண்களின் வாழ்வையே மையமாக வைத்து எழுதப்பட்டவை, வேறு கதைக்கருவை மையப்படுத்தி எழுதப் பட்டவையின் ஊடாகப் பெண்கள் வாழ்வைப் பதிவுசெய்தவை என்று இரண்டு பிரிவாக அவருடைய இலக்கியங்களைப் பார்க்கலாம்.

‘திராவிட நாடு’ இதழில் ஜனவரி 1949-ல் வெளியான, ‘சுமங்கலி பூஜை’ என்னும் சிறுகதை செல்வந்தர் ஒருவர் பசுக்களைப் பாதுகாப்போம் என்ற போர்வையில் சொத்து சேர்க்க முற்படுவதைக் கருவாகக் கொண்டது. ஆனால், அந்தக் கதையில் இரண்டு செய்தி களை அறிய முடிகிறது. ஒன்று, செல்வந்தனானாலும் சரி, ஏழ்மையில் இருப்பவனானாலும் சரி ஆண்களுக்குச் சமமான இடத்தில் அவர்களின் மனைவிகள் இருப்பதில்லை.

அடுத்தது, பக்தி சார்ந்த மக்களின் அறியாமையைப் பணமாக்கும் முயற்சியில்தான் செல்வந்தர் இறங்கியிருக்கிறார். இது இருபாலருக்கும் பொருந்தும் என்றாலும் வாரா வாரம் சுமங்கலி பூஜை நடத்துவதன் வழியாகப் பணத்தைச் சம்பாதிக்கலாம் என்ற அவருடைய எண்ணத்துக்குப் பெண்களின் பக்தியே பிரதான மூலதனமாக இருக்கிறது என்பதையும் அந்தக் கதை சொல்கிறது.

நவம்பர் 1947-ல் வெளியான, அண்ணாவின், ‘சாது’ சிறுகதையும் இவ்வகையிலானதே. பலம் பொருந்தி யோரிடம் அடங்கிப்போவதும் பலம் குன்றியோரை அடக்க நினைப்பதும் மானுட இயல்பு என்பதை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கதை எழுதப்பட்டது. வலிமை நிறைந்த ஓர் ஆண் தன் பலத்தை அல்லது கோபத்தைத் தன் மனைவியிடம் காட்டுகிறான்.

அந்த மனைவியோ தெருவோரம் தண்ணீர் பிடிக்கும் வலுவற்ற இன்னொரு பெண்ணிடம் தன்னுடைய கோபத்தைக் கொட்டுகிறாள். ஆக, கோபத்தை வெளிப்படுத்தும் வலு இருந்தும் அங்கே பாலினம் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கிறது என்பதை உணர்த்தும் கதை இது.

1939-ல் குடி அரசு இதழில் வெளியான, ‘தங்கத்தின் காதலன்’ என்ற சிறுகதை சாதியும் சொத்துரிமையும் ஒரு காதலை எப்படிப் பிரிக்கின்றன, அந்தப் பிரிவு ஒரு பெண்ணை எப்படிக் கொல்கிறது என்று நேரடியாகப் பெண்களின் வாழ்வை மையப்படுத்திப் பேசியது.

அண்ணாவின் பெண்ணியப் பார்வை அவலங்களை நயமாக அடையாளப்படுத்தும் பணியை மட்டும் செய்வதாகவும் அவை புரட்சிகர அடையாளங்களைப் பெண்களுக்கு வழங்குவதில்லை என்பது போன்றும் சில சிந்தனைகள் எழுக்கூடும். ஆனால், ‘பெய்யெனப் பெய்யும் மழை’, ‘பெண்ணினம் பேசுகிறது’ போன்ற கட்டுரைகள் அந்தச் சிந்தனையைச் சிதைக்கும் வலிமையுடையவை.

1947 அக்டோபர் 12-ல் வெளியான

‘பெய்யெனப் பெய்யும் மழை’ என்ற கட்டுரை, காலட்சேபம் கேட்டுவிட்டு வந்து மனைவிக்குக் கற்பு குறித்துப் பாடமெடுக்கும் கணவனை நோக்கி, “காசுக்குக் கதைசொல்லும் பேர்வழிக்குக் கற்புடைய மங்கையின் கடமை மட்டும்தான் தெரிந்ததோ? ஏன் கணவன் செய்ய வேண்டிய கடமை மறந்து போச்சுதோ?” என்று மனைவி கேட்பதாக அமைந்திருக்கும். வரையறுக்கப்பட்ட எல்லையை, உரிமை பெறுதலின் பொருட்டு உடைக்கும் புரட்சிகரப் பெண்ணின் அடையாளம் வெளிப்படும் இடம் இது.

“சிறையில் தள்ளுங்கள். கடுஞ்சிறையில் வாடுவது இந்தக் கிழவனுக்கு வாக்கப் படுவதைவிட எவ்வளவோ மேலானது” என்று தனக்கு விருப்பமற்ற திருமணத்தை எதிர்க்கும், 1949-ல் வெளியான, ‘பெண்ணினம் பேசுகிறது’ கட்டுரையில் வரும் பெண்ணும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் புரட்சிகரப் பெண்ணின் அடையாளம்தான்.

விதவைப் பெண்ணின் பாலியல் சார்ந்த அகவுணர்வும் சமூகம் அப்பெண்ணின் மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளும் ஒன்றையொன்று மீறும்போது நிகழும் சிக்கல்களை, 1945- ல் ‘திராவிட நாடு’ இதழில் வெளியான, ‘அவள் முடிவு’ என்ற கதை பேசுகிறது.

பாதிக்கப்பட்ட பெண் நீதி வழங்கும் இடத்தில் அமர்ந்தால் தான் சரியான நீதி கிடைக்கும் என்பதை ‘ரங்கோன் ராதா’ சொன்னது. ‘பார்வதி பி.ஏ.’, ‘கன்னி விதவையான கதை’ என்பன போன்று எண்ணற்ற படைப்புகள் பெண்களின் வாழ்வு குறித்தும் மீட்பு குறித்தும் கதைகளின் வழியே பேசின. இருக்கின்ற நிலை அடிமை நிலை, அது மாற வேண்டும் மாற்றப்பட வேண்டும் என்கிற எண்ணத்தை மக்கள் மனத்தில் குறிப்பாகப் பெண்கள் மனத்தில் அவை விதைத்தன.

அரசியல் தளத்தில் பெண்ணுரிமை பெரிதாகப் பிரதிபலிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே அண்ணா மறைந்துவிட்டார். அவர் அரசுப் பொறுப்பேற்ற காலத்தில் பொதுவான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான தேவையே அதிகமாக இருந்தது. குறிப்பிட்ட சமூக ஆதிக்கத்தைத் தகர்த்து அப்போதுதான் அதிகாரத்தைப் பரவலாக்கத் தொடங்கி யிருந்தார்கள். ஆகவே, அத்தகைய நெருக்கடியான சூழலில் பிரத்யேகத் திட்டங்கள் பெரிய அளவில் பெண்களுக்காகச் செயல்படுத்தவில்லை.

இவற்றையெல்லாம் தாண்டி அந்தக் காலச்சூழலுக்கு ஏற்ப கட்சியின் எல்லா நிலைகளிலும் பெண்களுக்கான வாய்ப்பை வழங்கியது, அன்னை சத்தியவாணி முத்துவைக் கொள்கை பரப்புச் செயலாளராக்கியது, பின்னாளில் அமைந்த தன்னுடைய கழக அரசில் அமைச்சராக்கியது, ஆண்டாண்டு கால வரலாற்றில் எல்லாப் பெண்களையும் சமமாகச் சபையில் பேச அனுமதித்தது, சுயமரியாதைத் திருமண முறைக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கியது, விதவை மணம் புரிந்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அவர் காலத்தில் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சிதான் தற்போதைய தமிழகத்தின் பெண்களின் நிலை.

அவ்வப்போது செய்தித்தாள்களில், நாட்டிலேயே அதிகப் பெண் தொழில் முனைவோரைக்கொண்ட மாநிலம் தமிழ்நாடு, பெண்கள் அதிகம் கல்வி பெறும் மாநிலங்களில் சிறப்பான இடத்தில் தமிழ்நாடு போன்ற செய்திகளை எல்லாம் படிக்கும்போது அண்ணா நினைவுக்கு வருகிறார். காரணம், திராவிட இயக்கத்துக்குப் பெண்களையும் உள்ளடக்கிய சமூக விடுதலை என்ற பெருங்கனவு இருந்தது. அந்தக் கனவை இலக்கு நோக்கிய திசைக்குத் திருப்பியவர் அண்ணா.

இன்று இலக்கை அடைந்து விடவில்லை என்றாலும் அந்தப் பாதையில் பயணம் செல்கிறார்கள். பயணத்தின் பாதையில் பொதுவான வளர்ச்சிக்காகவும் பிரத்யேகமாகப் பெண்களின் வளர்ச்சிக்காகவும் போடப்பட்ட திட்டங்களின் பலன்கள் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் அண்ணாதான் சிரிக்கிறார்.

நன்றி : ‘தமிழ் இந்து’ வார வெளியீடான ‘பெண் இன்று’

**அடுத்த இதழ்....**

**‘நிமிர்வோம்’ ஏப்ரல் மாத இதழ் – தேர்தல் சிறப்பிதழாக வெளிவரும்**

## *வாசகர்களிடமிருந்து...*




'**தி**ராவிடத்துக்கு முகவரி தந்த கால்டுவெல்' என்ற கவிஞர் வைரமுத்துவின் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்ட 'நிமிர்வோம்' இதழுக்கு நன்றி சொல்ல வேண்டும். கால்டுவெல் குறித்து சுருக்கமாக அவரது ஆழமான கருத்துகளை வெளிக்கொண்டு வந்துள்ள மிகச் சிறந்த கட்டுரை. திராவிடம் என்பதே ஆரியக் குறியீட்டுச் சொல் தான் என்று பேசி வரும் சில தமிழ்த் தேசியர்களுக்கு வைரமுத்து கட்டுரையின் கீழ்க்கண்ட பகுதி சரியான பதிலைத் தருகிறது.

''இலக்கிய இலக்கண புராண முற்கட்டுகளெல்லாம் திராவிடம் என்பதைத் தங்கள் **வசதிக்கேற்பப் பொருள் கட்ட**, கால்டுவெல் மட்டுமதான் திராவிடம் என்பது ஓர் இனக்குழு நாகரிகத்தின் மூத்த மொழிச் சுட்டு என்பதை **அறிவியல் அடிப்படையில்** மெய்ப்பித்தார்'' என்பது மிகச் சரியான விளக்கமாகும்.

**– சந்தோஷ், சேலம்**

**உ**யர்ஜாதியினருக்கு 10 சதவீத பொருளாதார இட ஒதுக்கீடு குறித்து இரா. மன்னர்மன்னன் கட்டுரை மிகச் சிறப்பு.

''கடந்த 2017இல் நடைபெற்ற நீட் தேர்வுகளில் ஒரு பாடத்தில் 9 மதிப்பெண்ணுக்கும் கீழான மதிப்பெண் பெற்ற சுமார் 400 மாணவர்கள் இப்போது தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். இவர்களில் சுமார் 100 பேர் 0 அல்லது நெகட்டிவ் மதிப்பெண் பெற்றவர்கள். அவர்களுடைய தரம் பற்றியாருக்கும் கவலை இல்லை. அவர்களுக்கு எதிராக யாரும் போராடவும் இல்லை. இதுவரை தரத்தின் பெயரால் இடஒதுக்கீட்டை மறுத்தவர்கள் இப்போது அதை ஏற்றுக் கொண்டு அதன் சாரத்தை சிதைக்கப் பார்க்கிறார்கள்'' என்பது மிகச் சிறப்பான கருத்து.


**– சங்கீதா, தேனி**

**அ**ண்ணாவின் வைதீகத்தை எதிர்க்கும் எழுத்துகளை 'நிமிர்வோம்' தொடர்ந்து வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது. இவை இளம் தலைமுறை அறிந்திடாதவை. திராவிடர் இயக்கம் எழுத்தாற்றலை – கலையை – கொள்கையைப் பரப்புவதற்கு எப்படி எல்லாம் செயல்பட்டிருக்கிறது என்பது வியப்பூட்டுகிறது.

**– ந. கண்மணி, திருவரங்கம்.**

'**சூ**த்திரர்' என்பதற்குப் பதிலாகத்தான் 'திராவிடர்' என்கிற பெயரைப் பயன்படுத்துகிறோம் என்று பெரியார் கூறியிருப்பது அருமையான விளக்கம்.

**– அருள், சென்னை**




'**நி**மிர்வோம்' ஜனவரி இதழில் வெளிவந்த 'திராவிட இயக்க வரலாற்றில் கருஞ்சட்டைப் படை' என்ற மா. செங்குட்டுவன் கட்டுரை – இளைய தலைமுறை அறிந்திட வேண்டிய செய்திகளை விளக்கியுள்ள சிறப்பான கட்டுரை. பெரியார்–அண்ணா–நடிகவேவள் ராதா போன்ற ஆளுமை களுக்கிடையே எழுந்த முரண்பாடு களையும் அது எவ்வாறு அகன்றது என்பதையும் நிதர்சனமாக படம் பிடித்துள்ளது கட்டுரை. கருத்து மாறுபாடுகளை நேர்மையோடு பதிவு செய்துள்ள 'நிமிர்வோம்' இதழைப் பாராட்ட வேண்டும்.

**– இராமச்சந்திரன், ஈரோடு–2**

'**ஆ**ரியர்களே பூர்வீகக் குடிகள் என்ற வரலாற்றுப் புரட்டுகள் தகர்கின்றன' என்ற 'நிமிர்வோம்' கட்டுரை வரலாற்று ஆய்வாளர்களுக்கு உதவிடும் கட்டுரை. உலகில் எந்த ஒரு நாட்டுக்கும் குடியேறியவர்கள் அந்நாட்டு நாகரிகம் பண்பாட்டைத் தழுவி நிற்பார்கள். மாறாக இங்கே நாடோடிகளாக வந்த ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் பண்பாட்டை சொந்த நாட்டு மக்கள் மீது திணித்து கற்பனை, கட்டுக்கதைகளை உருவாக்கி சொந்த நாட்டு மக்களை சூத்திரர்களாக்கி, ஊருக்கு வெளியே புறந்தள்ளினர். அரசர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து 'மனுதர்மத்தை' சமூகச் சட்டமாக்கி விட்டனர்.

அறிவார்ந்த கட்டுரைகளை நிமிர்வோம் வெளியிட்டு வருவது மகிழ்ச்சி. இதழுக்கு பாராட்டையும் போற்றுதலை யும் உரித்தாக்குகிறேன்.

**– மதலைமணி, பெங்களூர்**

# ‘இராமனை’ எரித்தத் தீயம்மா...!



அன்பின் அடைக்கலமே
தூய ஆற்றலின் பிறப்பிடமே
மாதர் போற்றும் மங்கையரான
மாசில்லாத மணியம்மையே

மங்கையர் உலகமே
நூற்றாண்டின் திலகமே
மதித்திடும் பெண்மையே
மணியான அம்மையே – அன்பின்

சிறுவயதிலே தொண்டுகள் செய்யும்
தொண்டராகவே நீயானாய்
சிறுபிள்ளையாக ஈவேராவை
கண்போல் காத்துத் தாயானாய்
ஏச்சையும் பேச்சையும் ஏற்றுக் கொண்டு
எல்லோர் நலனும் நீ காத்தாய்
எளிய உடையில் பவனி வந்துநீ
பகுத்தறிவினிலே நீ பூத்தாய்
– மங்கையர் உலகமே

ஈவேராவின் ஆயுட்காலத்தை
நீட்டித்தவளும் நீயம்மா
நீடில்லாத தியாகச் சுடராய்
ஈகை அளித்த தாயம்மா
இராவணலீலா நிகழ்விலேயே
இராமனை எரித்தத் தீயம்மா
இராவும் பகலும் இயக்கப் பணியை
இணைந்து செய்த மணியம்மா
– மங்கையர் உலகமே

சுயமரியாதைப் பிரச்சாரத்தை
சுற்றிச் சுற்றி செய்தவளே
அனைவரும் அர்ச்சக ராகஎண்ணியே
மறியல் கிளர்ச்சி செய்தவளே
இயக்க நூல்களை சுமந்து சென்று
பல இதயத்தில் சேர்த்தவளே
இந்த சமுகம் ஏற்றம்பெறவே
எறும்பாய் உழைத்துக் காத்தவளே
– மங்கையர் உலகமே

– ‘விரட்டு’ கலைக்குழுவைச் சார்ந்த
பாடகர் சித்திரைச் சேனன் எழுதி
இசையமைத்துப் பாடிய பாடல்

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN